விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com


Registered as a Newspaper in Srilanka

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 புரட்டாதி 22 செவ்வாய்க்கிழமை (08.10.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 293

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்குமா?

## முடிவு பிரதமரிடமே என்கிறார் குர்ஷித்



(புதுடில்லி)

கொழும்பில் நடக்கவிருக்கும் பொதுநலவாய தலைவர்களின் உச்சி மாநாட்டில் கலந்துகொள்வது குறித்து இந்தியப் பிரதமரே முடிவு செய்து அறிவிப்பார் என்று கொழும்பு வந்துள்ள இந்திய வெளியுறவுத்துறை அமைச்சரான சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## கைக்குண்டு மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கே.கேஸ் வீதி மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைக் கல்லூரிக்கு முன்பாக இருந்து வெடிக்காத நிலையில் கைக்குண்டு மீட்கப்பட்டதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக மேலும தெரியவருவது,

நேற்று திங்கட்கிழமை காலை 11 மணியளவில் மேற்படிப் பகுதியில் வீதியோரமாக கைக்குண்டு இருப்பது பொதுமக்களால் கண்டு பிடிக்கப்பட்டது. இவ்விடயம் தொடர்பாக அப்பகுதியில் உள்ள இராணுவ முகாமிற்கு அறிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு வந்த இராணுவத்தினர் வீதியில் வெடிக்காத நிலையில் இருந்த கைக் குண்டினை இனங்கண்டு 20-ம் பக்கம் பார்க்க

# வடக்கின் முதலாவது முதலமைச்சர் ஜனாதிபதி முன் சத்தியப்பிரமாணம்

(யாழ்ப்பாணம்)


ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் வடக்கு மாகாண சபையின் முதலாவது முதலமைச்சராக முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் நேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

வடக்கு மாகாண சபைத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் முதலமைச்சர் வேட்பாளராக யாழ்.மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன், ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொள்வதற்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இருப்பினும் நேற்றுக் காலை 9.30 மணியளவில் அலரி மாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் வடக்கு மாகாண சபையன் முதலமைச்சராக சத்தியப்பிரமாணம செய்தார்.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, டியூ.குணசேகரா, டக்ளஸ் தேவானந்தா, திஸ்ஸ விதாரண, டளஸ் அழகப்பெரும ஆகியோரும் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமனற உறுப்பினருமான இரா.சம்பந்தன், அக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் , அப்பாத்துரை விநாயகமூர்த்தி, வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி உள்ளிட்ட பலரும் பங்கு கொண்டிருந்தனர். இந்தப்பதவிப்பிரமாண நிகழ்வில் இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் சல்மான குர்ஷித் பங்கு கொள்வார் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதும அவர் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)







# அரசோடு ஒத்துழைத்தால் வடக்கிற்கு உதவி நிச்சயம்

## ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தோடு ஒத்துழைத்து செயற்பட தமிழ் தேசியக் கூட்டமைப்பு தயாரென்றால் வடக்கின் அபிவிருத்தி, மேம்பாடுகளை தொடர்ந்து முனனெடுக்க நாம் தயாரென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வடமாகாண முதலமைச்சராக சி.வி.விக்னேஸ்வரன் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட பின்னர் இடம்பெற்ற தேநீர் விருந்துபசார நிகழ்வில் சகஜமாக ஜனாதிபதி கலந்துரையாடும்போதே இப்படி கூறியதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நான் இந்த நாட்டின் அனைத்து பிரதேச மக்களுக்கும் உரித்தான ஜனாதிபதி. 20-ம் பக்கம் பார்க்க

# அரசாங்கத்துடன் இணைந்து வடமாகாணசபை இயங்கும்

## இந்தியா நம்பிக்கை தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்குள் அர்த்தமுள்ள அதிகார பகிர்வு விடயத்தில் ஒருமித்த குறிக்கோளை அடைய புதிய வட மாகாண சபை இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றும் என நம்புவதாக இந்தியா தெரிவித்துள்ளது.

இலங்கையின் விடயங்களில் இந்தியா தீர்மானங்களை எடுக்காது. ஆனால் நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை அடைவதற்கான உதவிகளை வழங்க இந்தியா தயாராக இருப்பதாக இலங்கைக்கு வந்துளள இநதிய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்தார். வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸை கொழும்பில் நேற்று 20-ம் பக்கம் பார்க்க

# தாமரை பறிக்கச் சென்ற சிறுமியின் உயிர் பறிபோனது

(குருமன்காடு)

வவுனியா, அட்டம்பகஸ்கட வாவியில் நீராடிக்கொண்டிருந்த மூன்று சிறுவர்கள் நீரில் மூழ்கியதில் சிறுமியொருவர் பலியாகியதுடன் ஏனைய இருவரும் காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என மாமடு பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது. வவுனியா மீள்குடியேற்ற கிராமமான செலலிஹினி பகுதியில் மீள் குடியேறிய குடும்பமொன்றைச் சேர்ந்த அஹின்சா நில்மினி (வயது 12) என்ற 20-ம் பக்கம் பார்க்க

# இனங்களுக்கிடையேயான புரிந்துணர்வே வன்முறையற்ற சூழலை உருவாக்கும் - விக்கி

(கொழும்பு)

இனங்களுக்கிடையேயான புரிந்துணர்வே வன்முறையற்ற சூழலை உருவாக்கும். உள்ளக சுய நிர்ணயம் ஒருநாட்டை பிரிவுபடுத்தாமல் ஒற்றுமைப் பாதையில் என்ற உண்மையை எமது சிங்கள சகோதர, சகோதரிகள் தமது அரசியல்வாதிகளுக்கு [illegible] வேண்டும் என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்

ஜனாதிபதி முன்னிலையில் முதலமைச்சராக சத்தியபிரமாணம் செய்த பின் ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையல் அவர் இவ்வாறு குறிப்பிட்டுளளார்.

ஊடக அறிக்கை பின்வருமாறு,

என்னுடைய பதவியின் செயல்பண்புகளையும் கடப்பாடுகளையும் நான் நேர்மையுடனும் நம்பிக்கையுடனும் இயற்றுவேன் என்றுதான் இன்று (நேற்று) காலை பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டேன்.

என்னுடைய பதவி வடமாகாண மக்கள் எனக்களித்த பதவி தூர நோக்கின் அடிப்படையிலும் கிட்டிய நோககின் 20-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

### யாழ்.போதனா உணவகத்தில்

# அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்வதாக குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையிலுள்ள உணவகத்தில் காட்சிப்படுத்தப்பட்ட விலையிலும் பார்க்க அதிக விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகத்திடமும் பல பொதுமக்கள் நேரடியாக முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கும் நோயாளர்கள் முதற்கொண்டு அவர்களுடன் விடுதியில் தங்கியிருப்பவர்கள், நோயாளர்களைப் பார்வையிட வருபவர்கள் எனப் பலர் இந்த உணவகத்தில் பொருட்களை கொள்வனவு செய்கின்றனர்.

வெந்நீர் முதற்கொண்டு அனைத்துக்குமே பணம் அறவிடும் யாழ்.போதனா வைத்தியசாலை உணவகம் பொருட்களின் விலைகளையும் நிர்ணயித்த விலையிலும் பார்க்க அதிகமாக விற்பனை செய்வது வைத்தியசாலை நிர்வாகத்தினருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகவும் இது தொடர்பாக உள்ளக விசாரணைகளை நிர்வாகத்தினர் மேற்கொண்டு வருவதாகவும் தெரிய வருகின்றது.

மேலும் யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள உணவகத்தில் பொருட்களை கொள்வனவு செய்த நபர் ஒருவர் குறித்த உணவகத்தில் பொருட்கள் நிர்ணயித்த விலையிலும் பார்க்க அதிக விலைக்கு விற்கப்படுவதற்கான போதிய ஆதாரம் தம்மிடம் உள்ளதாகவும் தெரிவித்தார்.

சுகாதார சீர்கேட்டுடன் யாழ்.போதனா வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலையும் அதனுடன் இணைந்ததாகவுள்ள உணவகமும் இயங்கி வருவதாக பத்திரிகைகளில் பலமுறை சுட்டிக் காட்டப்பட்ட பின்பு அது நிவர்த்தி செய்யப்பட்டது. ஆனால் தற்போது பொருட்களின் விலைகளை அதிகரித்து விற்பனை செய்து வருகின்றமை தொடர்பில் முறையிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

### யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக

## ஏ.டி.பி.கணேகம நியமிக்கப்பட்டுள்ளார்


யாழ். மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபராக டப்ளியூ.ஏ.டி.பி.கணேகம நியமிக்கப்பட்டுள்ளதாக யாழ். தலைமை பொலிஸ் நிலைய பொலிஸார் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபராக கடமையாற்றிய இந்து கருணாரட்ணவுக்கு நேற்று திங்கட்கிழமை முதல் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இதனால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கே புத்தளம் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் டப்ளியூ.ஏ.டி.பி.கணேகம நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, புத்தளம் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபராக, யாழ். மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபராக கடமையாற்றிய இந்து கருணாரட்ண நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனங்கள் பொலிஸ்மா அதிபரினால் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இன்று காலை 8.15 மணியளவில் யாழ்.பொது நூலகத்துக்கு முன்பாக புதிய பிரதி பொலிஸ்மா அதிபர் கடமையை பொறுப்பேற்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4)

# இந்திய அமைச்சர் குர்ஷித் அமைச்சர் பசிலை சந்தித்தார்



இரண்டு நாடுகளுக்கும் இடையிலான சமூக மற்றும் பொருளாதார விவகாரங்கள் தொடர்பில் இந்த சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் இந்தியாவின் உதவியுடன் வடக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் வீடமைப்புத் திட்டம் தொடர்பாகவும் அபிவிருத்தி பணிகள் பற்றியும் இரு நாட்டு அமைச்சர்களும் தகவல்களை பரிமாறிக்கொண்டனர்.

இலங்கைக்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் நேற்று பிற்பகல் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை சந்தித்தார்.

இந்த சந்திப்பு பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் நடைபெற்றது.

இந்த சந்திப்பில் இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே. சிங்ஹா, இந்தியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம், வட மாகாணத்தின் மீள்குடியேற்றம், அபிவிருத்தி, பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணிக் குழுவின் செயலாளர் எஸ்.பி. திவாரட்ண உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (செ-11)


## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உடுபுடவைகள்

CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(C-5046)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2013-ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த

"கண்ணன் கல்வி நிலைய" மாணவர்களான

(மகளிர் பாடசாலை வீதி, வதிரி)

| | | | |
|---|---|---|---|
| சி. கஜன் | - 187 | ஜெ. நிதுஜா | - 168 |
| சு. மயூரவேணி | - 184 | சு. சஞ்சயன் | - 167 |
| வி. காவியா | - 182 | ச. தனுஷியா | - 162 |
| கு. கபிலன் | - 182 | கு. கனிகா | - 160 |
| வ. வைதேகி | - 182 | சி. அபிநயா | - 157 |
| பு. ரிலக்ஷிகா | - 177 | த. லக்ஷிகா | - 156 |
| ஸ. ரமனீதன் | - 176 | பு. கஜனிக்கா | - 155 |
| த. சந்தோஷ் | - 175 | ர. தர்ஷா | - 154 |
| நே. சசிக்காந் | - 173 | ச. நிவேதா | - 154 |
| க. கதுர்ஷன் | - 173 | ப. மாதுளன் | - 154 |
| த. விருஷன் | - 170 | | |

இவர்களுடன் வெட்டுப் புள்ளியை அண்மித்த மாணவர்களான ப. பவித்திரன் -153, க. நந்தகோபன் - 153, சி. கஜிதா - 152 ஆகியோரையும் இவர்கள் கல்வியில் மேலும் பல சாதனைகள் புரிந்து வெற்றிகள் பெற்றிடவும் இவர்களுக்கு உரமூட்டிய **கண்ணன் கல்வி நிலைய** ஆசிரியை ம. சுமதி அவர்களையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(சி- 5050) வாழ்த்துவோர் - பெற்றோர்


# சட்டவிரோத அவுஸ்.; 46 பேர் கைது

கடல் மார்க்கமாக சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு செல்ல தயாராக இருந்த 46 பேரை பேருவளை பொலிஸார் நேற்று அதிகாலை கைது செய்துள்ளனர்.

இவர்கள் பேருவளை சமனல விளையாட்டு மைதானத்திற்கு அருகில் இருந்தபோது நேற்று அதிகாலை 3 மணியளவில் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 29 ஆண்கள், 7 பெண்கள் மற்றும் 10 சிறுவர்கள் அடங்குகின்றனர்.

இவர்களை ஏற்றிச் செல்ல பயன்படுத்தப்பட்ட வான் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக குற்றப் புலனாய்வு பிரிவினரிடம் கையளிக்கப்பட்டுள்ளனர். (செ-11)


## பாராட்டி வாழ்த்துகிறோம்




நடந்துமுடிந்த தரம் – 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 167 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த மு/ திருமுறுகண்டி இந்து வித்தியாலய மாணவியான செல்வராசா நிருஷா அவர்களையும் 161 புள்ளிகளைப் பெற்ற கிளி/ கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவனான முத்துக்குமார் கவிசாந் அவர்களையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அப்பம்மா, அம்மம்மா, சித்தி, அத்தை.

(சி-5101)



யா/ வதிரி திரு இருதயக் கல்லூரியில்
2013-ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில்
சித்தியடைந்த எமது அன்புச் செல்வங்களைப்

## பாராட்டி வாழ்த்துகிறோம்



இவர்களை நெறிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களுக்கு எமது நன்றியும் பாராட்டுக்களும்



செல்வன்
**பிரகலாதன் மாதுளன்** (மருமகன்)
(162 புள்ளிகள்)

செல்வி
**அபிஷாயினி அகிலன்** (பெறாமகள்)
(166 புள்ளிகள்)

முடக்காடு,
நெல்லியடி கிழக்கு, கரவெட்டி.

(சி-5102)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## ஆபத்தில் உதவி

ஒரு ஆள் தனியாக வந்து கொண்டிருந்தான். வழியில் ஒரு காடு. அதைத் தாண்டித்தான் ஊருக்குப் போக வேண்டும்.

மிகவும் இருட்டிவிட்டதால் தனியாகப் போவதற்குப் பயந்து கொண்டிருந்தான். காட்டில் மிருகங்களும் அதிகம். என்ன செய்யலாம். என்று யோசித்துக் கொண்டிருக்கும் போது இன்னொருவன் அந்த வழியால் வந்து கொண்டிருந்தான்.

நல்லவேளை ஒருதுணைகிடைத்துவிட்டது என்றுநினைத்து என்ன ?" நீயும் இந்தக் காட்டு வழியாக அடுத்த பக்கம் போக வேண்டுமா? "என்று கேட்டான்.

அவனும் "ஆமாம் "என்றான்.

"அப்படியானால் இந்த நிமிடத்திலிருந்து நாம் இருவரும் நண்பர்கள். ஒருவருக்கொருவர் துணையாக இருப்போம். ஆபத்து வந்தால் ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும்.!" என்று ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள்.

கொஞ்சத் தூரம் போனதும் ஒரு பெரிய கரடி எதிரில் வந்து கொண்டிருந்தது.

அவ்வளவுதான்! அதில் ஒருவன் கிடு கிடுவென்று ஒரு மரத்தில் ஏறி உட்கார்ந்துவிட்டான். மற்றவனுக்கு மரம் ஏறத் தெரியாது. என்ன செய்யலாம் என்று யோசித்தான். அப்படியே தரையில் படுத்து விட்டான். மூச்சை அடக்கிக் கொண்டு செத்தவன் மாதிரி கிடந்தான்.

அந்தக் கரடி பக்கத்தில் வந்து பார்த்தது. முகர்ந்து பார்த்துவிட்டு "ஆள் செத்துவிட்டான்! "என்று நினைத்து அப்பால் போய்விட்டது.

கரடி போனதும் மரத்திலிருந்தவன் கீழே இறங்கி வந்தான். கீழே படுத்திருந்தவனைப் பார்த்து,

"அது சரி... உன்னிடம் அந்தக் கரடி காதோரமாக ஏதோ பேசியதே.. என்ன சொல்லிற்று?" என்று கேட்டான்.

அதற்கு படுத்திருந்தவன் "ஆபத்துக்கு உதவாத உன்னை மாதிரி நண்பர்களை நம்பாதே!"என்று சொல்லியது என்றான்.

இப்படி ஒரு கதை உண்டு.

நட்பு என்றால் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்க வேண்டும். அது தான் நட்பு. ஆபத்து சமயத்தில் கைவிட்டால் அதற்குப் பெயர் நட்பு இல்லை.

அது சரி... இருவரது உயிருக்கும் ஆபத்து வரும் போது எப்படி தப்பித்துக் கொள்வது? என்று நீங்கள் நினைக்கலாம்.

அதுவும் நியாயம் தான்.

இருந்தாலும் இருவரும் சேர்ந்து ஒரு சங்கடத்தை சுலபமாக சமாளிக்க முடியுமானால் அந்த நேரத்தில் துணையாக இருப்பதை விட்டுவிட்டு தூர ஓடிப் போனால் அது நன்றாக இருக்குமா?

சில பேர் மிகவும் சாமர்த்தியமாக நடந்து கொண்டு நண்பர்களைக் காப்பாற்றுவதும் உண்டு.

அதற்கு ஒரு கதை சொல்கிறேன் கேளுங்கள்.

இரண்டு நண்பர்கள் இருந்தார்கள்! அவர்கள் இருவரும் ஆளுக்கொரு துப்பாக்கி எடுத்துக் கொண்டு வேட்டைக்குப் போனார்கள்.

ஏதாவது கண்ணில் படுகிறதா என்று அந்தக் காட்டில் தேடினார்கள். அந்த சமயம் காட்டிலாகா அதிகாரிகள் "ஜீப்பில்" வந்து விட்டார்கள்.

அவ்வளவு தான்! அதைப் பார்த்ததும் ஒருவன் வேகமாக ஓட ஆரம்பித்தான். இன்னொருவன் ஒன்றும் புரியாமல் அந்த இடத்தில் நின்றுவிட்டான். ஓடுபவனைப் பார்த்த அதிகாரிகள் அவனைத் துரத்த ஆரம்பித்தார்கள்.

அவன் செடிகொடிகளுக்கு மத்தியில் வளைந்து வளைந்து ஓடினான். நீண்ட தூரம் ஓடிய பின் ஒரு இடத்தில் அவனைப் பிடித்து விட்டார்கள்.

"ஏன் இப்படி பயந்து கொண்டு ஓடி வந்தாய்? எடு லைசன்ஸை!" என்றார் அதிகாரி கோபத்துடன். அவனும் லைசன்ஸ் எடுத்துக் காட்டினான்.

"உன்னிடம் தான் லைசன்ஸ் இருக்கிறதே! எதற்காக இப்படி ஓடி வந்தாய்?" என்றுகேட்டார் அதிகாரி. அதற்கு அவன் "என் நண்பனிடம் லைசன்ஸ் இல்லையே! அதனால் அவனை உங்களிடமிருந்து தப்பிக்க வைப்பதற்காகத் தான் நான் இவ்வளவு தூரம் ஓடி வந்தேன்!" என்றான்!

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# தந்தையின் கோரிக்கை கடிதத்தை குர்ஷித்திடம் கையளித்தார் கனிமொழி

(சென்னை)

கைது செய்யப்பட்ட அனைத்து தமிழக மீனவர்களையும் நிபந்தனையின்றி விடுதலை செய்வதுடன் அவர்களது மீன்பிடி படகுகளையும் மீள வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி இந்திய பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் அந்நாட்டு வெளி விவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்துக்கும் தி.மு.க தலைவர் கலைஞர் கருணாநிதி எழுதிய கடிதத்தை அவரது மகளும் எம்.பியுமான கனிமொழி இந்திய வெளியுறவுத் துறை அமைச்சரிடம் கையளித்துள்ளார்.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையின் மனிதாபிமானமற்ற தாக்குதல்கள், கொடுமைகள், துயரங்கள் தொடர்ந்து நடைபெற்று வருவது நீங்கள் அறிந்ததே.

தமிழக மீனவர்களின் இந்த துயரம் ஒரு தனிப்பட்ட நபரால் அல்ல இராணுவத்தின் ஒரு பிரிவினரால் ஏற்படுகிறது.

நமது மீனவர்களை கைது செய்து இலங்கை சிறைகளுக்கு அனுப்புவது தடுக்கப்படாத கடுமையான நடவடிக்கையாகவுள்ளது.

இவர்களின் படகுகளை கூட இலங்கை இராணுவம் கைப்பற்றியுள்ளது. இது போன்ற இலங்கை கடற்படையின் நடவடிக்கைகள் தமிழ் சமுதாய மக்களிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

கடந்த மாதம் 20 ஆம் திகதி என்னிடம் மீனவர் சங்கங்கள் அளித்த மனுவின் படி 112 தமிழக மீனவர்கள் பிணை மற்றும் விசாரணையின்றி இலங்கையின் பல்வேறு சிறைகளில் வாடுகின்றனர்.

அதேவேளையில் கச்சதீவு அருகே கடலில் மீன்பிடித்து கொண்டிருந்த இராமேஸ்வரம்மீனவர்களை இலங்கை கடற்படையினர் கடுமையாக தாக்கியுள்ளனர்.

அவர்களின் வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் சேதப்படுத்தப்பட்டன.

நாகபட்டினம் மற்றும் காரைக்கால் மீனவர்கள் இலங்கை சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்ட பின்னரும் அவர்களது படகுகளைத் திரும்பவும் வழங்க மறுத்து விட்டனர்.

மேலும் அவர்களை யாழ்ப்பாணத்திலுள்ள காங்கேசன்துறைக்கு இலங்கை கடற்படையினர் திரும்பவும் அனுப்பியுள்ளனர்.

இதுபோன்ற சம்பவம் கடந்த 7 ஆண்டுகளில் தற்போது தான் முதன்முறையாக நடந்துள்ளது. இலங்கை கடற்படை வேண்டுமென்றே நடத்தி வரும் துப்பாக்கி சூடு சம்பவங்களால் இதுவரை பல மீனவர்கள் உயிரிழந்துள்ளனர்.

மீனவர்கள் மீது கடும் காயம் ஏற்படுத்துவது அவர்களின்உயிர்களைபறிப்பது, படகுகளை பறிமுதல் செய்வது போன்றவற்றை இலங்கை கடற்படை மனிதாபிமானமற்ற சட்டபூர்வமற்ற முறையில் செய்து வருவது சட்டத்துக்கு மாறானது.

இதுபோன்ற காட்டுமிராண்டித்தனமான செயல்களை சர்வதேச சமுதாயம் மிக கடுமையாக கண்டித்துள்ளது. ஆனால், இக் கொடுஞ்செயலை இந்திய அரசு தடுத்து நிறுத்தவில்லை.

எனவே, இதுபோன்ற கொடுமையான நடவடிக்கைகளைத் தடுத்து தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்ற தூதரகம் மூலம் அனைத்து தீவிர நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

கைது செய்யப்பட்ட அனைத்து மீனவர்களையும்நிபந்தனையின்றி விடுதலைசெய்தும், இவர்களின் படகுகளை திரும்ப வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கொழும்பு செல்லும் இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்திய இறையாண்மைக்கு சவால் விடும் இலங்கை கடற்படையின் கொடூர நடவடிக்கையை உணர செய்யும் படி எடுத்துரைக்க வேண்டும் என தமிழக மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

அத்துடன் இலங்கையில் 13 ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தை நீர்த்துப் போக செய்யக்கூடாது எனவும் தி.மு.க தலைவர் கருணாநிதி குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 100-120 | 100 |
| பச்சைமிளகாய் | 50 | 100 | 100 |
| தக்காளி | 100 | 80 | 130 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 60 |
| கோவா | 50 | 50 | 80 |
| கரட் | 50 | 40 | 80 |
| பூசணி | 20 | 30 | 40 |
| புடோல் | 40 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 30 | 50 |
| சின்ன வெங்காயம் | 165 | 140 | 160-200 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 100 |
| பாகற்காய் | 100 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | 40 | 40 | 80 |
| பயற்றங்காய் | 80 | 100 | 80 |
| லீக்ஸ் | 90 | 90 | 100 |
| பீற்றூட் | 20 | 15 | 40 |
| கறிமிளகாய் | 60 | 50 | 80 |
| முருங்கைக்காய் | 40 | 40 | 120 |
| போஞ்சி | 90 | 80 | 120 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 30 |
| தேசிக்காய் | 450 | 400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 40-50 |
| இராசவள்ளி | – | 70 | 120 |

# இராசி பலன்

*08.10.2013*
*(புரட்டாதி 22, செவ்வாய்க்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு*
*சதுர்த்தி பின்னிரவு 1.37 மணிவரை*
*விசாகம் பிற்பகல் 3.32 மணிவரை*
*இராகுகாலம் 3.02-4.32 மணிவரை*
*சுபநேரம் 10.32-12.02 மணிவரை*
*சதுர்த்தி விரதம்*

**மேடம்** இறை வழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், தொழிலில் கூட்டாளிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, உடல் ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**இடபம்** நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், செய் தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், சந்தோசம் தரும் செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மிதுனம்** வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், உடல்நலம் சீராகும், முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**கடகம்** அடிப்படை வசதி வாய்ப்புகளைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**சிங்கம்** தாயின் உடல்நலம் சீராகும், வாகன சுகமுண்டு, தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கன்னி** குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் நீங்கும், வெளியூர் தொடர்புகள் அதிகரிக்கும், தொழில் நன்மையுண்டு, கற்பனை மிகுதியான நாள், உறவினர் உதவி செய்ய முன்வருவர்.

**துலாம்** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும்.

**விருச்சிகம்** குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், விரும்பிய காரியம் விரும்பியபடியே கைகூடும், போசன சுகமுண்டு, வருமானம் திருப்திதரும்.

**தனுசு** இடமாற்றம், ஊர்மாற்றம் செய்யும் எண்ணம் உருவாகும், சில சந்தர்ப்பங்களில் கோபப்படும் சூழ்நிலை உருவாகும், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**மகரம்** பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்கள் தகுதியை உயர்த்தும், தனவரவு திருப்திதரும், மறக்க முடியாத இனிய சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், வருமானம் திருப்திதரும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்,

**மீனம்** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், அன்பால் சாதித்துக் காட்டும் நாள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் விநியோக வேலைகளை துரிதப்படுத்துமாறு கோரிக்கை

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் தற்போது நடைபெற்றுவரும் நான்காம்கட்ட மின்விநியோகத்திற்கான ஆரம்பகட்ட வேலைகளை துரிதகதியில் செய்து தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடக்கின் வசந்தம் கிராமிய மின்விநியோகத் திட்டத்தினூடாக வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள பல கிராமங்களுக்கு மின் விநியோகிக்கப்பட்டுள்ளது.


இதனடிப்படையில் முதற்கட்டமாக மருதங்கேணி சந்தி, 'அதனை அண்டிய பகுதிகளிலுள்ள அரச மற்றும் அரச சார்பற்ற தனியார் நிறுவனங்கள், விற்பனை நிலையங்கள் போன்றனவற்றிற்கு மின்சாரம் விநியோகிக்கப்பட்டது.

இரண்டாம் கட்டமாக செம்பியன்பற்று வடக்கு,தெற்கு, மாமுனை ஆகிய கிராமங்களுக்கும் மூன்றாம் கட்டமாக மருதங்கேணி வடக்கு, தெற்கு, வத்திராயன், உடுத்துறை, ஆளியவளை ஆகிய கிராமங்களுக்கும் மின் விநியோகம் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் தற்போது நான்காம்கட்டமாக மின்விநியோகம் செய்வதற்காக ஆரம்பகட்ட வேலைகள் வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில், நித்தியவெட்டை, போக்கறுப்பு, வண்ணாங்குளம் போன்ற கிராமங்களில் நடைபெற்று வருகின்றன.

ஆயினும் வேலைகள் ஆரம்பமான சில வாரங்கள் துரிதகதியில் இடம்பெற்று வந்த போதிலும் தற்போது மந்தகதியில் வேலைகள் நடைபெறுவதாக பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, சம்பந்தப்பட்டோர் உரிய காலத்தினுள் ஆரம்ப வேலைகளைச் செய்து மின்விநியோகத்திற்கு உதவ வேண்டுமெனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-64)



நன்றி:-மிரர்

# மாட்டுவண்டிச் சவாரி போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

எழுதுமட்டுவாழில் 15 வருடங்களின் பின்னர் மாட்டுவண்டிச் சவாரி நேற்று முன்தினம் கோபால் பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இப்போட்டியில் முதல் மூன்றிடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

'ஏ' அணியில் க.வசந்தரூபன் (பொன்னாலை), ல.லக்ஸனா (கோணாவில்), செ.ஈசன் (சங்குவேலி) 'பி' அணியில் சி.அபிசாளினி (கொடிகாமம்), என்.கம்சன் (புத்தூர்), க.சிறிகரன் (பூநகரி), 'சி' அணியில் கோ.கணபதிப்பிள்ளை (அளவெட்டி), கே.கிருஸ்ணா (வட்டுக்கோட்டை), ஆ.தேனுஜா (அளவெட்டி), 'டி' அணியில் உ.கிருபன் (பிரமந்தனாறு), சி.விக்னேஸ்வரன் (வட்டுக்கோட்டை), ஜெ.சர்மிதன் (பல்லன்சுண்டி) ஆகியோர் பெற்றுக் கொண்டுள்ளனர்.

இப் போட்டியில் மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் போட்டியாளர்கள் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது. (அ-9-29)




# கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட நபர் கைது

(கரணவாய்)

துன்னாலை பறையன்குளப் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஒருவர் நேற்று நெல்லியடிப் பொலிஸாரிடம் வசமாக மாட்டியுள்ளார்.

மேற்படி பகுதியில் கசிப்பு விற்பனை இடம் பெறுவதாக நெல்லியடிப் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து, குறித்த இடத்துக்கு சென்ற பொலிஸார் அப்பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த குடும்பஸ்தரை கைது செய்துள்ளனர்.

குறித்த நபருக்கு எதிராக எதிர்வரும் வெள்ளிக் கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

வடமராட்சி பிரதேசத்தில் சட்டவிரோத செயல்கள் அதிகரித்து வருவதனால் பொலிஸாருக்கு இரகசியமாக தகவல்களைக் கொடுத்து அவற்றை தடுக்க பொது மக்களை ஒத்துழைக்குமாறு நெல்லியடிப் பொலிஸார் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.' (அ-9-60)

# வாரிவிட்டான் வீதியை புனரமைப்பதில் தாமதம்

(பொற்பதி)


மருதங்கேணி சந்தி நாவலடியிலிருந்து உடுத்துறை மகாவித்தியாலயம் வரை செல்லும் வாரிவிட்டான் வீதி வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லையென பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மருதங்கேணியிலிருந்து ஆழியவளை வரையான பிரதேசத்திலுள்ள உள் வீதிகள் அனைத்தும் புனரமைப்பு செய்வதற்காக என்றிப் திட்டத்தினூடாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், வாரிவிட்டான் வீதி மட்டுமே புனரமைப்புச் செய்யப்படாதுள்ளது.

சுமார் 3 கிலோ மீற்றர் தூரத்தையுடைய வாரிவிட்டான் வீதி புனரமைப்பிற்காக சல்லி, கருங்கற்கள், கிரவல் என்பன வீதியின் மருங்குகளில் இடப்பட்டுள்ளன.

ஆயினும் இதுவரை குறித்த வீதி செப்பனிடுவதற்கான வேலைகள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை.

இவ்வாறான நிலையில் வீதி புனரமைக்கப்படாததன் காரணம் என்னவென சம்பந்தப்பட்டோரிடம் மக்கள் கேள்வியெழுப்புகின்றனர். (அ-9-64)



கோண்டாவில் ஞானவீர சனசமூக நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான முகாம் அண்மையில் இடம்பெற்றது. இவ் இரத்ததான முகாமில் கலந்து கொண்டவர்களை படத்தில் காணலாம்.


# கொக்குவில் ஏபி அணியினர் 74 ஓட்டங்களால் வெற்றி

(மானிப்பாய்)

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய மின்னொளியிலான 20:20 துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் உடுவில் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து களமிறங்கிய கொக்குவில் ஏபி விளையாட்டுக் கழகம் 74 ஓட்ட வித்தியாசத்தில் அமோக வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஏபி விளையாட்டுக் கழக அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் ஏபி விளையாட்டுக்கழகம் 20 பந்து பரிமாற்ற நிறைவில் 142 ஓட்டங்களைப் பெற்றது.






துடுப்பாட்டத்தில் ஏபி விளையாட்டுக் கழகம் சார்பாக உத்தமன் 78 ஓட்டங்களைத் தனது அணிக்கு பெற்றுக் கொடுத்தார்.

பதிலுக்கு 143 எனும் வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாட களமிறங்கிய உடுவில் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி 15.2 பந்துப் பரிமாற்ற நிறைவில் 68 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

பந்து வீச்சில் கொக்குவில் ஏபி அணி சார்பாக சிலோஜன் 4 இலக்குகளை கைப்பற்றியிருந்தார். இதனடிப்படையில் இறுதியில் கொக்குவில் ஏபி அணி 74 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரனாக கொக்குவில் ஏபி விளையாட்டுக்கழக வீரர் உத்தமன் தெரிவு செய்யப்பட்டதுடன், போட்டித் தொடரின் சிறப்பாட்டக்காரராக உதயசூரியன் விளையாட்டுக்கழக அணியின் வீரர் வரீங்டன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (அ-5-23)

# சிறுவர்,முதியோர் தின நிகழ்வு

(தும்பளை)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்தினரால் சர்வதேச சிறுவர், முதியோர் தின விழா நாளை மறுதினம் வியாழக் கிழமை தாளையடி றோ.க.த.கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வு வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலர் ந.திருலிங்கநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், சிறப்பு விருந்தினர்களாக, வடமாகாண சமூக சேவைப் பணிப்பாளர் திருமதி நாளாயினி இன்பராஜ், வடமாகாண சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளர் ரி.விஸ்வரூபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்தோடு, கௌரவ விருந்தினர்களாக, மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி க.பொன்னையா, வடமராட்சி கிழக்கின் "ஷோ-ஆ" நிறுவன திட்ட இணைப்பாளர் ஏ.எட்வின் ராஜகுமார் ஆகியோர் சிறப்பிக்கவுள்ளனர். (அ-9-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானசம்பந்தர் முதலிகோவில் தார் வீதியை புனரமையுங்கள்

## வட்டு.தெற்கு கிராம அபிவிருத்தி சங்கம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.வட்டுக்கோட்டை ஞானசம்பந்தர்-முதலி கோவில் தார் வீதியையும் குறுக்கு வீதிகளையும் விரைவாக புனரமைத்து தந்து வட்டு.தெற்கு மக்கள் குடிநீரை இலகுவாகப் பெற ஆவன செய்யுமாறு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் மு.சண்முகநாதன் மற்றும் செயலாளர் வே.கணேசரத்தினம் ஆகியோர் கையொப்பமிட்டு யாழ்.அரச அதிபர், உள்ளூராட்சி திணைக்கள உதவி ஆணையாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர், சங்கானை பிரதேச செயலாளர் மற்றும் வேல்ட்விசன் இணைப்பாளர் ஆகியோருக்கு அறிக்கையொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வட்டுதெற்கு மக்களுக்கு குடிநீர் வழங்க கடந்த வருட நடுப்பகுதியில் World Vision என்ற அரச சார்பற்ற நிறுவனமும் வலிகாமம் மேற்கு பிரதேச சபையும் சேர்ந்து நிதி உதவி அளித்து இரு நிறுவனத்தினரின் கண்காணிப்பிலும் முதலி கோவிலடியிலிருந்து தண்ணீர் தாங்கி அமைத்து குழாய் மூலம் குடிநீரும் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், இவ்வளவு செலவு செய்தும் இதனை மக்கள் எவ்வளவு தூரம் பயன்படுத்துகிறார்கள் என்பது தெரியாதுள்ளது.

ஏனெனில் இப்போதும் மக்கள் தண்ணீர் எடுப்பதற்காக சங்கரத்தை சந்திக்கு அருகில் உள்ள தனியார் குழாய் நீரை நாடியே செல்கிறார்கள்.

மேற்படி திட்டத்திற்கு மக்கள் அதிகம் பயன்படுத்தும் ஞான சம்பந்தர்-முதலி கோவில் தார் வீதியையும் குறுக்கு வீதிகளையும் பக்கோ இயந்திரம் மூலம் தோண்டி குழாய் பொருத்தி ஒரு வருடம் கழிந்த நிலையில் அந்த சேதமடைந்த வீதிகளை செப்பனிடுவதற்கான நடவடிக்கையை World Vision என்ற அரச சார்பற்ற நிறுவனமோ அல்லது வலிகாமம் மேற்கு பிரதேச சபையோ இன்றுவரை எது வித நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை.

மழை காலத்தில் இவ்வீதியூடாக பயணிக்கும் மக்கள் சேறு சகதிக்குள் படும்பாடு இவர்களுக்கு புரியுமா எனவும் மக்கள் நலன் சார்ந்து முன்னெடுக்கப்பட்ட திட்டம் ஏன் இவ்வாறு திருப்தியற்ற விதத்தில் நடந்துள்ளது என்பது புரியாமல் உள்ளது எனவும் தெரிவித்துள்ளனர்.

மேற்படி மக்கள் அதிகம் பயன்படுத்தும் தார் வீதியையும் குறுக்கு வீதிகளையும் World Vision என்ற அரச சார்பற்ற நிறுவனமோ அல்லது வலிகாமம் மேற்கு பிரதேச சபையோ செப்பனிட்டு மக்களின் சிரமங்களை நிவர்த்தி செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (அ-6)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2013 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 164 புள்ளிகளைப் பெற்று சித்தி எய்திய யாழ்.உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய மாணவன்

**செல்வன்**
**சண்முகராசா சஞ்சை**

அவர்களைப் பாராட்டுவதுடன் அவருக்கு ஊக்கமளித்த பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும் மற்றும் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் அவர் மேலும் சகல செல்வங்களைப் பெற்று பார்போற்ற வாழவேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் : மாமா - கமலன், அத்தை கௌரி
மச்சாள்மார் - ஜஷ்மி, கனிமொழி, காவியா

(4120)






**குறைந்த கட்டணத்தில் 24 மணி நேர சேவை**

Northern Central Hospitals

## நொதன் சென்றல் வைத்திய சாலை வழங்கும் பிரத்தியேக வைத்திய சேவைகள்

வட பகுதி மக்களின் தேவை கருதி நொதன் சென்றல் வைத்தியசாலை பல நவீன பிரத்தியேக வைத்திய மற்றும் சத்திர சிகிச்சை சேவைகளை நோயாளிகள் கொழும்பு செல்ல வேண்டிய அவசியமில்லாது இங்கேயே வழங்கி வருகின்றதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றது. இங்கு வழங்கப்படும் நவீன சேவைகளாவன:

### சாதாரண மகப்பேறு, மகப்பேற்று சத்திர சிகிச்சை



இவ்வைத்தியசாலையில் சாதாரண மகப்பேற்றுக்கான சகல வசதிகள் கொண்ட பிரசவ அறை, பிரசவ விடுதி என்பன உள்ளன. மருத்துவ தாதி மற்றும் மகப்பேற்று வைத்திய நிபுணர் சேவை 24 மணித்தியாலமும் உள்ளது.தேவைப்படுமிடத்து சத்திரசிகிச்சை மகப்பேறும் நடைபெறுகின்றது.

### குழந்தைகளுக்கான பிரிவு



நொதன் வைத்திசாலையில் குழந்தைகளுக்கான சிகிச்சைகள் குழந்தைகளுக்கான விஷேட வைத்திய நிபுணர்களால் மேற்கொள்ளப்படுகின்றது.

### தீவிர சிகிச்சைப் பிரிவு



வட பகுதியில் உள்ள தனியார் வைத்தியசாலைகளில் நொதன் வைத்தியசாலையில் மட்டுமே தீவிர சிகிச்சைப் பிரிவு நடைமுறையில் உள்ளது.

(சு/5045)

342, பலாலி வீதி, திருநெல்வேலி,யாழ்ப்பாணம்.
T.P: 021 221 9988, 021 221 9977,021 222 2263 Fax: 021 222 2263
Web : www.nchjaffana.com E-mail: nchjaffna@gmail.com




## நவராத்திரி பாமாலை

### நல்வழியைக் காட்டிடுவாய்!

தீயவர்களை சங்காரம் செய்து
வீரத்தை நிலை நாட்டிய வீரசக்தியே
வீரமென்றால் என்னவென
இவ்வுலகிற்கு உணர்த்து தாயே!
செந்தாமரையில் வீற்றிருக்கும்
செல்வத்தின் உறைவிடமே
செல்வமென்றால் என்னவென
இவ்வுலக மானுடர்க்கு உணர்த்து தாயே!
வெண்தாமரையில் வீற்றிருப்பவளே
கல்வியின் பெருமைதனை
மாணவர்க்கு ஊட்டி
நற் பிரஜைகளாக்கு தாயே!

கு.வினோஜா (செங்குந்தா இந்து கல்லூரி)

அன்பு மாணவச் செல்வங்களே! நவராத்திரிப் பாமாலைக்கு தங்களிடமிருந்து கவிதைகளை எதிர்பார்க்கின்றோம். தங்கள் கவிதைகளை "வலம்புரி" நவராத்திரிப் பாமாலை, இல: 2 , 3 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி , யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:
T.P : 021 321 0815,
021 567 1532



## பூநகரி சந்தியில் கடைகள் வாடகைக்கு

பூநகரி வாடியடி சந்தியில் மன்னார் வீதி சங்குப்பிட்டி யாழ்.வீதியில், 30X10 விஸ்தீரணமுள்ள 5 கடைகள் வாடகைக்கு உண்டு. மின்சார வசதியும் உண்டு வாடகை பேசித் தீர்மானிக்கப்படும்.

**தொடர்புகளுக்கு:**
த.இராசேந்திரம் வாடியடி, பூநகரி, தொ.பே: 0778672836

(4119)



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1978 இந்து (V)<br>நட்சத்திரம்:பூராடம் 4<br>கி.பா: 24.75<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BEA, MBA, IELT (UK PR)<br>தொ.இ:B1110 | பிறப்பு: 1973 இந்து (KO)<br>நட்சத்திரம்: உத்தராடம் 1<br>கி.பா :24.25<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:Bsc (Hons) MBA, PMB, IT Manager<br>தொ.இ:G739 |
| பிறப்பு: 1984 இந்து (V)<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா. 45.75 செவ்: 4இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/ தொர்ழில்: Bsc (Hons) in Business Management (வங்கி அதிகாரி)<br>தொ.இ:B1113 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 3<br>கி.பா :12.5<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L Management படிக்கிறார்<br>தொ.இ:G741 |
| பிறப்பு: 1982 இந்து (V)<br>நட்சத்திரம்: உத்தாரடம் 2<br>கி.பா:21 செவ்: 12<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: Bsc/MA Programme Officer (அரச)<br>தொ.இ:B1333 | பிறப்பு: 1983<br>நட்சத்திரம்: விசாகம் 3<br>கி.பா :11.5<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:A/L (HNDA) முகாமைத்துவ உதவியாளர் (அரச)<br>தொ.இ:G743 |
| பிறப்பு: 1976 (RC)<br>நட்சத்திரம்: மகம் 2<br>செவ்: 4இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L Dip Computer Hardware Techinician கணணி இயக்குநர்<br>தொ.இ:B1115 | பிறப்பு: 1983<br>நட்சத்திரம்: உத்தராடம் 3<br>கி.பா :52.75, செவ்:12<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: Dip in Technology B Technology Civil Eng. (Assistant Engineer)<br>தொ.இ:G745 |

சகல தொடர்புகளுக்கும்:-

# கல்யாண மாலை


(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வாய்க்கிரகத்திற்கு அனுப்பப்படும் விண்கலத்திற்கு நாசாவின் உதவி உறுதி




(பெங்களூர்)

செவ்வாய்க்கிரகத்திற்கு இந்தியா அனுப்பவுள்ள ஆராய்ச்சி விண்கலத்திற்குத் தேவையான தகவல் தொடர்பு மற்றும் விண் பயணத்தில் உதவுவதாக அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையம் (நாசா) மீண்டும் உறுதி அளித்துள்ளது.

இஸ்ரோ செவ்வாய்க்கிரகத்தை ஆராய்ச்சி செய்வதற்காக அனுப்பத் திட்டமிட்டுள்ள விண்கலத்தை எதிர்வரும் 28 ஆம் திகதி ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டா ஏவுதளத்தில் இரு ந்து அனுப்ப நிபுணர் குழு ஒப்புதல் அளித்திருந்தாலும் அடுத்த மாதம் 19 ஆம் திகதிக்குள் செலுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.

விண்கலத்தின் தகவல் தொடர்பு மற்றும் விண் பயணத்தில் உதவுவதாக நாசா ஏற்கனவே உறுதி அளித்திருந்தது. இந்நிலையில் அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி காரணமாக அங்குள்ள அரச அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளன. இதனால் செவ்வாய்க்கிரகத்திற்கு அனுப்பப்படும் இந்திய விண்கலத்திற்கு நாசா உதவி செய்யுமா? என்ற சந்தேகம் எழுந்தது.

இது தொடர்பாக இஸ்ரோ வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு, செவ்வாய்கிரகத்திற்கு அனுப்பப்படும் விண்கலத்திற்கு அமெரிக்காவின் நாசா, ஜே.பிஎல் நிறுவனம் ஆகியவை தகவல் தொடர்பு மற்றும் விண் பயணத்தில் உதவுவதாக ஏற்கனவே அளித்திருந்த உறுதியில் எந்தவித மாற்றமும் இல்லை.மேலும் இந்திய விண்கலத்திற்கு அளிக்கப்படும் உதவியில் எவ்வித இடையூறும் ஏற் படாது என்று நாசா மீண்டும் உறுதி அளித்துள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# சிரியாவில் இரசாயன ஆயுதங்கள் அழிக்கும் பணி ஆரம்பம்



சிரியாவில் இரசாயன ஆயுதங்களை அழிக்கும் பணி தொடங்கியுள்ளதாக ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இரசாயன ஆயுத ஒழிப்புக்கு ஒத்து ழைப்பதாக ஜனாதிபதி பஷர் அல் ஆசாத் அறிவித்தார்.

அதன்படி சிரியாவில் ஐ.நா. அதி காரிகள் இரசாயன ஆயுதங்களைக் கண்டறியும் பணியில் கடந்த ஒரு மாத காலமாக ஈடுபட்டு வந்தனர். இதில் ரஷ்யா, அமெரிக்க கூட்டு குழுவினர் இடம் பெற்றுள்ளனர். அங்கு சுமார் ஆயிரம் தொன் இர்சாயன ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அவற்றை டிரக்குகளில் ஏற்றி மிகவும் பாதுகாப் பான பகுதிகளுக்கு கொண்டு செல்லும் பணி தொடங்கியுள்ளது. பின்னர் நிபுணர்களின் ஆலோசனைப்படி இரசாயன ஆயுதங்கள் படிப்படியாக அழிக் கப்படும். இந்தப் பணி 2014 ஜுன் மாதம் வரை தொடரும் என ஐ.நா. நிபுணர்கள் தெரி வித்துள்ளனர். (2)

# லண்டன் சிறைக்கைதிகளை சொந்த நாட்டு சிறைக்கு அனுப்ப முடிபு

லண்டன் சிறைச்சாலைகளில் தற்போது தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக் கும் வெளிநாட்டவர்கள் தங்களின் மீதி தண் டனைக் காலத்தை அவரவர் தாய்நாடுகளில் அனுபவிக்கலாம் எனும் முடிவை லண்டன் அரசு எடுத்துள்ளது. இது குறித்த அறிவிப்பினை லண்டன் உள்துறை செயலர் தெரிசா மே அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

லண்டன் சிறைச்சாலைகளில் தற்போது தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக் கும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை 11 ஆயிரத்து 127 ஆகும். அதில் ஆசிய நாட்டவர்கள் 2 ஆயிரத்து 233 பேரும் பாகிஸ்தானியர்கள் 509 பேரும் இந்தியர்கள் 447 பேரும் வியட்நாம் நாட்டவர்கள் 424 பேரும் பங்களாதேஷத்த வர்கள் 242 பேரும் சீன நாட்டவர்கள் 210 பேரும் உள்ளடங்குவர். இவர்கள் தங்களின் மீது தண்டனைக் காலத்தை அவரவர் தாய்நாடுகளில் கழிக்கலாம் என்ற முடிவினை லண்டன் அரசு எடுத் துள்ளது. லண்டன் மற்றும் வேல்ஸ் நாடுக ளின் உயர் பாதுகாப்பு நிறைந்த சிறைகளில் ஐந்து ஆசிய நாட்டவர்களில் ஒரு இந்தியர் என்ற கணக்கில் தற்போது சிறை வைக்கப் பட்டுள்ளனர்.

எனவே குடியேற்ற அமுலாக்க அதிகாரி கள் ஒவ்வொரு பெரிய பொலிஸ் நிலையத் திலும் இந்தத் தகவல்களைப் பெற்று அதன் அடிப்படையில் கைதிகளின் எண்ணிக்கை விபரத்தைத் தயார் செய்யக் கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் அளிக்கப்பட்ட தகவல்களின் படி வெளிநாட்டு சிறைக்கைதிகளின் எண்ணிக்கையில் இந்தியர்கள் இரண்டாவது இடத்தில் இருக்கின்றனர். இவர்கள் இந்தியா விற்கு அனுப்பப்படுவதன் மூலம் அவரவர் கள் குடும்பத்தினருக்கு அருகிலேயே மீதியு ள்ள தண்டனைக் காலத்தைக் கழிக்க முடியும் என்றும் லண்டன் அரசு கருதுகின்றது.

மேலும் இத்தகைய வெளிநாட்டுக் கைதி களை அவர்கள் நாட்டிற்கு அனுப்புவதன் மூலம் லண்டன் சிறைச்சாலைகளில் நிரம்பி யுள்ள கைதிகளின் எண்ணிக்கையைக் குறை க்க முடியும் என்று அந்நாட்டு அரசு கருது கின்றது. (2)

# மெக்சிக்கோவில் தொடர்ந்து ஆறு தடவை நிலநடுக்கம்

மெக்சிக்கோவில் தொடர்ந்து 6 முறை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. மெக்சிக்கோவின் மலைப் பகுதியான குரெரோ மாநிலத்தில் கடந்த மாதம் ஏற்பட்ட மண்சரிவில் ஒரு பெரிய நகரமே மண்ணுக்குள் புதைந்தது.

இந்த அதிர்ச்சியில் இருந்து அம் மக்கள் இன்னமும் மீளாத நிலையில் அதே பகுதி யில் நேற்று முன்தினம் காலை தொடர்ந்து 6 முறை நிலநடுக்கங்கள் ஏற்பட்டு அப்பகுதியில் வசிப்பவர்களைப் பீதியில் ஆழ்த்தி யுள்ளன.

இவற்றில் 5.21 ரிக்டர் அளவில் பதிவான நிலநடுக்கமே மிகவும் பலமான நிலநடுக்கம் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

சுற்றுலா மையமான அகபல்கோ நகரிலும் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது. அங்குள்ள விடுதிகளில் தங்கியிருந்தவர்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டு வேறு இடங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டனர். (2)




## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த ஆவணி மாதம் நடைபெற்று முடிவடைந்த 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் பாடசாலை அதிபர் உயர்திரு. ச.செல்வானந்தன் அவர்களின் கண்காணிப்பிலும் வகுப்பாசிரியை திருமதி சிவரஞ்சினி முருகானந்தன். ஆசிரியை திருமதி யோகராணி சின்னராசா ஆகியோரின் வழி நடத்தலிலும் யா/கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலையில் இருந்து தோற்றிய மாணவர்களுள் அதிகூடிய புள்ளியாக 171 புள்ளிகளைப் பெற்று பாடசாலைக்கும் ஆசிரியர்களுக்கும் பெற்றோருக்கும் பெருமை தேடித் தந்த எங்கள் தவப்புதல்வி **செல்வி சிவகுமாரன் – தட்சாயினியை எல்லாம் வல்ல நயினையம்பதி நாகபூசணி அம்மன்** அருட்கடாட்சத்துடனும் சந்நிதி வேலவனின் பரிபூரண அருளுடனும் மென்மேலும் பல சித்திகளையும் பலகலைகளையும் பெற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

*பாடசாலை வீதி,*
*பொலிகண்டி, வல்வெட்டித்துறை.*

**வாழ்த்துவோர்:**
*அப்பா - வை.சிவகுமாரன்*
*(பிரகாஸ் கொம்பனி சாரதி)*
*அம்மா - சி.சுபாசினி*
*பேரன் சி.தியாகராசா*
*(கணபதி மோட்டோர்ஸ் உரிமையாளர்)*
*மற்றும் அண்ணாமார், மாமாமார், அத்தைமார், மச்சான்மார், மச்சாள்மார், உற்றார், உறவினர்கள்.*

(4121)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி மீனா இதயசிவதாஸ்
அதிபர்
கிளி/உருத்திரபுரம் ம.வி.



திரு.இ.செபரத்தினராசா
அதிபர்
கிளி/சோரன்பற்று சி.சி.ரி.எம்.எஸ்



திரு.த.பிரபாகரன்
அதிபர்
கிளி/வன்னேரிக்குளம் ம.வி.

*தேசிய கல்வி நிறுவனத்தில் 2013 ஒக்டோபர் 05 இல் நடைபெற்ற விருது வழங்கும் வைபவத்தில் கிளிநொச்சி கல்வி வலயத்தில் இருந்து 'ஆசிரியர் பிரதீபா பிரபா விருது' பெற்ற எமது அதிபர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

**அதிபர்கள் சங்கம், கிளிநொச்சி மாவட்டம்.**

*(சி-5049)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதிகளை காணாத பொன்னகர் 70 வீட்டுத்திட்ட கிராமம்


(கிளிநொச்சி)

**கிளிநொச்சி மாவட்ட பொன்னகர் கிராம அலுவலர் பிரிவில் உள்ள பொன்னகர் 70 வீட்டுத் திட்டத்தில் வசிக்கும் மக்கள் தமக்கு அடிப்படை வசதிகள் எதுவும் கிடைக்கவில்லை என கவலை தெரிவிக்கின்றனர்.**

குடிநீர் வசதிகள் இல்லாது நீர்வசதியுள்ள ஒருசில இடங்களுக்கு மிகவும் சிரமப்பட்டு சென்று தமது குடிநீர்ப் பிரச்சினையை தீர்த்துக் கொள்வதாக கூறுகின்றனர்.

அத்துடன் இந்த 70 வீட்டுத் திட்டத்திற்கு செல்கின்ற பிரதான வீதியில் புகையிரதத் துக்கான தண்டவாளம் இடப்பட்ட நிலையில் உள்ளது.

எனினும் இது உரிய முறையில் புனரமைப்பு செய்யப்படாதுள்ளதால் போக்குவரத்து செய்ய முடியாது மக்கள் சிரமப்படுவதாக தெரிவிக்கின்றனர்.



அத்துடன் புகையிரத சேவை நடைபெறுகின்ற இவ்வேளையில் குறிப்பிட்ட வீதியில் புகையிரதம் வருவதை முன்னே தெரிவிப்பதற்கான சமிக்ஞைகளோ அல்லது புகையிரத கடவைகளோ எதுவும் இதுவரை அமைக்கப் படவில்லை.

இதேபோன்று ஏனைய அடிப்படை வசதிகள் கூட தமக்கு இன்னமும் செய்து தரப்பட வில்லை என இங்கு வாழும் 72 குடும்பங்களும் ஆதங்கப்படுகின்றனர்.

எனவே இந்த் விடயத்தில் கவனம் எடுத்து தமக்கான போக்குவரத்து மற்றும் குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தர வேண்டுமென்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-254)

# சீட்டிழுப்பு பிற்போடப்பட்டுள்ளது



(கிளிநொச்சி)

முதியோர் தின மாதத்தையொட்டி சிவநகர் முதியோர் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்டு எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெற இருந்த அதிர்ஷ்ட இலாப சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் முதியோர் நலன் பேணும் முகமாக நடாத்தப்படும் இவ் அதிர்ஷ்ட இலாபச் சீட்டை பெற்று முதியோர் நலனுக்கு உதவுமாறும் சிவநகர் முதியோர் சங்கத் தலைவர் அ.இரகுபதி அறிவித்துள்ளார். (ம-254)




# அர்ப்பணிப்பான மாணவர்களை ஆசிரியர்களே உருவாக்க வேண்டும்

(பூந்தோட்டம்)

நாட்டின் உன்னதமும் அர்ப்பணிப்பும் கொண்ட எதிர்கால சந்ததியை உருவாக்க வேண்டிய பொறுப்பு ஆசிரியர் சமூகத்திற்கு உண்டு என வவுனியா கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி க. பேணாட் தெரிவித்தார்.

வவுனியா கல்வியியல் கல்லூரியில் இடம்பெற்ற ஆசிரியர் தின நிகழ்வில் தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

ஆசிரியர்களைப் பற்றி பல்வேறு விமர்சனங்கள் உண்டு. எனினும் அதற்கு அப்பால சிந்திக்க வேண்டும். அண்மையில் வவுனியாவில் இடம்பெற்ற அபிவிருத்தி கூட்டமொன்றில் ஆசிரியர்கள், அதிபர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

சட்டத்துறை, வைத்தியத்துறை என்பனவற்றில் இருப்போரை ஆசிரியர்களே உருவாக்கினார்கள்.

அவ்வாறான நிலையில் எவ்விடத்திலாவது சிறுவர் துஷ்பிரயோகங்கள் நடைபெறின் அதனுடன் சேர்த்து அதிபர்,ஆசிரியர்களைப்பற்றியும் செய்திகள் வருகின்றன.

ஏனையவர்களை விட ஆசிரியர்களை சமூகமும் ஊடகங்களும் உற்று நோக்குகின்றன என்றால் அதற்கு காரணம் அவர்கள் சமூகத்தில மிக முக்கியமானவர்கள் என்பதேயாகும்.

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்களின் செவ்வியை பத்திரிகைகளில் பார்க்கின்றோம். ஆனால் அம் மாணவனை உருவாக்கிய ஆசிரியர்களின செவ்வி அவ்வாறு பத்திரிகைகளில் வருவதில்லை. எனினும் மாணவனின் கருத்தினூடாக ஆசிரியரின் சேவையை நாம் காண்கின்றோம்.

பாடசாலை கல்வி சீராக இருக்க வேண்டும். அதுவே முதன்மையானது. அவ்வாறான ஆசிரியர்களை மாணவர்கள் தினமும் நினைவில கொண்டிருப்பர் என தெரிவித்தார். (ம-266)

# பேருந்து சேவை தாமதமாவதால் சிரமத்தை எதிர்கொள்ளும் பயணிகள்


(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் இருந்து கொக்கிளாய் செல்லும் இ.போ.ச பேருந்து நேரம் தாமதித்து செல்வதால் பயணம் செய்யும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பயணிகள் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி உள்ளது.

முன்னர் முல்லைத்தீவில் இருந்து காலை 7 மணிக்கு புறப்படும் இ.போ.ச பேருந்து காலை 8.30 மணிக்கு கொக்கிளாயை சென்றடைந்தது.

இதனால் பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் உரிய நேரத்தில் பாடசாலைக்கு சமுகமளிக்க முடிந்தது.

ஆனால் தற்போது இங்கிருந்து அப்பேருந்து காலம் தாழ்த்தி 7.30 மணிக்கு புறப்படுவதால் 9மணிக்கு கொக்கிளாயை வந்தடைகிறது.



இதனால் கொக்குத்தொடுவாய் அ.த.க பாடசாலை, கருநாட்டுக்கேணி அ.த.க பாடசாலை, கொக்கிளாய் அ.த.க பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களும், ஆசிரியர்களும் 9 மணிக்கே பாடசாலைக்கு செல்ல வேண்டியுள்ளது.


எனவே முன்னர் போன்று 7 மணிக்கு முல்லைத்தீவில் இருந்து இ.போ.ச பேருந்து சேவை இடம் பெறுவதற்கு ஆவன செய்து கல்விச் செயற்பாட்டிற்கு உதவ வேண்டுமென மாணவர்களும் ஆசிரியர்களும் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர். (ம-267)





கிளி/ விவேகானந்த வித்தியாலய ஆசிரியர்தின [illegible] இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஆசிரியர்கள் மற்றும் --- விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் மாணவர் [illegible] படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

597

## தீயவர்களின் போதனை

பீர்பால் மீது பொறாமை கொண்டவர்கள் அக்பரிடம் மேலும் மேலும் அபாண்டப் பழிகளைக் கூறி வந்தார்கள். கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என்பதுபோல் சதிகாரர்களின் சூழ்ச்சியால் அரசர் மனம்மாற ஆரம்பித்தது. பீர்பால் மீது அளவு கடந்த வெறுப்பு ஏற்பட்டுவிட்டது.

ஒருநாள் பீர்பால் மீது ஆத்திரம் கொண்ட பேரரசர், பீர்பால் உமது கோமாளித்தனங்களுக்கு எல்லையே இல்லாமல் போய்விட்டது. எதற்கும் ஒரு எல்லை உண்டு. ஆணவத்தின் உச்சிக்கே சென்றுவிட்ட உம்மை நாட்டை விட்டே வெளியேற்றுகிறேன் என்றார்.

மன்னர் இருக்கும் மனநிலையில் எந்த விளக்கம் அளித்தாலும் பயனில்லை என்ற முடிவுக்கு வந்தார் பீர்பால்.

மன்னர் பெருமானே, தங்கள் ஆணைப்படி இப்பொழுதே நாட்டை விட்டு வெளியேறுகிறேன். தாங்கள் இதுவரை எனக்களித்து வந்த ஆதரவை என்றும் மறக்க மாட்டேன். தாங்கள் மீண்டும் என்னை அழைத்தால் தவிர, இந்த நாட்டுக்குள் வரவே மாட்டேன் என்று கூறிவிட்டு வெளியேறினார்.

நாட்கள் பல நகர்ந்தன. பீர்பால் இல்லாமல் அவையில் கலகலப்பே இல்லை. அவர் இல்லாத குறையை மன்னர் உணர ஆரம்பித்தார். தான் தீயவர்களின் போதனையைக் கேட்டு பீர்பாலை நாட்டைவிட்டு வெளியேற்றிவிட்டதாக உணர்ந்தார். அதற்காகப் பெரிதும் வருந்தினார். அவரைத் தேடி, அழைத்து வருமாறு அண்டை நாடுகளுக்கெல்லாம் ஒற்றர்களையும் காவலர்களையும் அனுப்பினார். எங்கு தேடியும் பீர்பால் கிடைக்கவில்லை.

பீர்பால் நாட்டைவிட்டு வெளியேறி பக்கத்து நாட்டில் உள்ள ஒரு சிற்றூரில் முதியவர் வேடத்தில் ஒரு ஏழையின் குடிசையில் இருந்து வந்தார்.

இந்நிலையில் பீர்பாலைக் கண்டறிய அரசருக்கு ஒரு யோசனை தோன்றியது. அதன்படி பாதி வெளிச்சத்திலும் பாதி இருளிலும் எவன் வருகிறானோ, அவனுக்கு ஆயிரம் பொன் பரிசளிக்கப்படும் என்று நாடு, நகரங்கள் அனைத்திலும் முரசறைந்து தெரிவிக்கச் செய்தார்.

இந்தச் செய்தி பீர்பால் தங்கியிருந்த கிராமத்திலும் தெரிய வந்தது. தன்னை ஆதரித்து வரும் ஏழைக்கு ஏதாவது கைமாறு செய்ய வேண்டும் என்று பீர்பால் எண்ணினார். அவருக்குப் பரிசு கிடைக்கச் செய்வதாகக் கூறினார்.



ஆனால், ஏழையோ முதியவரே இது நடக்கிற காரியமா? ஒரே நேரத்தில் பாதி வெளிச்சத்திலும் பாதி இருளிலும் எவரால் போக முடியும்? என்று கூறினார்.

அதற்கு பீர்பால் நான் கூறுவதைப் போல் நீர் செய்வதாக இருந்தால் உமக்கு நிச்சயம் ஆயிரம் பொன் பரிசு கிடைக்கும் என்றார்.

எனக்கா! ஆயிரம் பொன்னா? நீங்கள் கூறுவது மிகவும் வேடிக்கையாக இருக்கிறது! என்று கூறி வியந்தார் ஏழை. வேடிக்கையல்ல. உண்மையாகத்தான் கூறுகிறேன். நமது குடிசையிலுள்ள கட்டிலைத் தூக்கி உமது தலை மீது வைத்துக் கொள்ளும். உம்மீது பாதி வெளிச்சமும் பாதி இருளும் படிந்திருக்கும். அப்படியே சக்கரவர்த்தி அக்பரிடம் தாங்கள் சென்றால் நிச்சயம் ஆயிரம் பொன் பரிசு கிடைக்கும். இதில் சந்தேகம் வேண்டாம் என்றார் பீர்பால்.

பீர்பால் கூறியது போல் ஏழை மனிதனும் தனது குடிசையிலிருந்த கட்டிலைத் தூக்கிக்கொண்டு அக்பரின் அரசவைக்கு வந்தான். கட்டிலோடு வந்தவனைப் பார்த்த அரசர், என்ன இது என்று கேட்டார்.

தாங்கள் அறிவித்தபடி பாதி இருளிலும் பாதி வெளிச்சத்திலும் வந்துள்ளேன் அரசே! என்றார் ஏழை.

ஏழை அவனது சுய புத்தியில் இவ்வாறு மதிநுட்பமுடன் செயற்பட்டிருக்க முடியாது. இத்தகைய மதியூகம் பீர்பால் ஒருவருக்கே இருக்க முடியும் என்று பேரரசர் உறுதியாக நினைத்தார்.

அந்த ஏழை மனிதனிடம், நான் அறிவித்த போட்டியில் நீர் வென்று விட்டீர். அறிவித்த பரிசை உமக்குத் தெரிவித்தவர் யார் என்பதை நீர் அவசியம் எனக்குத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அரசரிடம் உண்மையை மறைக்கக் கூடாது என்று எண்ணிய அந்த ஏழை மனிதன் மன்னர் பெருமானே! சில நாட்களுக்கு முன், தான் ஆதரவற்றவன் என்று கூறி எங்கள் கிராமத்திற்கு ஒரு முதியவர் வந்தார். அவருக்கு எனது குடிசையில் தங்கிக் கொள்ள இடம்கொடுத்திருக்கிறேன். அவர் தான் இந்த யோசனையை எனக்குக் கூறினார் என்று சொன்னார்.

அந்த முதியவர் வேறு யாருமில்லை. பீர்பால்தான் மாறுவேடத்தில் முதியவராக அந்த ஏழையின் குடிசையில் இருக்கிறார் என்று மன்னர் உறுதி செய்துகொண்டார்.

உடனே அந்த ஏழைக்கு ஆயிரம் பொன் பரிசளித்து அவருடன் தனது பரிவாரங்களை அனுப்பி தக்க மரியாதையுடன் பீர்பாலை அழைத்து வர் அக்பர் கட்டளையிட்டார்.

★★★★★★★★★★★★★★

## 10.2013 08 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1573- எண்பதாண்டுகள் போரில் நெதர்லாந்து ஸ்பெயினுக்கெதிராக முதலாவது வெற்றியைப் பெற்றது.
- 1582- கிரெகொரியின் நாட்காட்டி அறிமுகப்படுத்தப் பட்டதை அடுத்து இத்தாலி, போலந்து, போர்த்துக்கல், ஸ்பெயின் ஆகிய நாடுகளில் புதிய நாட்காட்டியில் இவ்வாண்டின் இந்நாள் இடம் பெறவில்லை.
- 1862- அமெரிக்க உள்நாட்டுப்போர்: அமெரிக்கப் படைகள் கென்டக்கியில் கூட்டமைப்பு படைகளின் முற்றுகையைத் தடுத்து நிறுத்தினர்.
- 1895- கொரியாவின் கடைசி அரசி ஜோசியனின் மின் ஜப்பானியர்களால் கொல்லப்பட்டாள்.
- 1912- முதலாவது பால்கன் போர் ஆரம்பமானது: மொண்டெனேகுரோ துருக்கியுடன் போர் தொடுத்தது.
- 1918- இரண்டாம் உலகப்போர்- பிரான்ஸ் அமெரிக்கக் கோப்ரல் அல்வின் யோர்க் தனியாளாக 25 ஜெர்மனிய இராணுவத்தினரைக் கொன்று 132 பேரைக் கைப்பற்றினார்.
- 1932- இந்திய விமானப்படை நிறுவப்பட்டது.
- 1939- இரண்டாம் உலகப்போர்: ஜெர்மனி மேற்கு போலந்தை இணைத்துக்கொண்டது.
- 1967- கெரில்லா இயக்கத் தலைவர் சேகுவேராவும் அவரது சகாக்களும் பொலிவியாவில் கைப்பற்றப்பட்டனர்.
- 1982- சொலிடாரிட்டி தொழிற்சங்கம் போலந்தில் தடை செய்யப்பட்டது.
- 2005-03.50 **UTC** க்கு காஷ்மீரில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் பாகிஸ்தான், இந்தியா, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் மொத்தம் 74, 500 பேர் கொல்லப்பட்டு 106.000 பேர் காயமடைந்தனர்.

### பிறப்புக்கள்

- 1971-பா.ராகவன், தமிழக எழுத்தாளர்.

### இறப்புக்கள்

- 1992- வில்லி பிரான்ட், ஜெர்மனி நாட்டு ஜனாதிபதி அமைதிக்கான நோபர் பரிசு பெற்றவர் (பி.1913)
- 1959-பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், கவிஞர், பாலாசிரியர் (பி.1930)
- 2003- வீரமணி ஐயர், ஈழத்துக் கவிஞர் (பி.1931)

### வீரமணி ஐயர்



வீரமணி ஐயர் 1931 ஆம் ஆண்டு ஒக்டோபர் 15 ஆம் திகதி யாழ். இணு விலில் பிறந்தார்.

கல்லூரிப் படிப்பை முடித்துக்கொண்டு மேல் படிப்புக்காக இந்தியா சென்ற இடத்தில், இசை, நடனம், நாடகம் என்பனவற்றால் கவரப்பட்டு திருமதி ருக்மணிதேவி அருண்டேல் (பரத நாட்டியம்), எம்.டி.ராமநாதன் (இசை), பாபநாசம் சிவன் (சாகித்ய குரு) ஆகியோரிடம் பயின்றார்.

பின்னர் தாய்நாடு திரும்பி கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் விரிவுரையாளராக இணைந்து 33 ஆண்டுகள் பணியாற்றி, தனது அரச பணியின் நிறைவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் வருகை விரிவுரையாளராகப் பணியாற்றினார். ஏராளமான இசை, நாட்டிய ஆசிரியர்களை உருவாக்கிய இவர் ஏராளமான சாகித்யங்களையும், நாட்டிய நாடகங்களையும் ஆலயங்கள் மீதான பாடல்களையும் இயற்றினார்.

"கற்பகவல்லி நின் பொற்பாதங்கள் பிடித்தேன்..." என்று ஆரம்பிக்கும் ஆனந்த பைரவி இராகத்தை பல்லவியில் கொண்டமைந்து நான்கு இராகங்கள் முத்திரை அமைக்கப்பெற்ற இவரது இராகமாலிகை கீர்த்தனை தென்னிந்தியப் பாடகர் டி.எம்.சௌந்தரராஜனை அவர்களால் பாடப்பெற்ற உலப் பிரசித்திவெற்றதாகும்.

72 மேளகர்த்தா இராகங்களிற்கும்175 தாளங்களிற்கும் இன்னும் இதற்கு மேலாகவும் உருப்படிகளை ஆக்கியுள்ளார். பல இராகங்களின் பெயர்களை முத்திரையமைத்துப் பாடியுள்ளமை இவருடைய ஆக்கங்களின் சிறப்பம்சமாகும். பல விருதுகளுக்கும் பட்டங்களுக்கும் உரித்துடைய என்.வீரமணி ஐயர் 2003 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் காலமானார்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித சக்தி மகத்தான சக்தி



ஆன்மீகம் 01

மனிதனின் சக்திநிலை பற்றிப் பேசும்போது ஏழு சக்கரங்கள் குறித்துக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இவை மனிதனின் உடலில் உள்ளவை. இந்த சக்கரங்கள் பற்றி விரிவாகத் தெரிந்து கொள்வது அவசியம். எல்லா இயந்திரங்களும் சக்கரங்கள் வழியாகவே நகர்கின்றன. சக்கரங்கள் இல்லாமல் ஒரு மாட்டு வண்டியோ, காரோ, நகர முடியாது. எனவே, சக்கரங்கள் இயக்கத்துக்கானவை. மனிதனை ஒரு பரிமாணத்திலிருந்து மற்றொரு பரிமாணத்திற்கு நகர்த்திச் செல்பவை தான் சக்கரங்கள்.

மனித உடலில் நூற்றுக்கணக்கான சக்கரங்கள் உள்ளன. ஆனால், நாடிகள் சந்திக்கும் மையங்களாக ஏழு சக்கரங்களுக்கென்று தனித்தனி இடங்கள் குறிக்கப்பட்டிருந்தாலும் அவை ஒரே இடத்தில் இருக்குமென்று சொல்ல முடியாது.

சக்தி நிலையில் ஏற்படும் வளர்ச்சிகளுக்கேற்ப அவை நகரக்கூடும். இந்த ஏழும் சக்கரங்கள் என்று அழைக்கப்பட்டாலும் அவை வட்ட வடிவத்தில் இராது. முக்கோணங்களாகவே இருக்கும். மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிப்பூரகம், அநாகதம், விசுக்கி, ஆக்ஞை, சஹஸ்ரஹாரம் ஆகிய சக்கரங்களே அவை.

மூலாதாரம்: உடலின் அடிப்படையான சக்கரம், இந்த சக்கரம் தூண்டப்பட்டிருந்தால் உணவு, உறக்கம் ஆகியவற்றிலேயே அதிக நாட்டம் இருக்கும்.

சுவாதிஷ்டானம்: உலகின் பொருள் தன்மை சார்ந்து நுகர்ச்சிகளில் இருகி ஈடுபாட்டிற்குக் காரணமானது.

மணிப்பூரகம்: உடலின் உறுதி மற்றும் நல மேம்பாட்டுக்கானது. இந்த சக்கரம் தூண்டப்பட்டவர்கள் கடும் உழைப்பாளிகளாக- எறும்பைப் போல் சுறுசுறுப்பானவர்களாக இருப்பார்கள்.

அநாகதம்: இந்த சக்கரத்துக்கென்று சில முக்கியத்துவங்கள் உண்டு.



படைப்பாற்றல், அன்பு போன்றவற்றின் ஆதார சக்கரம் இது. முந்தைய மூன்று சக்கரங்களான மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிப்பூரகம் ஆகியவை உலகியல் இன்பங்களுக்கும் வாழ்க்கைக்கும் உரியவை. அநாகதத்தை அடுத்து வருகிற விசுக்தி, ஆக்ஞை, சகஸ்ரஹாரம் ஆகியவை அருள்நிலை, ஆன்மீக வளர்ச்சி போன்றவற்றிற்கு உரியவை.

இந்த இருவேறு நிலைகளுக்கும் மத்தியில் ஒரு சமநிலையான தன்மை அநாகதத்திற்கு உண்டு. இரண்டு இயல்புகளும் கலந்ததாக இது அமைந்துள்ளது. அதனால்தான், மேல் நோக்கிய ஒரு முக்கோணமும் கீழ் நோக்கிய ஒரு முக்கோணமும் பின்னிப் பிணைந்து ஒரு நட்சத்திரத்தை உருவாக்கும் தோற்றமே அநாகதவடிவம்.

மேல் நோக்கிய முக்கோணம் அருளியல் வாழ்வுக்கும் கிழ்நோக்கி முக்கோணம் உலகியல் வாழ்வுக்கும் அடையாளம்.

ஸ்ரீ சக்கரம் போன்ற எந்திரங்கள் முக்காணங்கள் நிரம்பியதாய் இருப்பதைப் பார்த்திருப்பீர்கள். அவை அநாகதத்திலிருந்த உருவானவைதான்.

விசுக்கி: என்பது தீயவற்றை வடிகட்டும் ஆற்றல். சிவ பொருமானுக்கு விசுவகண்டம் நீலகண்டன் என்று பெயர்கள் உண்டு. இதன் பொருள், விஷத்தை வெளியே நிறுத்தியவர். என்பது. விசுக்கி சக்கரம் தூண்டப்பட்டிருந்தால் விஷத்தன்மை உடலுக்குள் நுழையாமல் தடுக்க முடியும். விஷம் என்றால் உணவு மட்டுமல்ல, தீய உணர்வுகள், எண்ணங்கள், சக்திகள் என்று விஷத்தன்மை கொண்டவற்றிலிருந்து விடுபட முடியும்.

ஆக்ஞை: இது ஞானம், தெளிவு போன்றவற்றுக்கான சக்கரம். விசுக்தியைப் பொறுத்தவரை, அந்தச் சக்கரம் தூண்டப்பட்டால் ஆற்றலோடு நிகழமுடியுமே தவிர, சமூகத்தில் நிறைய எதிர்ப்புகள் இருக்கும். சமூக வாழ்க்கையோடு உடன்பட இயலாது. மக்களிடமிருந்து விலகி வாழ்கிற நிலையிலேயே இருப்பார்கள். ஆனால், ஆக்ஞா முழுவதுமாகத் தூண்டப்பட்டவர்கள் சமூகத்தின் அங்கீகாரத்தைப் பெற்ற ஞானவான்களாகத் திகழ்கிறார்கள். (தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# போர்க் கப்பலை அளிக்க மறுத்த ஜோர்ஜ்!



இலங்கைக்கு இரண்டு போர்க் கப்பல்களை வழங்குவது என இந்திய அரசு செய்துள்ள முடிவிற்கு தமிழகத் தலைவர்கள் பலரும் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கு அருகில் இந்தியாவைத் தவிர வேறு எந்த நாடுமில்லை. இந்தியா, இலங்கையின் நட்புநாடு. வேறு எந்த பகை நாடும் இலங்கையின் மீது படையெடுக்கப்போவதுமில்லை. இந்தச் சூழ்நிலையில் இலங்கைக்கு எதற்காகப் போர்க் கப்பல்கள்?

அந்தக் கப்பல்களின் உதவியைக் கொண்டு தமிழக மீனவர்கள் தாக்கப்படுவார்கள். ஒருவேளை எதிர்காலத்தில் சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே மீண்டும் ஒரு மோதல் ஏற்படுமானால் இலங்கை சீனாவுடன் சேர்ந்து கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை.

அந்தக் காலகட்டத்தில் இந்தியா வழங்கியுள்ள போர்க்கப்பல்கள் இந்தியாவிற்கு எதிராகப் பயன்படுத்தப்படும் அபாயமும் உள்ளது. எதையும் யோசித்துப் பாராமல் மகிந்த அரசு எப்படியாவது தாஜா செய்ய வேண்டும் என்பதற்காக இந்தியா செய்கிற இராணுவ ரீதியான உதவிகள் நாளை இந்தியாவிற்கு எதிராகவே திரும்பும் என்பதை யாரும் மறுக்க முடியாது.

கடந்த காலத்தில் இதைப்போன்ற சூழ்நிலை எழுந்தபோது அப்போது பதவியில் இருந்த பிரதமர் வாஜ்பாய் அவர்களும் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணான்டஸ் அவர்களும் என்ன செய்தார்கள் என்பது எண்ணிப் பார்க்கத்தக்கதாகும்.

20-12-2000 அன்று நானும் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்களும் தில்லியில் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜார்ஜ் பெர்ணான்டஸ் அவர்களைச் சந்தித்தோம். சுகன்யா என்றும் போர்க்கப்பலை இலங்கைக்கு இந்தியா வழங்கியிருப்பது குறித்து எங்களுக்குக் கிடைத்த தகவலை அவருக்குத் தெரிவிக்கவே நாங்கள் அவலைச் சந்தித்தோம். அது சம்பந்தமாக இணையத்தளச் செய்தியை அவரிடம் காட்டியபோது அவர் திகைத்துப் போனார். ஆனாலும் இது சம்பந்தமாக அலுவலகம் சென்று கோப்புக்களை எடுத்துப் பார்த்த பிறகு உண்மை தெரியும் என்று கூறிவிட்டு மீண்டும் இரவு தன்னைச் சந்திக்கும்படி வேண்டிக் கொண்டார். அதற்கிணங்க இரவு அவரைச் சந்தித்தபோது கப்பல் விற்கப்பட்டிருப்பது உண்மைதான் என்றும் பிரதமராக குஜ்ரால் இருந்தபோது இதற்கான உடன்பாடு செய்துகொள்ளப் பட்டது. அதற்கிணங்க சுகன்யா கப்பல் இலங்கைக்கு அளிக்கப்பட்டுவிட்டது. மற்றொரு புதிய போர்க்கப்பல் ஒன்று விசாகப்பட்டினத்தில் கட்டப்பட்டு வருவதாகவும் அதை நான் நிறுத்திவிட்டதாகவும், போர்க்கப்பலோ அல்லது ஆயுதங்களோ இலங்கைக்கு வழங்கும் பேச்சுக்கே இடமில்லை என்றும் அவர் திட்டவட்டமாக எங்களிடம் கூறினார்.

இதைக் கேட்டு நாங்கள பெரும் மகிழ்ச்சியடைந்தோம். இதுபோன்ற முக்கியப் பிரச்சினைகளில் பிரதமர் வாஜ்பாய் அவர்களின் ஒப்புதல் இல்லாமல் ஜோர்ஜ் பெர்ணான்டஸ் இதைச் செய்திருக்க முடியாது என்பதையும் அறிந்தோம். அதற்காக அவருக்கும் பிரதமர் வாஜ்பாய் அவர்களுக்கும் எங்களின் இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்தோம்.

இந்தியக் கடற்படையும் சிங்களக் கடற்படையும் இணைந்து கூட்டுரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட முடிவு செய்திருப்பதாக வெளிவந்துள்ள செய்தியையும் அவர் கவனத்திற்குக் கொண்டு சென்றோம். அச்செய்தியை அவர் திட்டவட்டமாக மறுத்தார். சிங்களக் கடற்படையுடன் இந்தியக் கடற்படை கூட்டாக ரோந்து செய்யும் பணி ஒருபோதும் மேற்கொள்ளப்பட மாட்டாது என உறுதியளித்தார். மேலும் இலங்கையைச் சுற்றிலும் இந்தியக் கடற்படை பாதுகாவல் பணியினை மேற்கொண்டிருந்ததையும், தான் நிறுத்திவிட்டதாகவும், இதன் காரணமாக கடற்படைத் தளபதி கடும் எதிர்ப்புத் தெரிவித்தார் என்றும், அந்த எதிர்ப்பை தான் ஏற்கவில்லை என்றும் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியின் விளைவாகவும் மேலும் பல குற்றச்சாட்டுக்களின் பெயரிலும் கடற்படைத் தளபதி பதவி நீக்கம் செய்யப்பட்டார் என்பதையும் எங்களுக்கு அவர் நினைவுபடுத்தினார்.

பிரதமராக ராஜீவ் இருந்த காலத்திலிருந்து பிரதமர் குஜ்ரால் ஆட்சிக் காலம் வரையிலும் இடையில் வி.பி.சிங் ஆட்சிக்காலம் தவிர, காங்கிரஸ் கட்சியோ அல்லது அக்கட்சியின் ஆதரவுபெற்ற அரசுகளோதான் தொடர்ந்து பதவியிலிருந்து வந்துள்ளன. எனவே, இலங்கை இனப்பிரச்சினையைப் பெறுத்தவரை ராஜீவ் கையாண்ட தவறான அணுகு முறையையே மற்ற அரசுகளும் தொடர்ந்து கையாண்டு வந்திருக்கின்றன. ராஜீவின் கொள்கை தவறான கொள்கை. சிங்கள அரசுக்கு ஆதரவான ஒரு நிலைப்பாட்டினையே இந்த அரசுகள் பின்பற்றி வந்திருக்கின்றன. பிரதமர் வாஜ்பாய் பொறுப்பேற்ற பிறகு இந்த நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டது. அதற்கு ஜார்ஜ் பெர்ணான்டஸ் பாதுகாப்புத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றது முக்கியமான காரணமாகும்.

ஆனால், 2003 ஆம் ஆண்டில் மன்மோகன்சிங் அரசு பதவியேற்ற பிறகு சிங்கள இராணுவ வீரர்களுக்கு இந்தியாவில் பயிற்சி அளிப்பது மீண்டும் ஆரம்பமானது. அதுமட்டுமல்ல, சிங்கள இராணுவத்திற்கும் கடற்படைக்கும் தேவையான கனரக ஆயுதங்கள் உட்பட அனைத்தையும் இந்திய அரசு வழங்கிவந்தது. அதன் காரணமாகவே 2009 ஆம் ஆண்டில் ஒன்றரை இலட்சத்திற்கும் மேற்பட்ட ஈழத்தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட ஈழத்தமிழர்கள் ஏதிலிகளானார்கள். ஈழத்தமிழர்கள் சந்திக்க நேர்ந்த இந்த அவலத்திற்கு இந்திய அரசு முக்கிய காரணமாக இருந்தது என்பது அப்பட்டமான உண்மை.

வரலாறு காணாத வகையில் ஈழத் தமிழர்கள் சந்திக்க நேர்ந்த அழிவிற்கும் தமிழக மீனவர்கள் 30 ஆண்டு காலத்திற்கு மேலாக சிங்களக் கடற்படையினரால் தாக்கப்பட்டு 800 பேருக்கு மேல் உயிரிழந்ததற்கும் காரணமான இந்திய அரசு தனது போக்கை மாற்றிக்கொள்ளவில்லை. தொடர்ந்து தமிழர்களுக்கு எதிராக சிங்கள அரசை ஆதரிக்கும் கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறது. அதன் தொடர்ச்சியே 2 போர்க் கப்பல்களை இலங்கைக்கு வழங்குவதாகும்.

-பழ.நெடுமாறன்-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பழைய இடத்தில்

# முல்லை. அரச பேருந்து நிலையம் இயங்க நடவடிக்கை எடுங்கள்

(முல்லைத்தீவு)

**156 வருட பழைமை வாய்ந்த முல்லைத்தீவு பட்டின அரச பேருந்து நிலையம் ஆரம்பிக்கப்பட்ட இடத்திலேயே தொடர்ந்தும் இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.**



இப்பேருந்து நிலையம் தற்பொழுது வேறிடத்தில் இயங்கி வருகிறது. கரைதுறைப் பற்று பிரதேச செயலர் பிரிவில் ஏ-34 வீதியில் முல்லைத்தீவு நகர மையப்பகுதியில் முல்லைத்தீவு பொதுச் சந்தைக்கு அருகில் 1857 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. 1990 ஆம் ஆண்டு வரை அவ்விடத்திலேயே இயங்கியும் வந்தது.

இவ் அரச பேருந்து நிலைய காணி 1987 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கரைதுறைப் பற்று பிரதேச சபைக்குச் சொந்தமாக்கப் பட்டது. இதன்பின் இப் பேருந்து நிலையம் 2009 ஆம் ஆண்டிலிருந்து போரின் காரணமாக இயங்காது இருந்தது. மீண்டும் 2011 ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்துடன் இயங்க ஆரம்பித்தது.

பின்னர் இது 2012 ஆம் ஆண்டு பொதுச் சந்தையின் புனரமைப்புக்காக மாவட்ட செயலகத்திற்கு முன்னால் தற்காலிகமாக இயங்கி வருகிறது.

இப்பேருந்து நிலையத்தை முன்னர் இயங்கிய இடத்தில் இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதே அப்பகுதி மக்களின் கோரிக்கை ஆகும்.

முல்லைத்தீவு அபிவிருத்தி அடைந்த நகரமாக மாறுவதற்கு இப்பேருந்து நிலையம் காரணமாக இருந்துள்ளது.

போருக்கு முன்னர் 22 இ.போ.ச பேருந்துகள் இந்நிலையத்தில் சேவையில் ஈடுபட்டன. தற்போது 15 இ.போ.ச பேருந்துகள் சேவையில் ஈடுபடுகின்றன.

சிலாவத்தை, சிலாவத்தை தெற்கு, கள்ளப்பாடு வடக்கு, கள்ளப்பாடு தெற்கு, வண்ணாங்குளம், முல்லைத்தீவு பட்டினம், முல்லைத்தீவு தெற்கு, மணற்குடியிருப்பு, கோவிற்குடியிருப்பு, செல்வபுரம் ஆகிய கிராம சேவையாளர் பிரிவில் உள்ள 20 கிராமங்களைச் சேர்ந்த 2ஆயிரத்து522 குடும்பங்கள் பயன்படுத்துகின்றன.

முன்னைய இடத்தில் பேருந்து நிலையம் அமையாது வேறிடத்தில் தற்போது அமைந்துள்ளதால் மக்களின் நேரம், பணம் என்பன வீண் விரயமாகின்றன.

எனவே அரச அதிபரும் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தலைமைக் காரியாலயமும் இணைந்து போரால் சேதமடைந்துள்ள பேருந்து நிலைய கட்டடத்தை புனரமைத்து அதே இடத்திலேயே இயங்க ஆவன செய்யுமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளனர்.

வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களின் அரச பேருந்து நிலையங்கள் அம் மாவட்டத்தின் நகரத்திலேயே அமைந்துள்ளன.

1958 - 1990 வரை வடமாகாண இ.போ.ச சபைக்கு அதிக வருவாயை பெற்றுக் கொடுத்த அரச பேருந்து நிலையம் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-267)

## பண்டாரவன்னியன் விழா



(பூந்தோட்டம்)

மாவீரன் பண்டாரவன்னியனின் 202 ஆவது ஆண்டு நினைவு விழா வவுனியாவில் எதிர்வரும் 31 ஆம் திகதி கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

வவுனியா நகரசபையும் பண்டாரவன்னியன் நற்பணி மன்றமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந் நிகழ்வில் 31 ஆம் திகதி காலை 8.30 தொடக்கம் 9.30 மணிவரை வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள பண்டாரவன்னியன் சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி நிகழ்வு இடம்பெற்று காலை 9.30 தொடக்கம் நண்பகல் 1.30 மணிவரை நகர சபை கலாசார மண்டபத்தில் கலை நிகழ்வுகளும் நினைவுப்பேருரைகளும் இடம்பெறவுள்ளன.


இந் நிகழ்வில் முன்னாள் வவுனியா அரசாங்க அதிபர் லங்காநேசன் மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி மு. சிற்றம்பலம் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வுகளில் நிருத்திய நிகேதன மாணவிகளின் வரவேற்பு நடனமும் சி. வையாபுரிநாதனின் வரவேற்புரையும் இடம்பெறவுள்ளதுடன் நா.சேனாதிராசாவின் தலைமையுரையும் தமிழ் மாமன்றத்தின் கவியரங்கும் கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் பண்டாரவன்னியன் குறுநாடகமும இடம்பெறவுள்ளது.

இதனையடுத்து வரலாற்று ஆய்வாளர் அருணா செல்லத்துரை மற்றும் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் ஆகியோரின் பண்டாரவன்னியன் வரலாற்று நினைவு பேருரையும் பாடசாலை மட்டத்தில் தமிழ் மன்றத்தால் நடத்தபட்ட பண்டாரவன்னியன் கவிதை, கட்டுரை, பேச்சு போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கல் நிகழ்வும் இடம்பெற்று பின்னர் அதிதிகள் பண்டாரவன்னியன் நினைவு சின்னம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். (ம-266)




## புதையல் தோண்டிய நால்வர் கைது



(பூந்தோட்டம்)

வவுனியா செட்டிகுளம் முசல்குத்தி பிரதேசத்தில் புராதன ஆலயமொன்றில் புதையல் தோண்டிய நால்வர் செட்டிகுளம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புராதன ஆலயம் அமைந்துள்ள பகுதியில் புதையல் தோண்டப்படுவதாகப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜி.எம். சோமரத்தின தலைமையிலான குழுவினர் சம்பவ இடத்திற்கு சென்று அங்கு புதையல் தோண்டிய அவிசாவளை, காலிஎல, கிளிநொச்சி, செட்டிகுளம் பிரதேசங்களைச் சேர்ந்த நால்வரை கைது செய்ததுடன் புதையல் இருக்கும் இடத்தையும் ஆய்வு செய்வதற்கான அதி நவீன கருவியொன்றையையும் கையடக்க தொலைபேசியொன்றையும் கைப்பற்றியுள்ளனர். (ம-266)

## திருடர்கள் கைவரிசை




(பூந்தோட்டம்)

வவுனியாவின் பல பகுதிகளிலும் மீண்டும திருடர்கள் தமது கைவரிசையை காட்டத் தொடங்கியுள்ளனர் என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் திருநாவற்குளம், வைரவ புளியங்குளம் மற்றும் சோயா ஒழுங்கை பகுதிகளில் உள்ள வீடுகளில் திருடர்கள் புகுந்து பெறுமதி மிக்க பொருட்களை எடுத்து சென்றுள்ளனர்.

பொருட்களை திருட்டு கொடுத்தவர்கள் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ள நிலையிலும் தொடர்ச்சியாக திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியே வருகின்றனர்.

இந் நிலையில் சில கிராமங்களில் விழிப்பு குழுக்கள் அமைக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-266)



இலங்கை வங்கியின் வவுனியா கிளையின் ஏற்பாட்டில் மெகா 2 வாரோவ் சீட்டிழுப்பின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வாடிக்கையாளர் ஒருவருக்கு பரிசில் வழங்கப்படுவதைப் படத்தில் காணலாம்.
(படம்:- பூந்தோட்டச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகைப்பிடிக்கும் பழக்கம் உங்களுக்கு உண்டா? கைவிட விரும்புகிறீர்களா...? முயலுங்கள் உங்களால் முடியும்!



ஒரு பழக்கத்தை கற்றுக் கொள்வது என்பது மிக சுலபம். ஆனால் அதனை கை விடுவது தான் மிகவும் கடினமானது. அதுவும் அதற்கு அடிமையாகி விட்டால் அவ்வளவுதான். அப்படி ஒரு முக்கிய மான தவிர்க்கப்பட வேண்டிய பழக்கம் தான் புகைபிடிக்கும் பழக்கம். மனித னுக்கு மிகவும் சவாலான இப் பழக்க த்தை கைவிடுவதென்பது மிகவும் சிரம




மானதே. தீய பழக்கங்களுக்கு அடிமை யாகி, அதைக் கைவிடும் போது, உடலும் மனதும் பல பக்கவிளைவுகளை சந்திக் கும். அதற்கு புகைபிடிக்கும் பழக்கம் ஒன்றும் விதி விலக்கல்ல.

புகைபிடிக்கும் பழ்க்கத்தை கைவிட பல வழிகள் உள்ளன. அவற்றுள் நிகோ ட்டின் பேட்ச், ஹிப்நாசிஸ் மற்றும் பரிந்து ரைக்கப்பட்ட மருந்துகள் என்பன சில வழிகளாகும். ஆனால் எந்தவித மருந் துகளும் இல்லாமல், இப் பழக்கத்தை எதிர்த்து, ஒவ்வொரு நாளும் போராடி, அதனை நிறுத்திவிடலாம் என்பது பல பேருக்கு தெரியாது. இப்போது அந்த புகைபிடிக்கும் பழக்கத்தை இயற்கை முறையில் கைவிடுவது எப்படி என்பது குறித்து சில ஆய்வுகள் தெரிவிக்கின் றன.

**நாமாகவே முயற்சி செய்ய வேண்டும**

புகைபிடிக்கும் பழக்கத்தை அறவே நிறுத்த, புகைபிடிக்கும் வழக்கம், உங்கள் சார்பு நிலையின் உண்மைகள் நிலை மற்றும் உங்களுக்கு ஏற்ற உத்திகளை முதலில் கண்டறிய வேண்டும். புகை பிடிப்பதில் நீங்கள் எந்த வகையை சார்ந்த வர், வாழ்க்கையில் எந்த தருணம் உங் களை புகைபிடிக்க தூண்டுகிறது மற்றும் ஏன் என்பதையும் கண்டறியுங்கள். இத னால் இந்த பழக்கத்தை நிறுத்த எவ் வாறான முயற்சியை அல்லது நடவடிக் கையை கையாளலாம் என்பதை நீங்கள் முடிவு செய்யலாம்.

**உடற்பயிற்சியில் ஈடுபடுதல்**

புகைப்பதற்காக ஏங்குவதை உடற்ப யிற்சி குறைக்கும். அதனால் இந்த பழக்க த்தை நிறுத்தும் போது, மிகவும் கஷ்டமாக இருக்காது. சிகரெட் வேண்டும் என்று தோன்றினால், உடனே உடற்பயிற்சிக் கான பாதணிகளை அணிந்து ஓடத் தொட ங்குங்கள்.

இல்லாவிட்டால், செல்ல நாயை கூட்டிக் கொண்டு ஒரு நடைப்பயிற்சிக்கு செல்லு தல், தோட்டத்தில் களை எடுத்தல் போன்ற சுலபமான உடற்பயிற்சியில் ஈடுபட்டால் கூட போதுமானது. இந்த புகைத்தல் பழக்கத்தை கைவிட்டதால், உங்களை எரிக்கும் கூடுதல் கலோரிகளால், உங்கள் உடல் எடையும் குறையும்.

**நண்பர்களிடம் சவால் விடுங்கள**

நண்பர்களிடம் இந்த திகதிக்குள் இந்த பழக்கத்தை கைவிடுவதாக சவால் விடுங் கள். அந்த சவாலில் நீங்கள் வெற்றி பெறுவதற்கு, உங்கள் நண்பர்கள் உங்க ளுக்கு ஆதரவாக இருப்பார்கள்.

**மதுபானங்கள் மற்றும் இதர பான ங்களை தவிர்க்கவும்**

மதுபானம் பருகினால், புகைபிடிப்ப தற்கு அதுவே பெரிய தூண்டுதலாக விளங்கும். அதனால் இப்பழக்கத்தை கைவிடும் போது, மதுபானம் குடிப்பதை குறைத்துக் கொள் ளவும். சோடா குடிபானங் கள் தேநீர் மற்றும் கோப்பி போன்ற பானங்கள் என்பன சிகரெட்டை சுவையாக்கும். அத னால் வெளியில் செல்லும் போது, அதிக அளவில் தண்ணீர் மற்றும் பழச்சாறு குடியுங்கள். இப்படி மாறும் போது, சிகரெட்டை நாடுவதை சிலபேர் குறைத்து கொள்வர்.

**மன அழுத்தத்தை கட்டுப்படுத்தவும்**

ஆண்கள் புகைபிடிக்க முக்கிய காரணம், நிகோட்டின் அவர்களை அமை திப்ப டுத்தும் என்பதால் தான். அதனால் இப்பழக்கத்தை கைவிடும் போது, மன அழுத்தத்தை கட்டுப்படுத்த வேறொரு மாற்று தேவைப்படும்.

அதனால் தொடர்ந்து மசாஜ் செய்து கொள்வது, அமைதியான பாடல்களை கேட்பது, யோகாவை கற்றுக் கொள்வது போன்றவைகளில் ஈடுபடுங்கள். முடிந் தால் இந்த பழக்கத்தை கைவிட்ட சில வார ங்களுக்கு உணர்வெழுச்சி கொள்வதை தவிர்க்கவும்.

**பழங்களும் காய்கறிகளும்**

புகைபிடிக்கும் முன் பால், செலரி கீரை, கரட், பழங்கள் மற்றும் காய்கறிகளை உண்ணுவதால், புகைபிடிக்கும் போது கசப்பான சுவையைக் கொடுக்கும். அத னால் குடித்து கொண்டிருக்கும் சிகரெட்டை கூட, பாதியிலேயே தூக்கி எறிந்து விடு வீர்கள்.

**நண்பர்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள**

நண்பர்கள் அல்லது குடும்பத்தார்கள் உங்களை இந்த பழக்கத்தை கைவிட சொன்னால், துணைக்கு அவர்களில் யாரையாவது சேர்த்துக் கொள்ளுங்கள். இப்படி துணைக்கு ஆள் இருக்கும் போது, உங்கள் வைராக்கியம் இன்னமும் அதிக ரிக்கும்.

**விற்றமின் சி அடங்கியுள்ள உணவுகளை உண்ணுங்கள**

விற்றமின் சி அதிகமாக உள்ள தோடை, எலுமிச்சை, நெல்லிக்காய் மற்றும் கொய் யாப்பழம் போன்றவைகளை சாப்பிட்டால், புகைபிடிக்கும் தூண்டுதல் குறையும். அதற்கு காரணம் சிகரெட், உடலில் உள்ள விற்றமின் சி அளவை குறையச் செய் யும். இதனால் உடலில் விற்றமின் சி குறைபாடு ஏற்பட்டு, நிகோட்டின் நிரம்பி விடும்.

**உங்களுக்கு நீங்களே பரிசளியுங்கள்**

பல உடல்நல நன்மைகளை யும் தாண்டி, சிகரெட்டை கைவிட்டால் பணம் மிச்சமாவதும் மிக பெரிய நன்மையே. அப்படி மிச்சப்படுத்திய பணத்தின் ஒரு பகுதியை உங்களது வேறுதேவைகளு க்கு மகிழ்ச்சியாக செலவிடுங்கள்.

இவை அனைத்திலும் உங்களுக்கு நெருக்கமான வைத்தியர் ஒருவரது அல்லது வைத்தியசாலை வைத்தியரது ஆலோசனையின் பேரில் தொழிற்படு வதும் சிறந்த முறையாகும். மேற்படி நடைமுறைகளை கையாளும் போதும் வைத்தியர்களின் நேரடி ஆலோச னை களை பெறுவதும் சிறப்பானதாகும்.

## ஆசிரியரை தாக்கிய பிக்குகள்

ஆசிரியர் தினமன்று பௌத்த பிக்குக ளினால் ஆசிரியர் ஒருவர் தாக்கப்பட்டுள்ளார்.

பண்டாரகம பிரதேசத்தில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஊர்வலமொன்றில் பங்கேற்ற மாணவ, மாணவியருக்கு வழங் கப்பட்டபால் பக் கற்று கள் காலா வதியானவை என அவ் ஆசிரியர் தெரிவித்துள்ளார். இதனால் ஆத்தி முற்ற நிகழ்வு ஏற்பாட்டாளர்களான பௌத்த பிக்கு கள், ஆசிரியரை விஹாரைக்கு அழைத்துச் சென்று அவரைத் தாக்கியுள்ளனர்.

இதனால் ஆசிரியர் காயத்துள் ளானார். சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய் யப்பட்டுள்ளது. (அ-2)

## தங்க பிஸ்கட்டுக்களை விழுங்கி சென்னை புறப்பட முயன்றவர் கைது

(கொழும்பு)

இருபது தங்க பிஸ்கட்டுக்களை விழுங்கிய நிலையில் இலங்கையிலிருந்து சென்னை க்கு புறப்பட முயற்சித்த இரண்டு இந்திய பிரஜைகளை சுங்க அதிகாரிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்துள்ளனர்.

இருவேறு சந்தர்ப்பங்களின் போதே இவ் விருவரும் அண்மையில் கைது செய்யப்பட்ட தாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

46 மற்றும் 40 வயதுகளையுடைய இரு நபர்களே தனித்தனியாக 10 தங்க பிஸ்கட் டுக்களை விழுங்கிய நிலையில் சென்னை நோக்கி விமானத்தில் பறக்க முயற்சித்தி ருந்தனர்.

சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட மேற்படி இருவரும் நீர்கொழும்பு நீதவானின் உத்தரவின் பேரில் நீர்கொழும்பு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விழுங்கப்பட்டுள்ள பிஸ்கட்டுக்களை முறைப்படி வெளியேற்றுவதற்கான சிகி ச்சை முறைகள் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன. (அ-2)

## வினாவிடை போட்டியில் வெற்றி பெற்றோர்

அகில இலங்கை சைவப்புலவர்சங்கத்தினால் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட சைவ சமய வினா விடை போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி முதலாம் இடம் மு.நித்தியமலர் (கிளிநொச்சி மத்திய கல்லூரி), இரண்டாம் இடம் சி.நிருஷாங்கினி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), (இருவர் மூன்றாம் இடம் பெற்றுள்ள னர்) செ.ரிஷாஸினி (கிளிநொச்சி மத்திய கல் லூரி), ஜெ.ஜெனுசியா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), ஐந்தாம் இடம் தி.மதுஷா (கிளிநொச்சி மத்திய கல்லூரி) ஆகியோர் பெற்றுள்ளனர். வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ள பட்டமளிப்பு விழாவில் வழங் கப்படவுள்ளன. (அ-7)




கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தின் ஆங்கில தின நிகழ்வு அண்மையில் பாடசாலையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களையும் மாணவர்களின் கலை நிகழ்வினையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் அரச நிர்வாகம் முடக்கம், ஆப்கான் போர் நடக்கும்!

*சமஷ்டி நிர்வாகத்தின் அரைவாசிப் பகுதியை மூடிவிட்டு, தொலைக் காட்சி ஒன்றின் நேர்காணலில் அமெரிக்க அதிபர் சொன்ன முக்கிய மானசெய்தி, அமெரிக்காவில் அரச நிர்வாகம் முடக்கப்பட்டாலும், ஆப்கானில் போரைக் கைவிடமாட்டோம்.*

அமெரிக்க அரசின் பெருமளவிலான நிர்வாகத்திற்கு காலவரையறையற்ற விடுமுறை, சுமார் எட்டு இலட்சம் அரச ஊழியர்களுக்கு சம்பளமில்லாத விடுப்பு. பனிப் பொழிவு காலம் வருமுன், மியாமி கடற்கரைக்கு உல்லாசப் பயணம் மேற்கொள்ளச் சொல்லும் வசந்த அழைப்பு அல்ல இது. அமெரிக்கா வின் நிர்ணயிக்கப்பட்ட கடன் எல்லை (Dept ceiling) 74-வது தடைவையாக மீறப்படுகிறது. அதனால், உருவான பிரச்சிளையே இது.

அமெரிக்க காங்கிரசிற்கும் செனட் சபைக்கும் ஒபாமா கெயாரில் முரண்பாடு வந்ததால், அரசின் கட்டமைப்பே ஆட்டம் கண்டு விட்டதென எண்ணக் கூடாது. இவ்வாறான தோற்றப்பாட்டினை உருவாக்கவே உலகமைய நீரோட்ட ஊடகங்கள் விரும்புகின்றன.

சந்தையை சமாதானப்படுத்த முதிர்ச்சியடையும் கடன்களை, முறிகளை மீள வாங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக வாங்கும்போதே அமெரிக்காவின் வங்குரோத்து நிலைமை அம்பலமாகிவிட்டது. ஒவ்வொரு மாதமும் இதற்காக $85 பில்லியன் செலவிட்டார் சமஷ்டி கையிருப்பு மையத்தின் தலைவர் பென் பெர்னாங்கி. இப்பணத்தில் திறைசேரி மற்றும் வீட்டுக்கடனிற்கு உத்தரவாதம் வழங்கும் பிணையங்கள் வாங்கப்பட்டது.

இத்தகைய சொந்தக் கடனைத் தானே வாங்கும் விளையாட்டில் மாற்றம் ஏற்படப்போவதாக அறிவித்தல் வந்தவுடன், மீண்டும் அமெரிக்க திறைசேரி முறிகளை வாங்குவதற்கு உலகின் முதலீட்டு முதலைகள் பாய்ந்தோடிச்சென்றன. வட்டி வீதம் அதிகம் என்பதுதான் முக்கிய காரணம்.

நிதி நிறுவனங்களாக இருந்தாலும் சரி, அல்லது காப்பரேற் நிறுவனங்களாக இருந்தாலும் சரி, அவற்றின் தலையாய நோக்கம் இலாபம் தான். இலாபம் என்பது கெட்ட வார்த்தையல்ல என்று பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரோன் கூறியதை சகல லண்டன் பத்திரிகைகளும் தலைப்புச் செய்தியாக வெளியிட்டதையும நினைவிற் கொள்வோம்.

ஆகவே, அவை செல்லும் போது சும்மா செல்லவில்லை. கூடிய இலாபத்திற்காக ஏற்கனவே முதலீடு செய்திருந்த வெளிநாட்டு முறிகளை, பிணையங்களை விற்றபின்பே அமெரிக்கா சென்றன.

அதேவேளை, இந்திய நாணயத்தின் மதிப்பு அண்மைக்காலமாக தொடர் சரிவற்கு உள்ளாகும் நிகழ்விற்கு இதுதான் முழுமுதற் காரணியென புதிய மத்திய வங்கித் தலைவர் ரகுராம் ராஜன் கூறியது குறிப்பிடத்தக்கது.

2008 ஆம் ஆண்டு பொருளாதாரப் பின்டைவின் பின்னர், தற்போது அமெரிக்க அரசிற்கு மூடுவிழா என்று ஆரம்பத்திருக்கும் இப்பிரச்சினையால், $15.7 ட்ரில்லியன் பொருளாதாரத்தைக் கொண்டிருக்கும் அமெரிக்கா, 300 மில்லியன் டொலர்களை தினமும் இழக்குமெனக் கணிப்பிடப் படுகிறது.

இதுவொரு சிறுதொகை என்றும், இதனையிட்டு ஏன் பங்குச் சந்தைக்காரர்கள் அச்சப்படவேண்டும் என்று கூறுவோரும் இருக்கின்றார்கள். இங்குள்ள பிரதான சிக்கல் என்னவென்றால், அமெரிக்கத் திறைசேரியின் கடன் வாங்கும் அளவின் எல்லையைத் திறைசேரி தொட்டுவிடும் நிகழ்வு, அக்டோபர் 17 இல் வருகிறது.

கடன் எல்லையை அதிகரிப்பதற்கு எதிரணியான குடியரசுக் கட்சி இடையூறாக இருப்பதாக ஒபாமா கருதுகிறார்.

இதனை நேரடியாகக் கூறாமல், தான் கொண்டுவரும் சுகாதார நலன் சார் சட்டத்திற்கு எதிராக குடியரசுக் கட்சியினர் போர்க்கொடி தூக்குவதாகவும், அதனால், அடுத்த ஆண்டிற்கான வரவு- செலவுத்திட்டத்தை எதிர்ப்பதாகவும், இதன் எதிர்வினையாக இலட்சக் கணக்கான அமெரிக்கக் க்டும் உழைப்பாளர்களுக்கு குறைந்த செலவில் கிடைக்கக்கூடிய சுகாதார காப்புறுதியை இவர்கள் தடுப்பதாக அமெரிக்க அதிபர் ஒபாமா கூறுவது, அக்கோடபர் 17 விவகாரத்தை திசை திருப்ப மேற்கொள்ளும் முயற்சி என்று பொருளியல் நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

இப்போது, அமெரிக்க அதிபர் எதிர்கொள்ளும் பாரிய பிரச்சினை அரச கடன் எல்லையை நீடிக்கும் விவகாரமாகும்.


இதைச் செய்யாவிட்டால் செலவினைக் குறைக்க வேண்டும். ஏற்கனவே கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி, $16.394 டிரில்லியன் என்கிற சட்டபூர்வமான கடன் வாங்கும் எல்லையின் விளிம்பினை திறைசேரி தொட்டுவிட்டது.

இதுவரை ஏதோவொரு வகையில் அதனைச் சமாளித்துக் கொண்டிருக்கிறது திறைசேரி. ஆனாலும், உள்நாட்டு நிதிக் கொடுப்பனவுகளுக்காக அதனால் புதிதாக கடன் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் தான் எதிர்க்கட்சியினால் வரவுசெலவு திட்டத்தில் மோதல் நிலை உருவாகியுள்ளது. ஆனாலும், எதிர்க்கட்சியினர் எத்தனை இடையூறுகளை விளைவித்தாலும், சுகாதார நலன் திட்டத்தை தான் கைவிடப்போவதில்லை என்று இம் மாதம் 1ஆம் திகதியன்று அதிபர் ஒபாமா தெளிவாக அறிவித்துள்ளார். இருப்பினும் ஒபாமாவின் சுகாதார காப்புறுதித் திட்டத்தை மேலும் ஒரு வருடத்திற்கு இழுத்தடிப்பதுதான் குடியரசுக்கட்சியினரின் திட்டமாகும்.

இவ்வாறான குடியரசு- ஜனநாயக கட்சி மோதல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், அமெரிக்க அரசியலமைப்பின் 14வது திருத்தச் சட்டமானது, கடன் எல்லையை அதிகரிக்கும் அதிகாரத்தை அதிபருக்கு வழங்குமெனக் கூறப்படுகிறது. அது குறித்தான திறந்தவெளி உரையாடலுக்கு இடமிருப்பதாக சட்ட வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கடன் வாங்கும் அளவின் உச்வரம்பு என்றால், என்ன? அதனை எக்காரணிகள் தீர்மானிக்கின்றன? அந்த வரம்பினை மீறிச்சென்றால், என்ன நடக்கும்? என்பது போன்ற கேள்விகளுக்கான பதில்கள் ஆழமாக விவாதிக்கப்பட வேண்டியவை.

அமெரிக்காவில் இதன் வரலாறு 1917இல் இருந்து ஆரம்பமாகிறது.




முதன் முதலாக $11.5 பில்லியன் டொலர் நிர்ணயம் செய்யப்பட்டது. இடையில் இரண்டாம் உலக யுத்த காலத்தில், அதாவது, 1940 இல் $43 பில்லியனாக உயர்த்தப்பட்டு, 2011 இல் $16.7 ட்ரில்லியன் டொலர்களாக இந்தக் கடன்பெறும் அளவின் உச்ச நிலை அதிகரிக்கப்பட்டது.

மார்ச் 1962 இலிருந்து இற்றைவரை 74 தடவைகள் கடன் உச்சவரம்பு மாற்றப்பட்டாலும், இதனை சீராக வைத்திருக்கும் பொருண்மிய சூத்திரத்தை இந்த தாராளவாத உலகமயமாக்கல்வாதிகள் இன்னமும் கண்டு பிடிக்கவில்லை.

இந்த உச்சவரம்பு நிர்ணய விளையாட்டு, இனி எமக்குத் தேவையில்லையென்று கடந்த ஜனவரி மாதமளவில், சமஷ்டி கையிருப்பு நிதியத்தின் தலைவர் பென் பெர்னாங்கி சலிப்போடு கூறுமளவிற்கு அமெரிக்காவின் பொருளாதார நிலைமை மோசமாக இருக்கிறது.

அகஸ்ட் 2011 இல் இது போன்ற சிக்கலான சூழல் ஒன்று உருவாகியது. அமெரிக்கத் திறைசேரியானது நிர்ணயிக்கப்பட்ட கடன் உச்சவரம்பினைத் தொட்டுவிட, கடன் மதிப்பீட்டு முகவரமைப்பான ஸ்டான்டார்ட் அண்ட புவர், அமெரிக்காவின் கடன் பெறும் திறன் அளவினை ஒரு புள்ளியால் (notch) குறைத்து, சந்தை உலகில் பெரும் அதிர்வலைகளை தோற்றுவித்தது. அமெரிக்காவின் திறைசேரி முறிகளில், உண்டியல்களில், பெருமளவு பங்கினை வாங்கிக் குவித்திருக்கும் சீனா போன்ற நாடுகள், கடன் மதிப்பீட்டு முகவரமைப்புக்களின் தரவுகளை நம்பியே முதலீடு செய்வார்கள். என்பது பொதுவான விதி.

ஆகவே, ஒரு நாட்டின்கடன் அளவு உச்ச வரம்பிற்கும் அந்நாட்டிற்கான கடன் மதிப்பீட்டிற்கும் இடையே தீர்மான கரமான பொதுவான அம்சங்கள் இருப்பது புரிகிறது. அதிலும் கடன் பெறும் உச்சவரம்பினைத் தீர்மானிக்கும் முக்கிய காரணிகளாக அரசிறைப்பற்றாக்குறை வரவு-செலவு பற்றாக்குறை, சென்மதி நிலுவை என்பவற்றைக் குறிப்பிடுவது சாலப்பொருத்தம்.

அரசின் அத்தியாவசியச் செலவுகள் என்று பார்த்தால், சமூகப்பாதுகாப்புக் கொடுப்பனவுகள், தனியார் நிறுவனங்களுக்கான கடன்கள், விற்ற முறிகளுக்கான வட்டியும் முதிர்சட்சியடையும் போது செலுத்தும் முழுத்தொகை, பாதீட்டுக்கு ஒதுக்கும் நிதி, என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இருப்பினும் தனது நிர்வாகங்களுக்கு மூடுவிழாவினை அமெரிக்க அரசு நடாத்திக் கொண்டிருக்கையில், ஆசிய பங்குச் சந்தை அதிர்ச்சியடையவில்லை. அமெரிக்க டொலரின் மதிப்பு வீழ்ச்சியடைந்துள்ளது. இந்தியாவின் ரூபாய்நாணய பெறுமதியும் உயர்ந்துள்ளது. ஆனாலும், ஆப்கான் யுத்தத்தை அமெரிக்கா நிறுத்தப்போவதில்லை.

யுத்தம் என்பது, இரத்தம் சிந்தும் அரசியல் என்பார்கள். ஆனால், ஏகாதிபத்தியங்கள் ஆளும் இவ்வுலகில், யுத்தம் என்பது அரசியல்- பொருளாதார நலன்சார்ந்தது. நவீன ஆயுத உற்பத்தியும் அதற்கான சந்தையும் யுத்தங்களால் வளர்ச்சியுறுகின்றது.சந்தைக்காக யுத்தங்கள் உருவாக்கப்படுகின்றன. ஈரான் மற்றும் சிரியாவுடனான முறுகல் நிலை, சவூதி அரேபியா, குவைத், கட்டார், பஹ்ரேன் போன்ற நாடுகளின் நவீன ஆயுதக்கொள்வனவினை அதிகரிக்கும். பில்லியன் டொலர் கணக்கில் ஆயுத விநியோகம் நடக்கும்.

அண்மையில் ஈரான் காட்சிப்படுத்திய நவீனரக ஆளில்லாத தாக்குதல் போர்விமானம், சவுதியின் படைத்துறையில் புதிய அமெரிக்க போர் விமானங்களின் வரவினை எதிர்பார்க்கும். ஆனால், அவை இஸ்ரேலுக்கு வழங்கிய தரத்தில் இருக்காது. அது அரசியல்.

பெரும்பாலான ஏற்றுமதி உற்பத்திப் பண்டங்களில் ஆசியாவோடு போட்டிபோட முடியாவிட்டாலும், நவீனரக போர் விமானங்கள் மற்றும் ஏனைய போர்த்தளபாட விநியோகத்தில் அமெரிக்காவை மிஞ்ச இவர்களால் முடியவில்லை. உலக ஆயுதச் சந்தையில் மெரிக்காவின் வகிபாகம் அந்தளவிற்கு பலமாக இருக்கிறது. அதன் படைத்துறை கைத்தொழில் வளர்ச்சியானது, முதலாம் உலக யுத்த காலத்திலிருந்தே அதிகரித்தவண்ணம் உள்ளது. ஆகவே, அரச நிர்வாகம் மூடப்பட்டாலும், இது இயங்கிக்கொண்டுதானிருக்கும்.

இருந்தாலும், ஏகாதிபத்தியங் ஒன்றையொன்று விழுங்க முயன்று, உதிர்ந்துபோகும் என்கிற, புரட்சியாளர் லெனினின் கருத்துநிலை இன்னமும் உயிர்புடன் இருக்கிறது என்பதை 75 வது தடவையாக கடன் எல்லையை உயர்த்துப்போகும் உலக நாயகனின் இன்றையநிலை உணர்த்துகிறது.

-இதயச்சந்திரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த கோருவோம்- சுமந்திரன் எம்.பி.

(கொழும்பு)

**13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்திடம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தவுள்ளது.**

இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் நேற்றுக்காலை கொழும்பை வந்தடைந்தார்.

இந் நிலையில், அவர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்,

1987 இல் செய்து கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை உடன்பாட்டுக்கு அமைய, உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவும் அதற்கு அப்பாற்பட்ட தீர்வை வழங்குவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றும் படியும் இந்தியா வலியுறுத்த வேண்டும்.

தற்போது, வடக்கில் புதிய மாகாணசபை தெரிவு செய்யப்பட்டுள்ளது. அடுத்த கட்டமாக நாம், அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுப் பிரச்சினையை எழுப்புவோம்.

அண்மையில் உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் காணி அதிகாரங்கள் மத்திய அரசுக்கே என்று கூறியிருப்பது கவலையளிக்கிறது.

இந்நிலையில், இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்துடன் இன்று யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்தவுள்ள சந்திப்பு முக்கியமானது என்று தெரிவித்துள்ளார். (அ-2)

# 1038 மருத்துவர்களுக்கு நியமன கடிதங்கள்

(கொழும்பு)

மருத்துவ பயிற்சிகளை பூர்த்தி செய்த ஆயிரத்து 38 மருத்துவர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் இந்த வைபவத்தில் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நியமனக் கடிதங்களை வழங்கவுள்ளார்.

புதிதாக நியமிக்கப்படவுள்ள இந்த மருத்துவர்கள் நாடு முழுவதிலும் உள்ள வைத்தியசாலைகளில் நிலவும் மருத்துவர்களுக்கான வெற்றிடங்களைப் பூர்த்தி செய்யவுள்ளனர். (அ-2)

# தீவிபத்தில் சுமார் 330 ஏக்கர் காடு எரிந்து சாம்பலாகியது

மொனராகலை மாவட்டத்திலுள்ள வெல்லவாய, மலியத்தாவெல அரச வனப் பகுதியில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் சுமார் 330 ஏக்கர் வனப் பகுதி எரிந்து சாம்பலாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மொனராகலை மாவட்டத்திலுள்ள வெல்லவாய நகரிலிருந்து சுமார் மூன்று கிலோ மீற்றர் தொலைவிலுள்ள மலியத்தாவெல அரச வனப்பகுதியில் இனந்தெரியா தோரினால் வைக்கப்பட்ட திடீர் தீ விபத்தில் அப்பிரதேசத்திலுள்ள சுமார் 330 ஏக்கர் வரையான வனப்பகுதி எரிந்து சாம்பலாகியுள்ளதாக வெல்லவாய பொலிஸார் தெரிவித்தனர்.

இத் தீ விபத்தை வெல்லவாய இராணுவ முகாம் படையணியினர் மற்றும் வன அதிகாரிகள் உள்ளிட்ட பொது மக்களின் உதவியுடன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளதாக தெரிவித்த பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர். (அ-2)

# அரச சட்டங்களினால் சுயதொழில் முயற்சியாளர்களுக்கு பாதிப்பு

## *அமைச்சர் பசில் தெரிவிப்பு*

(கொழும்பு)

அரசாங்கத்தின் சட்ட திட்டங்களினால் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுவோர் அதிகமாக பாதிக்கப்படுவதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

சுயதொழில் மற்றும் சிறு கைத்தொழில்களை மேற்கொள்வோர் அரசாங்க சட்டங்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். சுய தொழில் முயற்சியில் ஈடுபடுவோரை ஊக்குவிக்கும் வகையில் அரசாங்கம் செயற் பட வேண்டும்.

குறிப்பாக மரபுக் கைத்தொழில்களில் ஈடுபடுவோர் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய நாடுகளில் மரபுக் கைத்தொழில்களில் ஈடுபடுவோரைப் பாதுகாக்க சட்ட திட்டங்கள் காணப்படுகின்றன.

மத்திய சிறிய உற்பத்திகளை மேற்கொள்வோர் தங்களது உற்பத்திகளைப் பதிவு செய்து கொள்ள 28 விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது.

இவ்வாறான கடுமையான சட்டங்களை அமுல்படுத்தாது இலகுவான முறையில் சட்ட திட்டங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார் .(அ-2)

# மாணவர்களுக்கு திரிபோஷா பிஸ்கட் வழங்கல் அறிமுகம்

கந்தானையிலுள்ள திரிபோஷா நிறுவனம் 90 வீதமான பிஸ்கட் உற்பத்தியை தற்போது மேற்கொள்கிறது. இது முன்னர் 60 வீதமாக இருந்தது.

இதனை 2014 முதல் 100 வீதமாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இரு திரிபோஷா பக்கெட்டுக்களுக்குப் பதிலாக நான்கு திரிபோஷா பக்கெட்டுக்கள் பயனாளிகளுக்கு வழங்கப்படும்.

இந்தப் போஷாக்கு பிஸ்கட்டை கந்தானை தொழிற்சாலையில் உற்பத்தி செய்வதற்கு ஆதரவளிக்க முன்னணி பிஸ்கட் உற்பத்தியாளர்கள் உறுதியளித்துள்ளனர். பிஸ்கட்டுக்கள் மாணவர்களுக்கு இலவசமாக பகிர்ந்து வழங்கப்படும்.

பாடசாலை மாணவர்களுக்கு எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு முதல் திரிபோஷா பிஸ்கட்டுக்கள் அறிமுகம் செய்யப்படும்.புதிய போஷாக்கு உணவாக மாணவர்களுக்கு இது அறிமுகம் செய்யப்படவுள்ளது. (அ-2)



அவுஸ்திரேலிய எயிட் பிரதி நிறுவனத்தினால் வட மாகாணக் கல்வித் துறையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் வடமாகாண கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போது அவுஸ்திரேலிய எயிட் (யூனிசெப்) பிரதிநிதிகளுடன் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்துரையாடுவதைப் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# கண்டெடுக்கப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் கணக்கெடுக்கப்பட்டவையே

## தேர்தல்கள் ஆணையாளர்

(கொழும்பு)

புத்தளம் புனித அன்ரூஸ் கல்லூரியில் கண்டெடுக்கப்பட்ட புள்ளடியிடப்பட்ட வாக்குச்சீட்டுகள் கணக்கெடுக்கப்பட்டவை என உறுதி செய்யப்பட்டுள்ளது.

நீதிமன்ற உத்தரவின்படி அந்த வாக்குச் சீட்டுகளின் எண்ணிக்கை கணிப்பீடு செய்யப்பட்டதாக தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதன்போது வாக்குகள் மீள எண்ணப்படவில்லை. வாக்குச் சீட்டுகளின் எண்ணிக்கை மாத்திரமே கணிப்பிடப்பட்டுள்ளன.

வாக்கெண்ணும் நிலையத்திலிருந்து காணாமற்போன வாக்குச் சீட்டுகளின் எண்ணிக்கையும் கண்டெடுக்கப்பட்ட வாக்குச் சீட்டுகளின் எண்ணிக்கையும் பெரும்பாலும் ஒன்றுக்கொன்று பொருந்துகின்றமை இதன்போது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

ஆயினும் அந்த வாக்குச் சீட்டுகளில் ஒரு தொகுதி காணாமற்போயுள்ளதுடன் அவற்றை பாடசாலை மாணவர்கள் எடுத்துச் சென்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

புத்தளம் மாவட்டத்திலிருந்து மாகாண சபை தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் முன்னிலையில் இந்த வாக்குச் சீட்டுகளின் எண்ணிக்கை கணிப்பிடப்பட்டது என்றார்.(அ)

# தடைகாண் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

அரசாங்க முகாமை உதவியாளர்கள் சேவையில் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடைப் பரீட்சைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ளன. இப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இன் நியமனம் பெற்றுள்ள அலுவலர்கள் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரர்கள் ஒரே அமர்வில் சகல பாடங்களுக்கும் தோற்றுவதாயின் 400 ரூபாவையும் ஒரு பாடத்துக்கு மட்டுமாயின் 200 ரூபாவையும் மாவட்ட அல்லது பிரதேச செயலகத்தில் அல்லது தபால் அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் ஒட்டி கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிட்டு திணைக்களத் தலைவரூடாக எதிர்வரும் நவம்பர் மாதம் 11 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக்கிளை, **இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்ல** என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

இவ் விண்ணப்பம் தொடர்பான மேலதிக விபரங்களை எதிர்வரும் 11 ஆம் திகதி வெளியாகும் வர்த்தமானி பத்திரிகையில் அல்லது வலம்புரி அலுவலகத்தில் பார்வையிடலாம்.(அ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.வருகை தரும் குர்ஷித் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்பார்

(யாழ்ப்பாணம்)

இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் இலங்கைக்கான தனது முதலாவது பயணத்தின் போது ஒரு நாள் விஜயமாக இன்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார்.

அவருடன் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் யஷ்வர்தன் குமார் சின்ஹா மற்றும் புதுடில்லியிலிருந்து வெளிவிவகார அமைச்சின் முதுநிலை அதிகாரிகளும் இந்திய ஊடக குழுவினரும் வருகை தரவுள்ளனர்.

வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தனது யாழ்ப்பாண விஜயத்தின் போது,

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியைச் சந்திப்பார். பின்னர் வடமாகாண சபையின் முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்டுள்ளமுன்னாள் நீதியரசர் க.வி.விக் னேஸ்வரனைச் சந்தித்து இருதரப்பு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடுவார்.

அதன் பின்னர் இந்தியாவின் இரண்டாம் கட்ட வீட்டுத் திட்டத்தை தெல்லிப்பழையில் பார்வையிடுவதுடன் பயனாளிகளுடன் கலந்துரையாடுவார்.

தனது விஜயத்தின் போது உதவித்திட்ட ஆவணம் வழங்கும் வைபவத்திற்குத் தலைமை தாங்குவார்.

இரண்டாவது இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் தலா 5 இலட்சத்து 50 ஆயிரம் இலங்கை ரூபா பெறுமதியான பண உதவியை இந்திய அரசிடமிருந்து பெற்று வீடுகளை கட்டி முடித்தவர்களில் சிலருக்கு வைபவத்தின்போது ஆவணங்களைக் கையளிப்பார்.

போரின் போது பாதிக்கப்பட்ட சிறிய வியாபார நிலைய உரிமையாளர்கள் சிலருக்கும் இவ் வைபவத்தில் ஆவணங்களைக் கையளிப்பார்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த மிகச் சிறிய மற்றும் சிறிய தொழில் முனைவோரில் ஆயிரத்து 230 பயனாளிகளுக்கு இந்திய அரசின் நிதியுதவிகள் 25 ஆயிரம் ரூபா முதல் 2 இலட்சம் ரூபா வரையான பண உதவி வழங்கப்படுகிறது. மொத்தமாக 91மில்லியன் இலங்கை ரூபா பெறுமதியான பண உதவி வழங்கப்படுகிறது. (அ-4)

## "பின் காலனியம்" கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தின் முன்னாள் பேராசிரியரும் மாக்ஸிய சிந்தனையாளருமான ந.முத்துமோகனின் பின் காலனியம் என்ற தலைப்பிலான கலந்துரையாடலொன்று இன்று பிற்பகல் 2 மணிக்கு கலைப்பீட புதிய கட்டட தொகுதியில் நடைபெறும்.

அதில் ஆர்வலர்களை பங்கு கொள்ளுமாறு யாழ்.பல்கலைக் கழக மெய்யியல்துறை தலைவர் கலாநிதிக.ஜகவிந்தன் அறிவித்துள்ளார். (அ)

## செயற்கை கடற்கரையை உருவாக்க நடவடிக்கை

(கொழும்பு)

வென்னப்புவையிலிருந்து நாத்தாண்டிய வரை செயற்கை கடற்கரையை உருவாக்க கடற்கரைப் பாதுகாப்புத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மாரவில பகுதியில் ஏற்படும் கடலரிப்பை கட்டுப்படுத்துவதே இதன் நோக்கம் என திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அனில் பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

ஆழ்கடலிலிருந்து பம்பிகள் மூலம் மணலை பெற்று செயற்கை கடற்கரையை உருவாக்குவதற்கு கடற்கரை பாதுகாப்புத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது. (அ-5)

## மாகாணசபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்-மாவை எம்.பி.

(சென்னை)

வடமாகாணசபை காணிப் பிரச் சினைக்கு தீர்வு வழங்க வேண்டுமென தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்ட அவர், இந்திய ஊடகமொன்றிற்கு மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

போர் இடம்பெற்ற காலத்தில் பறிக் கப்பட்ட காணிகள் உரிமையாளர்களிடம் மீளவும் ஒப்படைக்கப்பட வேண்டும். வடக்கு மக்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

போர் இடம்பெற்ற பிரதேசத்தை புனரமைக்குமாறு சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத் தங்களை பிரயோகித்து வருகின்றது.

மாகாணத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கு நேரடியாக பணத்தை பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் மாகாணசபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். அதற்கான சட்டமொன்றும் உருவாக்கப்பட வேண்டும்.

மக்களுக்கு சுயாட்சி அதிகாரங் கள் வழங்கப்பட வேண்டும். இரண்டு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளும் வகையில் அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டியது அவசியமானது.

இலங்கை மீனவர்களிடம் பாரிய படகுகள் கிடையாது. இந்திய மீனவர்கள் பாரிய படகுகளைக் கொண்டு சில நாட்கள் தங்கியிருந்து மீன்பிடியில் ஈடுபடுகின்றனர்.

இதனால் இலங்கை மீனவர் களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது.

இரு நாடுகளினதும் அரசாங் கங்கள் மீனவர் பிரச்சினைக்கு சிறந்த தீர்வுத் திட்டமொன்றை முன் வைக்க வேண்டும்.

இலங்கையின் தென் பகுதியில் தமிழ், முஸ்லிம் மக்களை இலக்கு வைத்து தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருவதாக மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார். (அ-2)




ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ரஜீவ விஜேசிங்கின் தொகுப்பில் உருவான தெறிப்பு படிமம் கவிதைத் தொகுப்பு நூல் இந்திய தேசிய புத்தக அறக்கட்டளை நிறுவனத்தால் யாழ். இந்திய துணை தூதரகத்தில் அண்மையில் வெளியிடப்பட்ட போது... (படம்:- எஸ்.ஆர்.கரன்)

## தொண்டமான் மற்றும் திகாம்பரம் ஆதரவாளர்களிடையே மோதல்

(கொழும்பு)

அமைச்சர் தொண்டமான் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் திகாம்பரம் ஆதரவாளர்களுக்கு இடையில் மோதல் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஆறுமுகன்தொண்டமானுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் திகாம்பரத்தின் ஆதரவாளர்களுக்கும் இடையில் மோதல் சம்பவமொன்று ஹற்றனில் பதிவாகியுள்ளது.

இச் சம்பவத்தில் இரண்டு பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாகாணசபைத் தேர்தல் வெற்றியைக் கொண்டாடும் நோக்கில் திகாம்பரம் ஆதரவாளர்கள் அலங்கரித்துக் கொண்டிருந்த போது அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் ஆதரவாளர்கள் அதற்கு எதிர்ப்பை வெளியிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ-2)

## போலி இந்திய 500 ரூபா நோட்டுகள் புழக்கத்தில்

### விழிப்பாக இருக்க வேண்டுகோள்

(கொழும்பு)

இந்திய 500 ரூபா போலி நோட்டுகள் இலங்கையில் புழக்கத்தில் இருப்பதாக இந்தியாவுடன் வர்த்தக தொடர்புகளை வைத்திருப்பவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே இதுபோன்ற போலி 500 ரூபா இந்திய நோட்டுகள் கொழும்பில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இங்கிருந்து இந்தியாவுக்கு செல்பவர்கள் சிறிதளவு இந்திய நோட்டுகளை எடுத்துச் செல்வதற்கு உத்தியோகபூர்வமாக அனுமதிக்கப்பட்டபோதிலும் அவை குறித்து இருநாடுகளின் சுங்க அதிகாரிகளும் பெரிதான அளவு பொருட்படுத்துவதில்லை.

எவ்வாறும் ஒருவர் இலங்கையிலிருந்து 500 ரூபா இந்திய போலி நோட்டுகளை எடுத்துச் சென்று அப்பாவித்தனமாக இந்தியாவில் அதனை பயன்படுத்த எத்தனிக்கும் போது பிடிபட்டால், அவர் பெரும் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருக்கும்.

ஆகவே, இந்தியாவுக்கு செல்லும் போது கைச்செலவுக்கு இந்திய நோட்டுகளை எடுத்துச் செல்பவர்கள் ஆயிரம் ரூபா நோட்டுகளை அல்லது 100 ரூபா நோட்டுகளை எடுத்துச் செல்ல வேண்டுமென்றும் 500 ரூபா நோட்டுகளைத் தவிர்க்க வேண்டுமென்றும் இலங்கை - இந்திய வர்த்தக தொழிலில் ஈடுபடுபவர்கள் எச்சரிக்கை செய்கிறார்கள்.

இந்திய நோட்டு மோசடி தொடர்பாக ஏற்கனவே இலங்கையில் புலன் விசாரணைகள் நடத்தப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. (அ-2)

## வாக்குச்சீட்டு மீட்கப்பட்டமை குறித்து விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

புத்தளம்- சென் அன்ரூஸ் பாடசாலையில் இருந்து வாக்குச் சீட்டுக்கள் மீட்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய அதிகாரிகள் குறித்த விசாரணை ஆரம்பமாகியுள்ளது.

வாக்குச்சீட்டு மீட்கப்பட்டமை குறித்து பல தரப்பட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் இது குறித்து பொலிஸ் மற்றும் தேர்தல் திணைக்களங்கள் நடத்தியவிசாரணைகள் முடிவுற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் மேலும் இது குறித்த விசாரணைகள் நேற்று ஆரம்பமாகியுள்ளன. தொடர்ந்து 30 நாட்களுக்கு இவை இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்ட பிரதித் தேர்தல் ஆணையாளர் தலைமையில் இவ் விசாரணை நடத்தப்படுவதோடு விசாரணை குழு நேற்று புத்தளம் பகுதிக்கு விஜயம் செய்துள்ளது. (அ-2)

## நவராத்திரி பூஜையில் கும்மியடித்தல் நிகழ்வு

கற்கோவளம் கும்பிமணல் முத்துமாரியம்மன் ஆலயத்தில் கடந்த 5ஆம் திகதி முதல் நவராத்திரி பூஜைகள் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இரவு பூஜைகளின் போது, தினமும் பாரம்பரிய முறையில் கும்மி அடித்தல் நிகழ்வு இடம்பெற்று வருகிறது.

அத்துடன் விஜய தசமியான 14 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று அதிகாலை வாழை வெட்டுத் திருவிழா இடம் பெறவுள்ளது. (அ-9-19)

## யாழ்.இந்துவின் பரிசளிப்பு விழா

(மானிப்பாய்)

யாழ்.இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா எதிர் வரும்11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு குமாரசுவாமி மண்டபத்தில் அதிபர் வீ.கணேசராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக, வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரும் கல்லூரியின் பழைய மாணவருமான, சி.சத்தியசீலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

பரிசளிப்பு விழாவில், கல்வி இணைப் பாடவிதான செயற்பாடுகள், விளையாட்டு போன்றவற்றில் சாதனை படைத்தவர்களுக்கான பரிசில்கள், பதக்கங்கள், விருதுகள் என்பனவும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளன. மாணவர்களுக்கான பரிசில்களை பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி இராஜ ராஜேஸ்வரி சத்தியசீலன் வழங்கி கௌரவிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விக்னேஸ்வரனின் பதவி ஏற்பும் குர்ஷித்தின் இலங்கை விஜயமும்

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சராக சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் நேற்றைய தினம் (07.10.2013) ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்வது தொடர்பில் வாதப்பிரதிவாதங்கள் எழுந்த போதிலும் விட்டுக்கொடுக்க வேண்டிய இடங்களில் விட்டுக்கொடுப்பது பெற வேண்டியதைப் பெற்றுக் கொள்வதற்கு உதவும் என்ற அடிப்படையில் ஜனாதிபதி முன்னிலையில் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் உண்ணாவிரதம் இருப்போம், தீக்குளிப்போம், எங்கே நடத்திப் பார்க்கட்டும். வடக்கு மாகாண சபைத் தேர்தலில் அரசுதான் வெற்றி பெறும் என்ற வீரப்பிரதாபங்கள் மத்தியில் தமிழரசின் ஆட்சித் தலைவராக சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் அலரிமாளிகையில் பதவிப் பிரமாணம் செய்தது, போருக்குப் பின்பான தமிழர்களின் மீள் எழுச்சிக் கட்டுமானத்தின் முதற்படி என்று கூறலாம்.

வடக்கு மாகாண சபைத்தேர்லை நடத்துகின்ற எண்ணம் ஜனாதிபதிக்கு அறவே இருந்ததில்லை. வடக்கு மாகாண சபைக்குத் தேர்தல் நடத்தினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே வெற்றிபெறும் என்பது அரசுக்குத் தெரிந்த விடயம். இலங்கையில் இருக்கக்கூடிய அத்தனை மாகாணசபை ஆட்சிகளும் தங்களின் பூரண கட்டுப் பாட்டுக்குள் இருக்கவேண்டும் என்பது ஆட்சியாளர்களின் பெரு விருப்பம்.

இந்நிலையில் வடக்கு மாகாண சபைக்குத் தேர்தல் நடத்தினால் அங்கு தமிழர்களின் ஆட்சி அமையும் என்பதும் அவ்வாறானதொரு சூழ்நிலையில் மாகாணசபைக்குரிய அதிகாரங்களை வடக்கு மாகாண சபை நிர்வாகம் கேட்கும் என்பதும் அரசுக்கு தெரிந்தவை என்பதால் வடக்கு மாகாண சபைத்தேர்தலை நடத்தாமல், இராணுவத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற ஒருவரை ஆளுநராகக் கொண்டு வடக்கின் நிர்வாகத்தை நடத்துவதே அரசின் நிலைப்பாடு.

அரசின் இந்த நிலைப்பாடு தோல்வியில் முடிந்துபோனது என்பதைத்தான் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களின் சத்தியப்பிரமாணம் உறுதிசெய்கின்றது.

### இந்திய வெளியுறவு செயலரின் வருகை

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு நடைபெறும்போது இந்திய வெளியுறவுச் செயலர் சல்மான் குர்ஷித் இலங்கைக்கு விஜயம் செய்வது முக்கியமான வரலாற்றுப் பதிவு.

பொதுவில் ஒரு நாட்டில் பொதுத் தேர்தல் நடைபெற்று அதன்மூலம் தெரிவு செய்யப்பட்ட அரசு அல்லது ஆட்சித் தலைவர் பதவியேற்கும் நிகழ்வில் அண்டைநாட்டுத் தலைவர்கள் பங்கேற்பது வழமை.

ஆனால், இங்கு வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வெற்றியீட்டி முதலமைச்சராகத் தெரிவுசெய்யப்பட்டவர் ஜனாதிபதிக்கு முன்பாகச் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்கும்போது இந்திய நாட்டின் வெளியுறவு அமைச்சர் குர்ஷித் அன்றைய தினமே இலங்கைக்கு வருகை தந்து ஜனாதிபதியை சந்திப்பதென்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சத்தியப்பிரமாணம் செய்கின்ற நாளில் இந்திய வெளியுறவுச் செயலர் இலங்கைக்கு விஜயம் செய்ததன் மூலம் [illegible]ரமான செய்திகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அதாவது, வடக்கு மாகாண சபைத்தேர்தல் என்பது இந்தியாவின் அழுத்தத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் அடிபணிந்து இலங்கை அரசு நடத்தியதாகும். எனவே, அந்த நிகழ்வு நடைபெறும் நாளில் இந்தியப் பிரதிநிதி ஜனாதிபதி மகிந்தவை சந்தித்து 13 ஆவது திருத்தச் சட்டமூலம் பற்றி கலந்துரையாடுவதன் ஊடாக இலங்கையை ஆட்டிவிக்கும் சக்தி தனக்குத்தான் உண்டு என்பதை இந்தியா உலகுக்கு நிரூபித்துக் காட்டுதல் ஒரு செய்தி.

இலங்கை அரசு எவ்வளவுதான் கர்ச்சித்தாலும் சீனாவுடன் எவ்வளவுதான் கைகோர்த்து நெருங்கி நின்றாலும் இந்தியாவை மீறி எதுவும் செய்யமுடியாது என்பதை பௌவ்வியமாக எடுத்துரைப்பது இன்னோர் செய்தி.

மற்றையது ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வு என்பது ஜே.ஆர் - ராஜீவ் ஒப்பந்தத்தில் எழுதப்பட்டதாகும். அந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக இருக்கின்றது.

எனவே, இனப்பிரச்சினைத் தீர்வு என்பது ஒரு பெரிய விடயமாயினும் அதற்கான முதற்கட்ட செயற்பாடாக வடக்கு மாகாண தமிழ் அரசை இந்தியா நோக்குகிறது.

எனவே வடக்கில் தமிழர்களின் அரசு அமைக்கப்படுகின்றபோது, அதன் ஆட்சித் தலைவர் பதவியேற்கும்போது இந்தியா இலங்கையில் பிரசன்னமாக இருப்பதானது, தொடர்ந்தும் இந்தியா தனது ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்தப் பாடுபடும் என்பதை வெளிப்படுத்துவதாகும்.

இதற்கு அப்பால் வன்னிப் போரில் இந்தியா நடந்து கொண்டமுறையால் ஈழத்தமிழர்களும் தமிழகத்தின் சோதரர்களும் இந்தியா மீது காழ்ப்புணர்ச்சி கொண்டுள்ளனர். இந்நிலைமை நீடிப்பதற்கு முற்றுப் புள்ளி வைப்பதாகவும் ஈழத்தமிழர்கள் மத்தியில் இந்தியா மீது நம்பிக்கைகளை ஏற்படுத்தும் வகையிலும் வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் சத்தியப்பிரமாண நாளில் இந்திய வெளியுறவு மந்திரி இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ளார் என்று பொருள் கூறிக்கொள்ளலாம்.

இவற்றை நாம் கூறும்போது மறுபக்கத்தில் சல்மான்குர்ஷித்தின் பிரசன்னம், சிங்கள பேரினவாத அமைப்புக்களுக்கு கடும் ரென்சனைக் கொடுக்கவே செய்யும். வடக்கில் தேர்தல் நடப்பதை ஒருகை பார்க்கலாம் என்று கூறிய பொதுபலசேனா, ஜாதிகஹெல உறுமய போன்ற அமைப்புக்கள், முட்டையிட்ட செம்பகப் பறவை தன் தலையை செட்டைக்குள் நுழைத்து நாணிக் கொக்கரிப்பது போலவே கொக்கரிக்கவேண்டும்.

கூடவே, நீங்கள் எவ்வளவு தான் கோஷம் போட்டீர்கள். தமிழர்களைப் பார்த்தீர்களா அவர்கள் தென்பகுதியில் அலரி மாளிகைக்கு வந்து ஜனாதிபதிக்கு முன்னாலேயே தங்கள் ஆட்சியை எடுத்துச் செல்கிறார்கள். ஆட்சிக்கு பழுது செய்தால் இந்தியா பார்த்துக் கொண்டிராது என்பதற்காகத்தான் இந்திய வெளியுறவு அமைச்சர் இங்கு வந்துள்ளார் என்ற செய்தி இப்போது தென்பகுதியில் மௌனமாக உணரப்படும்.

நாங்கள் விழுப்புண் அடைந்தவர்கள். ஆகவே மௌனமாக- அமைதியாக அண்டை நாட்டையும் அனுசரித்து எங்கள் உரிமையை வெல்வோம். அதற்காக நாம் எங்கள் ஆவேசங்களையும் உணர்ச்சிவசப்படுத்தல்களையும் கட்டுப்படுத்தும் உபவாசத்தை கடைப்பிடிப்பது மிகவும் அவசியம்.

- விதுரன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர்களுக்கு அதிகாரத்தை வழங்க சல்மான் குர்ஷித் வலியுறுத்த வேண்டும்

## பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் கோரிக்கை



(சென்னை)

**இந்திய வெளிவிவகார அமைச்சராக பொறுப்பேற்ற பின்னர், முதல்முறையாக இலங்கை பயணிக்கும் சல்மான் குர்ஷித், இலங்கைச் சிறையில் அடைக்கப் பட்டிருக்கும் மீனவர்கள் அனைவரையும் விடுதலை செய்வதுடன், அவர்களுக்கு சொந்தமான படகுகள் அனைத்தையும் திரும்ப ஒப்படைக்க வேண்டுமென இலங்கை அரசிடம் வலியுறுத்த வேண்டும். எதிர்வரும் காலங்களில் தமிழக மீனவர்களை அத்துமீறி இலங்கை கடற்படையினர் கைதுசெய்தால் மோசமான விளைவுகள் ஏற்படும் என்று எச்சரிக்கவும் வேண்டும் என பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் அறிக்கை யொன்றை வெளியிட்டுள்ளார்.

அவ் அறிக்கையில் அவர் மேலும் கூறியிருப்பதாவது,

இலங்கைக் கடற்படையினரால தமிழக மீனவர்களுக்கு இழைக கப்படும் கொடுமைகள் குறித்து மத்திய அரசிடம் பலமுறை வலியு றுத்தியும் எந்தப்பயனும் ஏற்பட வில்லை. கைது செய்யப்பட்ட தமி ழக மீனவர்களை விடுதலை செய்ய வேண்டும். அவர்களிடம் கடுமை யாக நடந்து கொள்ளக்கூடாது என்று கடந்த ஒகஸ்ட் மாதம் டில்லி பயணித்த இலங்கை வெளியுற வுத்துறை அமைச்சர் ஜீ.எல். பீரிஸிடம் பிரதமர் மன்மோகன் சிங் வலியுறுத்தினார்.

ஆனால், பிரதமரின் வார்த் தைகளுக்கு சற்றும் மதிப்பளிக்காத இலங்கை அரசு, தமிழக மீனவர் களை அதிக எண்ணிக்கையில் கைது செய்வது, படகுகளை பறி முதல் செய்வது உள்ளிட்ட நடவடிக் கைகளில் ஈடுபட்டுவருகிறது. இன்றைய நிலையில் கூட தமிழகத்தைச் சேர்ந்த 101 மீனவர்கள் இலங்கை சிறைகளில் வாடிக் கொண்டிருக கின்றனர். 33 படகுகளை இலங்கை அரசு பறிமுதல் செய்து நாட்டுடைமை யாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக் கிறது.

ஒருமுறை கைதாகி சிறைத்தண் டனை அனுபவித்த மீனவர்கள் இரண்டாவது முறையாக கைது செய்யப்பட்டால், அவர்களுக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்றும் இலங்கை அரசு எச்சரித்திருக்கிறது. இவை யெல்லாம் இந்தியாவின் இறை யாண்மைக்கு விடப்பட்டிருக்கும் சவால்கள் ஆகும்.

வெளியுறவு அமைச்சராக பொறுப்பேற்ற பின்னர் முதல்முறை யாக இலங்கை செல்லும் சல்மான் குர்ஷித் தமிழக மீனவர்கள் பிரச் சினை குறித்து இலங்கை ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ, வெளியு றவு அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் ஆகி யோருடன் பேச்சு நடத்த வேண் டும்.

இலங்கை சிறையில் அடைக் கப்பட்டிருக்கும் மீனவர்கள் அனை வரையும் விடுதலை செய்வதுடன், அவர்களுக்கு சொந்தமான படகு கள் அனைத்தையும் திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்று வலியுறுத்த வேண்டும். இனியும் தமிழக மீனவர்களை அத்துமீறி கைது செய்தால் மோசமான விளை வுகள் ஏற்படும் என்று எச்சரிக்கவும் வேண்டும்.

இலங்கையில் அண்மையில் நடைபெற்ற வடமாகாணசபைத் தேர்தலில் வெற்றி பெற்ற முன்னாள் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அரசு நேற்று பதவியேற் றுள்ள நிலையில், வடக்கு மாகாண சபைக்கு நிலம், பொலிஸ் உள்ளிட்ட எந்த அதிகாரமும் வழங்க முடி யாது என்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

அவரது இந்த பேச்சுக்கு சல் மான் குர்ஷித் நேரடியாக கண்ட னம் தெரிவிப்பதுடன், ஈழத் தமிழர் களுக்கு உண்மையான அதிகாரத்தை பெற்றுத் தரவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகி றேன் என அவர் தனது அறிக்கை யில் கூறியுள்ளார். (2)



துருக்கி நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட ஜனாதிபதி பிரணாப் முகர்ஜிக்கு, இஸ்தான்புல் நகரிலுள்ள இஸ்தான்புல் பல்கலைக்கழகத்தின் சார்பில் டாக்டர் பட்டம் வழங்கி கௌரவிக் கப்படுவதை படத்தில் காணலாம்.

# ரஷ்ய,சீன நாடுகளுக்கு மன்மோகன் பயணம்

## தலைவர்களுடன் ஒப்பந்தங்கள் கைச்சாத்து

பிரதமர் மன்மோகன்சிங் எதிர் வரும் 20 ஆம் திகதி முதல் ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளுக்கு சுற்றுப் பய ணம் மேற்கொள்கிறார்.

இதன்படி எதிர்வரும் 20ஆம் திகதி தொடக்கம் 22ஆம் திகதி வரை ரஷ் யாவில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் மன்மோகன்சிங், அந்நாட்டின் ஜனா திபதி விளாடிமிரைச் சந்திப்பார்.

இதன்போது இந்தியாவின் அணு சக்தி இழப்பீட்டு சட்டம், தொலைத் தொடர் புத் துறையில் ரஷ்ய முதலீட்டுக்கான பாதுகாப்பு ஆகியவை தொடர்பான அந்நாட்டின் கவலைகளுக்குப் பதில் அளிப்படவுள்ளது.

இரு நாட்டு அதிகாரிகள் நிலையில் அண்மையில் மொஸ்கோவில் நடை பெற்ற கூட்டத்துக்குப் பின்னர் அணு சக்தி இழப்பீடு விவகாரம், கூடங்குளம் அணுமின் திட்டத்தின் 3 மற்றும் 4- ஆவது யுனிட்களுக்கு ரஷ்ய அணுவுலை



களை விநியோகம் செய்வது தொடர் பான ஒப்பந்தம் ஆகியவற்றில் முன்னேற் றம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

அலைக்கற்றை ஏலம் தொடர்பான இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்கு முறை ஆணையத்தின் பரிந்துரை ளுக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள ரஷ்ய நிறு வனம், இதனால் தங்களது முதலீட் டுத் திட்டங்களில் பாதிப்பு ஏற்படும் எனத் தெரிவித்திருந்தது. இது தொடர்பாகவும் மன்மோகன்சிங் பேச்சுவார்த்தை நடத்துவார்.

மேலும், டில்லி-மும்பை தொழில் மேம்பாட்டுத் திட்டத்தில் ரஷ்யாவின் முத லீடு, மருந்து மற்றும் உரம் தொடர்பான துறைகளில் இந்தியாவுடனான கூட்டு ஒப்பந்தம் போன்ற அம்சங்களும் இரு தலைவர்களுக்கு இடையிலான பேச்சு வார்த்தையில் இடம்பெறும்.

மொஸ்கோவிலிருந்து எதிர்வரும் 22 ஆம் திகதி பிரதமர் மன்மோகன்சிங் சீனா பயணிக்கவுள்ளார்.

இதன்போது நதிநீர்ப் பிரச்சினை, இந்தியாவில் சீனாவின் முதலீடு, சுமீபத் திய எல்லையோர நிகழ்வுகள் குறித்து சீன பிரதமர் லீ கெகியாங்குடன் மன் மோகன் சிங் பேச்சுவார்த்தை நடத்துவார்.

இப் பேச்சுவார்த்தையின்போது, இரு நாட்டு இராணுவத்துக்கு இடை யிலான ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையில், எல்லைப் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் கையெழுத் தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவில் உத்தரப் பிரதேசம், குஜராத், தமிழ்நாடு, ஆந்திரபிரதேசம், கர்நாடகம் ஆகிய 5 மாநிலங்களில் சீன தொழில் பூங்காக்களை அமைக் கும் திட்டம் ஒன்றும் உள்ளது. சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்போல செயற்படும் இத்திட்டம் குறித்தும் சீன பிரதமருடன் மன்மோகன்சிங் பேச்சு வார்த்தை நடத்துவார்.

மேலும், பிரம்மபுத்ரா நதியில் சீனா 3 அணைகளைக் கட்டத் திட்ட மிட்டுள்ளமை தொடர்பாக இந்தியாவின் கவலையை பிரதமர் தெரிவிப்பார்.

சீனாவில் தலைமை மாற்றத்துக் குப் பின்னர், பிரதமர் மன்மோகன் சிங் அந்நாட்டுக்கு முதல்முறையாக மேற்கொள்ளும் பயணம் இது என் பது குறிப்பிடத்தக்கது. (2)

# ஈழத்தமிழர்களை பாதுகாக்க தவறிய காங்கிரஸை நீக்க வேண்டும்

## வைகோ தெரிவிப்பு



இலங்கையில் தமிழர்களை பாதுகாக்கத் தவறிய காங்கிரஸ் கட்சிக்கு நடைபெறவுள்ள பாராளு மன்றத்தேர்தலில்பாடம்புகட்ட வேண டும் என ம.தி.மு.க. பொதுச் செய லாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

அவர் குமரி மாவட்டம் திரு வரம்பு பகுதியில் நேற்று நடை பெற்ற ம.தி.மு.க. பிரமுகர் இல்ல விழாவில் கலந்து கொண்டார். அப் போது ஏராளமான தொண்டர்கள் திர ண்டு நின்று அவரை வர வேற்றனர்.

இதன்போது வைகோ பேசியதாவது,

இலங்கையில் தமிழர்களை பாது காக்க தவறிய காங்கிரஸ் கட்சிக்கு நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர் தலில் பாடம் புகட்ட வேண்டும். இதற்காக அனைத்து கட்சியினரும் ஒன்றிணைந்து போராட வேண்டும். கட்சிபாகுபாடின்றி அனைவரும் இந்த முயற்சியில் பங்கெடுக்க வேண்டும். நடைபெறவுள்ள பாரா ளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் கட்சியை ஆட்சியில் இருந்து அகற்ற கட்சி பாகுபாடின்றி அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும். இதற்காகத்தான் எங்கள் பயணத்தை தொடங்கியுள்ளோம்.

குமரி மாவட்டத்தில் மத்திய கூட் டுறவு வங்கியின் தலைவராக சும்பத் சந்திரா தேர்வு செய்யப்பட்டார். இதுவே இந்த மாவட்டத்தில் எங்களுக்கு கிடைத்த முதல் வெற்றியாக கருதி நடைபெறவுள்ள தேர்தலிலும் வெற் றியை ஈட்டுவோம் என்ற நம்பிக்கை யில் பயணத்தை தொடங்கியுள் ளோம். அனைவரும் ம.தி.மு.கவுக்கு ஆதரவு தரவேண்டும்.

மத்திய சி.பி.எஸ்.இ. பாடத்திட்ட தில் நாடார்களை இழிவுபடுத்தி எழு தப்பட்ட பாடத்தை அகற்றக்கோரி நடந்த போராட்டத்தில் ம.தி.மு.க. முன்னின்று முனைப்புடன் ஈடுபட்டது என்றார். அவர் இவ்வாறு கூறினார். (2)

# விண்ணில் பாய்ந்தது பிருத்வி-2

(பாலாசூர்)

ஒடிசா கடற்கரையில் பிருத்வி-2 ஏவுகணை சோதனை நடத்தப்பட்டது. அது 350 கி.மீ. தூரம் சென்று வெற்றிகரமாக இலக்கை தாக்கியது.

இந்திய இராணுவ ஆராய்ச்சி கழகம சார்பில் இந்தியாவிலேயே பிருத்வி ஏவு கணை தயாரிக்கப்படுகிறது. இந்த வரி சையில் தயாரிக்கப்பட்ட பிருத்வி-2 ஏவுகணை நேற்றுக்காலை சோதனை செய்து பார்க்கப்பட்டது. ஒடிசா மாநிலம், சந்திபூர் கடற்கரையில் இந்த சோதனை நடந்தது.

இராணுவ ரேடர்கள் மூலமாக ஏவு கணை செல்லும் பாதையையும் கண் காணிக்கும் வகையில், நவீன முறை யில் ... இராணுவ ... தெரிவித்தனர். இதற்காக வங்காள



விரிகுடா கடற்பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சோதிக்கப்பட்ட பிருத்வி-2 ஏவுகணை 500 கிலோ முதல் 1000 கிலோ வரை அணுகுண்டுகளை சுமந்து சென்று இலக்கை தாக்கி அழிக்க கூடிய திறன் படைத்ததாகும்.

ஏற்கனவே, கடந்த ஒகஸ்ட் மாதம் 12ஆம் திகதி குறித்த ஏவுகணை வெற் றிகரமாக சோதனை செய்து பார்க் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்த இலட்சியத்தை அடைய வீறுடன் உழைப் பனுக்கு சிறு குறைகள் உறுத்தாது.

~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www:valampurii.lk

# வடக்கு மாகாண சபையில் கட்சி சார்புக்கு இடம் கொடாதீர்கள்

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சராக சி. வி. விக்னேஸ்வரன் நேற்றைய தினம் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

தொடர்ந்து மாகாண சபை உறுப்பினர்கள் முதலமைச்சர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொள்ள, வடக்கு மாகாண சபை நிர்வாகம் தனது பணியை ஆரம்பிக்கும் என்பது பொது நடைமுறை.

பணியை ஆரம்பித்தல் என்பதற்குள் இருக்கக் கூடிய பொறுப்பாண்மையை மாகாண சபை உறுப்பினர்கள் உணர்ந்துகொண்டு செயற்படுவார்கள் என்று நம்பலாம். அதேநேரம் வடக்கு மாகாண சபை என்பது கட்சி அதிகாரங்களுக்கு உட்படாமல் செயற்பட்டால் மட்டுமே அதன் பணியால் தமிழ் மக்கள் நன்மை அடைய முடியும்.

அதாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பதற்குள் தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ ஆகிய ஐந்து கட்சிகள் இடம்பெற்றுள்ளன.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு அரசியல் கட்சியாக இன்னமும் பதிவு செய்யப்படவில்லை.

இதன் காரண்மாக தமிழ் மக்களின் பழம்பெரும் கட்சியாக இருக்கக்கூடிய தமிழரசுக் கட்சியில் தேர்தலில் போட்டியிடும் பொது இணக்கப்பாடு உண்டு. இவ்வாறான இணக்கப்பாடு இருந்தாலும் எதை எடுத்தாலும் கட்சிகளுக்கான ஒதுக்கீடு என்ற அதிகாரப் பகிர்வுப் போட்டி தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள் இருக்கவே செய்கிறது.

இதுதவிர, தமிழ் அரசியல் கட்சிகளின் போட்டி காரணமாக வடமாகாணத்திற்குள் பிரதேசவாதச் சிந்தனையை தூண்டிவிடும் இராஜதந்திர சூழ்ச்சிகளும் இடம்பெறவே செய்கிறது.

உண்மையில் இத்தல்கய போக்கு தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுப்பதற்குப் பாதகமாகவே அமையும்.

ஆகையால், தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் பெறும் அரசியல் கட்சிகள் என்ற விவகாரம் வடக்கு மாகாண சபையில் இம்மியும் இடம்பெறக் கூடாதென்பதே நம் தாழ்மையான கருத்து.

இலங்கை அரசு நடத்திய போரில் வீழ்ந்து போன எங்கள் தமிழ் இனத்தைத் தூக்கி நிறுத்தி; எங்களின் உரிமைகளை வென்றெடுப்பதே தமிழ் அரசியல் தலைமையின் இலக்கு எனில், ஐந்து கட்சிகளின் கூட்டு என்ற நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.

எனினும் எங்களிடம் இருக்கக்கூடிய ஒற்றுமையீனங்கள் – நம்பிக்கையீனங்கள் காரணமாக அதனைச் செய்யமுடியாதுள்ளது.

ஐந்து கட்சிகளும் தேர்தலில் தனித்தனியாகப் போட்டியிட்டால் முல்லைத்தீவில் ஐக்கியதேசியக் கட்சி பெற்ற வாக்குகளைக் கூட இக்கட்சிகளால் பெற முடியாது போகும்.

இந்த உண்மையைத் தெரிந்துதான் தமிழரசுக் கட்சியில் போட்டியிட்டவர்கள் தாம் சார்ந்த கட்சி எது என்பதை மருந்துக்கும் வெளிக்காட்டவில்லை.

எமது கட்சிக்கு மக்கள் மத்தியில் அதிக செல்வாக்கு உண்டு என்ற நம்பிக்கை இருந்திருந்தால், தமிழரசுக் கட்சியில் போட்டியிடும்.......... என்ற அமைப்பை சேர்ந்த எனக்கு வாக்களியுங்கள் என்று கேட்டிருக்கலாம்.

ஆனால், அதனைச் செய்வதற்கு யாருக்குமே திராணி இருக்கவில்லை. இதை நாம் கூறும் போது இல்லை இல்லை நாங்கள் தமிழரசுக் கட்சியில் போட்டியிடுவதென்ற தீர்மானத்தின் அடிப்படையில் தான் அவ்வாறு செய்துகொள்வில்லை என்று சம்மந்தப்பட்டவர்கள் கூறினால், அது மிகவும் நல்லது. இந்தக் கொள்கைகளைத் தொடர்ந்தும் பின்பற்றுங்கள் என்று நாம் கூறி அவர்களின் ஒற்றுமை உணர்வைப் பாராட்டலாம்.

ஆனால், நாம் அறிகின்ற செய்திகள் அத்தகையதொரு ஒற்றுமை இருப்பதாகத் தெரிவிக்கவில்லை. இருந்தாலும் பரவாயில்லை. ஏதோ ஒரு வகையில் நாங்கள் தலைவர்களாக இருக்க விரும்புகிறோம். அதற்கு உங்கள் அமைப்புகள் உங்களுக்கு உதவும். அந்த உதவிக்காக மட்டும் அந்த அமைப்புகளை வைத்துக்கொள்ளுங்கள்.

வடக்கின் மாகாண சபை நிர்வாகத்தில் கட்சி சார்புகளை மறந்து, தமிழர்களின் அரசு – தமிழர்களின் ஆட்சி என்ற சிந்தனையோடு செயற்படுங்கள். இது தமிழ் மக்கள் தொடர்பில் காத்திரமான தீர்மானங்களை எடுப்பதற்கு மிகப் பலமான சக்தியாக அமையும்.

# நடத்துநர் இல்லாமையால் பேருந்து சேவை நிறுத்தம்

## யாழ். மாநகரசபை முதல்வர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நாவாந்துறைப் பகுதியில் மாநகரசபையினால் மேற்கொள்ளப்பட்டு வந்த பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கு மட்டுமான பேருந்துச்சேவை முன்னறிவித்தலின்றி திடீரென இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதனால் பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் போக்குவரத்து நடவடிக்கையை மேற்கொள்ள முடியாமல் சிரமப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபைத்தேர்தல் நடைபெற்று முடிந்தவுடன் இந்தப் பேருந் துச்சேவை இடைநிறுத்தப்பட்டதனால் இது அரசியல் பழிவாங்கல் காரணமாகவே இருக்கலாம் என பிரதேச மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இலங்கை- இந்திய நட்புறவின் அடையாளமாக இந்திய அரசாங்கத்தினால் வடக்கு மாகாண ஆளுநரிடம் வழங்கப்பட்ட மேற்படி பேருந்தை யாழ். மாநகர சபையிடம் ஆளுநர் அன்பளிப்பாக வழங்கியிருந்தார்.

இந்நிலையில் யாழ்.நாவாந்துறை பொதுச்சந்தையை அண்மித்த பகுதி வரை யாழ். நகரத்திலிருந்து குறித்த பேருந்துச்சேவை காலையிலும் பிற்பகலிலும் இடம்பெற்றுவந்தது.

காலையில் 7.20 மணியளவில் யாழ். நாவாந்துறை பொதுச்சந்தைப் பகுதியிலிருந்து யாழ்.நகருக்கும் பிற்பகல் 2 மணியளவில் யாழ்.நகரிலிருந்து நாவாந்துறைப் பொதுச்சந்தை வரைக்கும் போக்குவரத்துச் சேவை நடைபெற்றிருந்தது.

இந்நிலையில் கடந்த வாரமளவில் யாழ்.மாநகரசபையில் பணிபுரிந்து வந்த தற்காலிக ஊழியர்கள் இடைநிறுத்தப்பட்டதையடுத்து இந்த பேருந்துச்சேவையும் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி பேருந்துச் சேவை இடைநிறுத்தப்பட்டமை தொடர்பாக யாழ்.மாநகரசபையின் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவிடம் வினவியபோது,

பேருந்துச்சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளமை உண்மைதான். யாழ். மாநகர சபையில் பணி புரிந்து வந்த தற்காலிக ஊழியர்கள் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டதனால் பேருந்துக்கு நடத்துநர் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இதுவே குறித்த பேருந்துச் சேவையை தற்காலிகமாக நிறுத்தக் காரணமாகும்.

அதேவேளை குறித்த பிரதேச மக்கள் முன்வந்து பேருந்துக்கான நடத்துநர் ஒருவரை ஒழுங்குபடுத்தி உதவினால் பேருந்துச் சேவையினை தொடர்ந்து மேற்கொள்ளமுடியும்.

பேருந்துச் சேவையை நடத்துவதற்கு யாழ்.மாநகரசபை தயாராகவே உள்ளது என்றும் பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண் டும் நடத்துநர் இல்லாத காரணத்தினாலுமே குறித்த பேருந்துச் சேவையை இடைநிறுத்தியதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-6)

# நவராத்திரி விழாவை முன்னிட்டு கோலப் போட்டி

(கோண்டாவில்)

நவராத்திரி தினத்தை முன்னிட்டு கோண்டாவில்வடக்குவாகீஸ்வரிசனசமூக நிலையத்தில் கல்வி வளர்ச்சிக் கழகமும் விளையாட்டுக்கழகமும் இணைந்து எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணி முதல் கோலப் போட்டி ஒன்றை கோண்டாவில் ஞான வைரவர் ஆலய மண்டபத்தில் நடத்தவுள்ளன.

இக் கோலப் போட்டி கீழ்ப்பிரிவில் தரம் 1 தொடக்கம் 5 வரையான மாணவர்கள் பூக்கோலமும் மத்திய பிரிவில் தரம் 6 தொடக்கம் 9 வரையான மாணவர்கள் புள்ளிக்கோலமும் மேற்பிரிவில் தரம் 10 தொடக்கம் உயர்தரம் வரையான மாண வர்கள் வர்ணக் கோலமும் போட வேண்டும்.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் குறித்த தினம் நேரடியாக வந்து கலந்து கொள்ளலாமென சனசமூக நிலையத்தினர் அறிவித்துள்ளனர். (அ-9)

# எச்சரிக்கை சுவரொட்டி

யாழ். கொக்குவில் பகுதியில் கலாசார சீரழிவுகளில் ஈடுபடுபவர்களுக்கான எச்சரிக்கை விடுக்கப்பட்டு துண்டுப் பிரசுரங்கள் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.

புலனாய்வு பிரிவினர் என்று உரிமை கோரப்பட்டு ஒட்டப்பட்டுள்ள இத் துண்டுப்பிரசுரத்தினால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

மேற்படி துண்டுப்பிரசுரத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

அன்பான இளைஞர்களே, பொது இடங்களிலும் அதாவது பொது மக்கள், பாடசாலை மாணவர்கள் ஒன்று கூடும் இடங்களிலும், மாணவ மாணவிகளுக்கு தொந்தரவு கொடுப்பவர்கள் தொடர்புடைய தகவல்கள் புலனாய்வுப் பிரிவினரிடம் கிடைக்கப்பெற்றுள்ளது.

இவர்கள் கலாசார சீரழிவுகளில் ஈடுபடுவதுடன், கட்டைப்பஞ்சாயத்திலும் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் அதனை உடனடியாக நிறுத்த வேண்டும். இல்லாவிடில் புலனாய்வுப் பிரிவினரால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். கொக்குவில் பகுதியில் உள்ள கே.கே.எஸ். வீதி மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ள இத்துண்டுப்பிரசுரங்கள் அனைத்தும் இரவோடு இரவாக ஒட்டப்பட்டுள்ளன. ஆனாலும் யாரால் இவை ஒட்டப்பட்டுள்ளது என்பது தெரியவரவில்லை. (செ-4)

# "அடையாள அரசியல்" விசேட உரை

யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப் பீடத்தின் ஏற்பாட்டில் **தென்னாசியாவில் அடையாள அரசியல்** எனும் தலைப்பில் மதுரை காமராஜர் பல்கலைக்கழக பேராசிரியர் பி. முத்துமோகன் இன்று பிற்பகல் 3-4 மணிவரை கலைப்பீட மண்டபத்தில் மாணவர்களுக்கு விசேட உரையாற்றவுள்ளார்.

இந்நிகழ்வு கலைப்பீட பேராசிரியர் பி. சிவநாதன்தலைமையில்நடைபெறவுள்ளது.

அரசியல் ஆர்வம் உள்ள அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (செ)

# நவராத்திரி கால சொற்பொழிவுகள்

கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரியால் நடத்தப்படும் நவராத்திரி கலை சிறப்புச் சொற்பொழிவுகள் நேற்று முதல் 11 ஆம் திகதி வரை தினமும் முற்பகல் 8.15 மணிக்கு கல்லூரியில் நடைபெற்று வருகிறது.

இதன்படி இன்றைய சொற்பொழிவை நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் ந.தேவராஜா வழங்கவுள்ளார். நாளைய தினம் கோப்பாய் ஆசிரிய கலாசாரை விரிவுரையாளர் அ.பௌணந்தி வழங்கவுள்ளார்.

தொடர்ந்து 10 ஆம் திகதி உடுப்பிட்டி இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியர் செ.பத்மராஜன், கரவெட்டி பிரதேச செயலர் த. அஜந்தகுமார் ஆகியோரும் 11 ஆம் திகதி வடமராட்சி வலய சேவைக்கால ஆலோசகர் சைவப்புலவர் சி.நவரத்தினம் ஆகியவர்களும் நவராத்திரி கால சொற்பொழிவுகளை வழங்கவுள்ளனர். (அ-5)

# பேசும் கொம்புகள் இசை நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

ஜேர்மன் கலாசார மையமும் யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையும் இணைந்து நடத்தும் **பேசும் கொம்புகள்** இசை நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

ஜேர்மனிய கொம்பு வாத்தியங்கள் மற்றும் இலங்கையின் கண்டிய, வன்னி பறை வாத்தியங்களின் கூட்டிணைவு இசை நிகழ்ச்சியாக நடைபெறவுள்ள இந்நிகழ்வில் இசைஞர்கள், இசையாசிரியர்கள், இசை மாணவர்கள், இசை மற்றும் கலை ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# நுளம்பு கட்டுப்பாட்டு வாரச் செயற்பாடு

தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு யாழ்.மாநகர சபையினால் முன்னெடுக்கப்படும் நுளம்புக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் நாளை புதன்கிழமை முற்பகல் 8 மணிமுதல் கொட்டடி மீனாட்சி சனசமூக நிலையப் பகுதியிலும் யாழ்ப்பாணம் யூபிலி மகப்பேற்று நிலையப் பகுதியிலும் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதன்போது மாநகரசபை சுத்திகரிப்பு பிரிவினரால் விசேட கழிவகற்றல் மற்றும் மருந்து விசிறல் செயற்பாடுகளும் மேற்கொள்ளப் படவுள்ளன. (அ-5)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

## சிவனை வணங்கத் தகுதி



❖ இரக்கம் உள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யக் கூடிய கைகள் ஆகிய இந்த மூன்றும் நமக்குத் தேவை.

❖ எழுந்திருங்கள். உழையுங்கள். இவ்வுலகில் நம் வாழ்வு எத்தனை நாள்? இந்த உலகில் தோன்றியதன் அறிகுறியாக வாழ்நாளில் ஏதேனும் சாதித்துவிட்டுச் செல்லுங்கள். அவ்வாறு செய்யாவிடில் மரங்களுக்கும், மனிதர்களுக்கும் என்ன வேறுபாடு?

❖ வாழ்வில் நன்மை பெற வேண்டுமானால் முதலில் வாழும் தெய்வமாகிய மனித வடிவம் கொண்ட ஒவ்வொருவருக்கும் சேவை செய்து வழிபடுங்கள்.

❖ தொண்டு செய்ய விரும்பினால், சுயநலம், புகழ், பெருமை, ஆசை இவற்றை மூட்டை கட்டி கடலில் எறிந்து விட்டு வாருங்கள்.

❖ ஏழைகள், பலமற்றவர்கள், நோயாளிகள் இவர்களிடம் சிவனைக் காண்பவனே, சிவனை உண்மையில் வணங்குபவன் ஆவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்து வேகப் பந்துவீச்சாளர் ஸ்டீவன் ஹார்மிசன் ஓய்வு



இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்டீவன் ஹார்மிசன், சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றார். இந்த முடிவை அவர் ஞாயிற்றுக்கிழமை அறிவித்தார்.

34 வயது நிரம்பிய ஹார்மிசன், இங்கிலாந்து அணிக்காக டெஸ்ட் போட்டி களில் 226 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக 2004ஆம் ஆண்டு 12 ஓட்டங் களுக்கு 7 விக்கெட்டுகளை வீழ்த்தி அனைவரின் கவனத்தையும் தன் பக்கம் ஈர்த்தார். அன்றுமுதல், வேகப்பந்து வீச்சில் தனிமுத்திரை பதித்து வந்தார்.

9 ஆண்டுகளாக இங்கிலாந்து அணிக்கு விளையாடிய ஹார்மிசன், டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் முதலி டத்தையும் வகித்தது குறிப்பிடத்தக்கது

# ஜப்பான் டெனிஸ்; டெல் பெட்ரோ சம்பியன்

ஜப்பான் திறந்த டெனிஸ் போட்டியில் கனடாவின் மிலோஸ் ரயோனிக்கை வென்று கிண்ணத்தைக் கைப்பற்றினார் ஆர்ஜென்டீனாவின் ஜுவான் மார்டின் டெல் போட்ரோ.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் இப்போட்டியின் இறுதிச்சுற்று கடந்த ஞாயிற் றுக்கிழமை நடைபெற்றது. இதில், போட்ரோ 7-6, 7-5 என்ற நேர் செற்களில் வென்றார்.

இந்த ஆட்டத்தில் ரயோனிக் ஒரு செற்றைக் கூட இழக்கவில்லை. அத்துடன், 64 ஏஸ்களை அடித்து போட்ரோவுக்கு கடும் நெருக்கடி அளித்தார். இருப்பினும், போட்ரோவின் அனுபவம், நெருக்கடியிலிருந்து மீண்டு வெற்றி பெற உதவியது.



இந்த வெற்றி குறித்து போட்ரோ கூறுகையில்,

"சிறப்பு வாய்ந்த வெற்றி. ஒவ்வொரு முறையும் ரயோனிக் ஏஸ்களை அடித்து நெருக்கடியை ஏற்படுத்தினார். அதனால், எனது வாய்ப்பு வரும் வரை பொறுமையுடன் காத்திருந்தேன். ரயோனிக் போன்ற வீரர் களுக்கு எதிராக ஆக்ரோஷமாக விளையாட வேண்டும்" என்று தெரிவித்தார். இந்த வெற்றியின்மூலம் போட்ரோ ரூ. 8.6 கோடி ரொக்கம் பரிசாகப் பெற்றார்.

போபண்ணா ஜோடி சம்பியன்: இப்போட்டி யின் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா- பிரான்ஸின் ரோஜர் வேஸ்ஸலின் ஜோடி சம்பியன் பட்டம் வென்றது.

இறுதி ஆட்டத்தில் போபண்ணா ஜோடி 7-6, 6-4 என்ற நேர் செட்களில் பிரிட்டனின் ஜேமி முர்ரே-அவுஸ்திரேலியாவின் ஜான் பீர்ஸ் ஜோடியை வீழ்த்தியது. இதன் மூலம் இந்த சீசனில் போபண்ணா பெற்ற இரட்டயர் பட்டங்களின் எண்ணிக்கை இரண்டாக உயர்ந்தது.

# கொரிய கார்ப்பந்தயம்; வெட்டல் சம்பியன்!



பார்முலா 1 (எஃப்1) கார் பந்தய போட்டி யின் கொரிய கிராண்ட்ப்ரீ பட்டத்தை ரெட் புல் அணி வீரர் செபாஸ்தியன் வெட்டல் வென்றுள்ளார்.

எஃப்1 கார்ப்பந்தயத்தின் 14ஆவது சுற்றான கொரியா கிராண்ட்ப்ரீ, கொரியா வின் இயோன்கம் நகரில் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

தகுதிச்சுற்றுகளின் அடிப்படையில் வெட்டல், கொரிய கிராண்ட்ப்ரீ பந்தயத்தை முதல் வரிசையில் இருந்து தொடங்கினார்.

இதில் வெட்டல் 1 மணி நேரம் 43 நிமி டங்கள் 13 விநாடிகளில் பந்தய தூரத்தைக் கடந்து முதலிடம் பிடித்தார். அவரைத் தொடர்ந்து வந்த லோடஸ் ரினால்ட் அணி யின் கிம்மி ராய்க்கோனன் 2ஆம் இடத்தை யும், லோடஸ் ரினால்ட் அணியின் ரோமைன் க்ரோஸ்ஜென் 3ஆம் இடத்தையும் பிடித் தனர்.

இதுவரை நடைபெற்ற 14 கிராண்ட்ப்ரீ போட்டிகளில் 8இல் வெட்டல் சம்பியன் பட்டம் வென்றார். அதனால், 272 புள்ளிகளு டன் புள்ளிகள் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார். அவருக்கு அடுத்த படியாக ஃபெர் னாண்டோ அலோன்சா 195 புள்ளிகளுடன் 2ஆம் இடத் தையும், கிம்மி ராய்க்கோனன் 167 புள்ளிக ளுடன் 3ஆம் இடத்தையும் பிடித்தனர்.

எஃப்1 கார்ப் பந்தயத்தின் அடுத்த சுற்று ஜப்பானில் ஜப்பான் கிராண்ட்ப்ரீயாக நடைபெற உள்ளது. இன்னும் 5 சுற்றுகள் மட்டுமே உள்ள நிலையில், வெட்டல் 2013 ஆம் ஆண்டுக்கான கிண்ணத்தை வெல்ல பிரகாசமான வாய்ப்பு உள்ளது. 2010ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக 3 ஆண்டுகள் எஃப்1 சம்பியன் பட்டத்தை வெட்டல் வென் றது குறிப்பிடத்தக்கது.

# லா லிகா காற்பந்து தொடரில் ரியல் மாட்ரிட் வாகை

லெவான்டே அணிக்கு எதிரான லா லீகா காற்பந்து தொடரின் லீக் போட்டியில் கடைசி நிமிடத்தில் கோல் அடித்த, கிறிஸ்டியானோ ரொனால்டோ ரியல் மாட்ரிட் அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

ஸ்பெயினில் லா லிகா காற்பந்து தொடர் நடைபெற்று வருகிறது. இதன் லீக் போட்டியில் ரியல் மாட்ரிட், லெவான்டே அணிகள் மோதின. போட்டியின் முதல் பாதியில் இரு அணி வீரர்களின் கோல் முயற்சியும் பலிக்கவில்லை.

தொடர்ந்து இரண்டாவது பாதியில் எழுச்சிகண்ட லெவாண்டே அணிக்கு, பாபா தயாவரா (57ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். இதற்கு ரியல் மாட்ரிட் அணியின் செர்ஜியோ ராமோஸ் (61) பதிலடி கொடுத் தார். தொடர்ந்து லெவான்டே அணியின் நாபில் (86) மற்றொரு கோல் அடித்தார். இதற்கு ரியல் மாட்ரிட் வீரர் ஆல்விரோ (90) கடைசி நிமிடத்தில் பதிலடி கொடுக்க, போட்டி சமநிலையை எட்டியது. விறுவிறுப்பாக நடைபெற்ற கூடுதல் நேரத்தில் ரியல் மாட்ரிட் அணியின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ (90+4) ஒரு கோல் அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தார். முடிவில், ரியல் மாட்ரிட் அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

பார்சிலோனா அபாரம்:

மற்றொரு போட்டியில் பார்சிலோனா அணி, ரியல் வல்லாடாயிட் அணியை 4-1 என்ற கோல் கணக்கில் வென்றது. வல்லா டாயிட் அணிக்கு ஜாவி (10ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். பார்சிலோனா அணிக்கு அலெக்சிஸ் (14, 64), சேவி (52), நெய்மர் (70) ஆகியோர் கோல் அடித்தனர். மற்றொரு போட்டியில் எல்சி அணி, ஸ்பானியால் அணியை 2-1 என வீழ்த்தியது. மற்றொரு போட்டியில் ரியல சோசிடெட் அணி, ரேயோ வலேகெனோ அணியிடம் 0-1 என தோல்வியடைந்தது.

# ரி-20 போட்டிகளில் இருந்து சச்சின், டிராவிட் ஓய்வு

இந்திய கிரிக்கெட் அணியின் ஜாம்பவான் களான சச்சின் டெண்டுல்கரும், ராகுல் டிராவிட்டும் 20 ஓவர் போட்டி களில் இருந்து விடைபெற்றுள்ளனர்.

டில்லியில் நேற்றுமுன்தினம் சம்பியன்ஸ் லீக் இறுதிப் போட்டி நடைபெற்றது. இதில் மும்பை இந்தி யன்ஸ் அணி, ராஜஸ்தானை வீழ்த்தி சம்பியன் பட்டம் பெற்றது. இந்தப் போட்டியுடன் இந்திய அணியின் நம்பிக்கை நட்சித்திரமும், மும்பை இந்தியன்ஸ் அணி யின் வீரருமான சச்சின் டெண்டுல்கர் ஓய்வு பெற்றார். அவர் ஏற்கனவே ஐ.பி.எல். தொடரில் இருந்து ஓய்வுபெற்றுவிட்டார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியுடன் அவர் 20 ஓவர் கிரிக்கெட்டில் இருந்து முழுமையாக விடைபெற்றார். அவர் ஆட்டம் இழந்து வெளியே றியபோது ரசிகர்கள் எழுந்து நின்று கைதட்டியும், கரவொலி எழுப்பி யும் பிரியாவிடை கொடுத்தனர். அத்துடன் மும்பை வீரர்களும் இருபக்கமும் அணி வகுத்து நின்று அவருக்கு மரியாதை கொடுத்தனர்.


இதேபோன்று மற்றொரு ஜாம்பவானாகிய 40 வயதான ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் அணித்தலைவர் ராகுல் டிராவிட்டுக்கும் தமக்கு இதுவே கடைசி 20 ஓவர் தொடர் என்று கூறியிருந்தார். அவரும் இப்போட்டியுடன் ஓய்வு பெற்றார்.

அவர் இந்த தொடரில் 48 ஓட்டங்கள் மட்டுமே எடுத் திருந்தார். டிராவிட் வெளியேறியபோதும் அவருக்கு ராஜஸ்தான் ரோயல்ஸ் வீரர்கள் மரியாதை தெரிவித்து விடைகொடுத்தனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## வடக்கு முதல்வரின் சத்தியப்பிரமாண நிகழ்வுப் பதிவுகள்








# மாகாண சபை பிறந்த குழந்தை!

**-இரா சம்பந்தன்-**

போருக்கு பிந்தைய சமூகத்தில் தமிழ் மக்களுக்கு உடனடியாக கவனிக்கப்படவேண்டிய பல தேவைகள் இருக்கும் நிலையில், அந்தத் தேவைகளை பூர்த்தி செய்ய, ஒரு அரசியல் தீர்வு அவசியம், இதை அடைய இலங்கையின் மத்திய அரசுடன் ஒரு நல்லுறவும் அவசியம், எனவே தான் ஒரு சுமுகமான சமிக்ஞையைத் தரும் வண்ணம், வட மாகாண முதல்வராகத் தேர்வு செய்யப்பட்டுள்ள சி.வி.விக்னேஸ்வரன், ஜனாதிபதியிடம் பதவிப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

விக்னேஸ்வரன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் சத்தியப் பிரமாணம் செய்துகொள்வது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளேயே இருந்த சர்ச்சை பற்றி குறிப்பிட்ட சம்பந்தன், முதலமைச்சராகத் தேர்வு செய்யப்பட்டவர் ஜனாதிபதியிடம் பதவி பிரமாணம் ஏற்பதில் பெரிய உள்ளர்த்தம் பார்க்கவேண்டிய அவசியம் இல்லை, அவர்கள் பதவிப்பிரமாணத்தை எங்கு செய்து கொண்டாலும், இதே வாசகத்தைத் தான் பயன்படுத்தவேண்டும் என்றார்.

இலங்கையில் மத்திய அரசுடன் மோதி மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுவது கடினமாக இருக்கும், ஏனென்றால், மாகாண சபை தற்போதுதான் பிறந்த ஒரு குழந்தை, அது வளரவேண்டும் என்று கூறிய சம்பந்தன், மாகாண சபையை நடத்துவதற்கு ஒரு அலுவலகக் கட்டிடம் கூட இல்லாத யதார்த்தத்தை நினைத்துப் பார்க்க வேண்டும் என்றார்.

ஆனால் இந்த நல்லெண்ண சமிக்ஞையை சிங்கள அரசியல் தலைமை சரியாக ஏற்றுக் கொண்டு, தமிழர்களுக்கு சரியான தீர்வைத் தராவிட்டால், அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு அவர்களே பொறுப்பு என்றார் சம்பந்தன். (செ-11)

# வடக்கு முதலமைச்சருக்கு ஜனாதிபதி பிள்ளையார் பரிசு

வடமாகாண முதலமைச்சராக சி.வி விக்னேஸ்வரன் நேற்று காலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். சத்தியப்பிரமாண வைபவம் நிறைவடைந்ததும் வடமாகாண முதலமைச்சருக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மரத்தினால் செய்யப்பட்ட அழகிய பிள்ளையார் சிலை ஒன்றினை அன்புப் பரிசாக வழங்கியுள்ளார்.

இந்தப் பரிசினை சற்றும் எதிர்பார்க்காத முதலமைச்சர் சந்தோஷமடைந்ததாகவும் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தவர்கள் தெரிவித்தனர். (செ-11)

# அம்பாறையில் நிலநடுக்கம்

அம்பாறை, பாணமவில் 4.5 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளதாக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகம் தெரிவித்துள்ளது.

கடலுக்கடியில் 400 கிலோமீற்றர் தூரத்திலேயே இந்த நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளதாகவும் அந்த பணியகம் அறிவித்துள்ளது.

நேற்று பிற்பகல் வேளையிலேயே இந்த நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் நிலநடுக்க அபாயம் இருப்பதாக புவியியல் வல்லுநர் திசாநாயக்க கடந்த ஞாயிற்றுக்கிழமை எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இலங்கையில் கடலுக்கு அடியில மிகப் பெரிய வெடிப்பு ஏற்பட்டிருப்பதால் நிலநடுக்க அபாயம் இருப்பதாகவே புவியியல் வல்லுநர் திசாநாயக்க எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இலங்கை புவியியல் பேராசிரியர் சி.பி.திசாநாயக்க, இலங்கையின் கடல் பகுதி மற்றும் நிலநடுக்கங்கள் பற்றி ஆராய்ச்சி நடத்தி வருகிறார்.

இலங்கைக்குரிய பூமி பகுதியில சுமார் 500 முதல் 600 கிலோ மீற்றர் தூரத்தில் தெற்கு கடலில் பூமிக்கு அடியில் பாரிய வெடிப்பு ஏற்பட்டு வருவதாக அவர் கூறியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையின் தெற்கு மற்றும் தென்மேற்கு திசையில் புதிய புவி அடுக்கு உருவாகி வருவதால் இந்த வெடிப்பு ஏற்பட்டு வருகிறது என்றும் அவர் எச்சரித்துள்ளார். (செ-11)

# ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக்கிண்ணம் யாழ். ஜொனியன்ஸ் முதலிடம்




ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணத்திற்கான யாழ் சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ் மாவட்டத்தில் சிறந்த அணித் தெரிவில் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் அணி 134.4 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகம் 134.4 புள்ளிகளுடன் முதலாவது இடத்திலும், மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழகம் 107.5, ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் 90.6, கே.சீ.சீ.சீ விளையாட்டுக் கழகம் 86.4, சென்றல் விளையாட்டுக் கழகம் 83.3, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் 79.9, சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் 74.5, ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக்கழகம் 70.8, திருநெல்வேலி கிரிக்கெட் கழகம் 60.1, கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக்கழகம் 51.5, ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம் 41.8, அரியாலை சென்றல் விளையாட்டுக் கழகம் 40.2, பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகம் 38.5, ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக் கழகம் 38.3, நியூஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் 37.4, திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ. 30.5, யூனியன்ஸ் விளையாட்டுக்கழகம் 29.5, விக்ரோறி விளையாட்டுக் கழகம் 25.2, சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் புளூஸ் 16.2, யங்ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் 11.1, மானிப்பாய் பரிஸ்விளையாட்டுக் கழகம் புளூஸ் 1.6 புள்ளிகளைப் பெற்று 2 முதல் இறுதியிடங்களை வகிக்கின்றன.

# த.தே.கூ - குர்ஷித் சந்திப்பு!

இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்திற்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று மாலை கொழும்பில் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத் தலைவர் இரா. சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ சுமந்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதிகளும் நேற்று மாலை இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான குர்ஷித்தை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுநல...

கொழும்பில் நடக்கவுள்ள பொது நலவாய நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளுமா என்று செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இருந்தபோதிலும், இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் சார்பில் தான் அதில் கலந்துகொள்வேன என்று அவர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள குர்ஷித், வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்"டன் கூட்டாக செய்தியாளர் சந்திப்பு ஒன்றை கொழும்பில் நடத்தினார். அங்கு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கில் நடந்த தேர்தல் மூலம் அங்குள்ள மக்களுக்கு ஒரு நல்ல எதிர்காலத்தை ஏற்படுத்தும் என்று தான் நம்புவதாகவும் அவர் கூறினார்.

அத்துடன், அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு மூலமும், தமிழ் மக்கள் உட்பட அனைத்து மக்களை மேம்படுத்துவதன் மூலமும் ஒரு அரசியல் தீர்வையும், தேசிய நல்லிணக்கத்தையும் இலங்கை விரைவாகக் காணமேம் என்று இந்தியா அழுத்தம் கொடுத்து வருகின்றது என்றும் அவர் கூறினார்.

இரு நாட்டு மீனவர் இடையேயான விவகாரத்தைப் பொறுத்தவரை இரு நாட்டு மீனவர் சமூகங்களும் தொடர்ந்து பேச்சு நடத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

சம்பூரில் அனல் மின்நிலையத்துக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட உள்ளதாகவும், இலங்கையில் மும்மொழி தேசிய திட்டம் ஒன்றுக்கான ஒப்பந்தமும் கைச்சாத்திடப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை வடக்கில் இந்திய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் வீடமைப்புத் திட்டம் மற்றும் ரயில் பாதை அமைப்புத் திட்டம் ஆகியவற்றை தான் ஆராயவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (செ-11)

## அரசோடு ஒத்...

என்னுடைய பணி அனைத்து மக்களுக்கும் உரித்தானது. ஆகையினால் எக்காரணம் கொண்டும் எவ்விதமான பாரபட்சத்தையும் நான் காட்டமாட்டேன்.

உதவி, அபிவிருத்தி என்பன அனைத்து பிரதேசங்களுக்கும் ஒரே மாதிரியே முன்னெடுக்கப்படும். ஆனால், அந்தந்த உதவிகள் உரியவர்களுக்கும் உரிய பிரதேசத்திற்கும் கிடைக்க வேண்டுமானால சம்பந்தப்பட்டவர்கள் அரசாங்கத்துடன் சுமுகமாக நடந்துகொள்ள வேண்டும்.

எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது அரசாங்கத்துடன் ஒத்துழைத்து நடந்துகொள்ளுமானால் அபிவிருத்தி, மேம்பாடுகள் வழமை போல் சுமுகமாக நடைபெறும் என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-11)

## தாமரை பறி...

சிறுமியே சம்பவத்தில் உயிரிழந்தவராவார்.

அச்சிறுமியின் சகோதரர்களான அபிஷேக் தில்ஷான் (வயது 13) மற்றும் உமயங்க தில்ஷான் (வயது 10) ஆகிய இருவருமே காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தனது தாயாருடன் வாவியில் நீராடச் சென்ற இச்சிறுவர்கள், தாமரைப் பூ பறிக்க முற்பட்ட போதே நீரில மூழ்கியுள்ளனர் என்று பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் மாமடு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-250)

# இந்.தூத.பாதுகாப்பு ஆலோசகர் கோத்தபாயவுடன் நேற்று சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான இந்திய உயரஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோசகராக சேவையாற்றிய நிலையில் பணிகாலம் நிறைவடைந்து நாடு திரும்ப உள்ள கப்டன் சுமிட் கபூர் நேற்று பாதுகாப்புச் செயலாளர கோத்தபாய ராஜபக்ஷவை பாதுகாப்பு அமைச்சில் சந்தித்தார்.



இரு அதிகாரிகளுக்கும் இடையிலான இந்த சந்திப்பில் பாதுகாப்பு விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப் பட்டுள்ளது.

சந்திப்பின் இறுதியில் இருவரும நினைவு பரிசுகளை பரிமாறிக் கொண்டதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை உலக உணவுத் தட்டத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் இஸ்மையில் ஒமர் நேற்று பாதுகாப்புச் செயலாளரை பாதுகாப்பு அமைச்சில் சந்தித்தார்.

குறுகிய நேரம் நடந்த இந்த சந்திப்பில் இருதரப்பு முக்கியத்துவமிக்க விடயங்கள் மட்டுமின்றி உணவு பாதுகாப்பு, உணவை களஞ்சியப்படுத்துவது உள்ளிட்ட விடயங்கள் குறித்து பேசப்பட்டதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (செ-11)

## கைக் குண்டு...

அதனைச் சுற்றி ஆபத்து ஏற்படாத வகையில் வாகனத்தின் ரயர்களை அடுக்கி வைத்தனர்.

இதன் பின்னர் மேற்படிச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் கைக்குண்டினை அங்கிருந்து மீட்டுச் சென்றுள்ளனர்.

எனினும் மீட்கப்பட்ட கைக்குண்டு எங்கிருந்து வந்தது என்பது தொடர்பில் இதுவரைக்கும் எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை.

மேலும் கைக்குண்டு மீட்கப்பட்ட பகுதியில் பொதுமக்கள் வழமை போல் சுமுகமாக நடமாடித்திரிந்தனர். அதுபோல் அப்பகுதியில் உள்ள இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் கட்டத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றதுடன், பாடசாலை மாணவர்களும் வழமைபோல் பாடசாலைக்கு சென்றுள்ளனர்.

ஆனாலும் அச் சந்தர்ப்பங்களின் போது அங்கு கைக்குண்டு இருந்ததை யாராலும் இனங் காணவில்லை. இருந்த போதும் 11 மணியளவிலேயே எதிர் பாராத வகையில் சிறுவன் ஒருவனாலேயே மேற்படிக் கைக்குண்டு இனங்காணப்பட்டுள்ளது. இதன் பின்னரே இராணுவம் மற்றும் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு அகற்றபபட்டது.

இதனால் மேற்படி கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் அனைத்து தரப்பினர்களிடத்திலும் பெரும் சந்தேகம் எழுந்துள்ளது. (செ-4,6)

## அரசாங்கத்...

மாலை சந்தித்து பேசிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும போதே அவர் இதனை கூறினார். அங்கு கருத்து வெளியிட்ட அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் ஊடாக தேசியப் பிரச்சினை தொடர்பில் ஒருமித்த முடிவை எட்ட முடியும்.

அதனால்தான் அரசியல் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்த நாடாளுமன்ற தெரிவுகுழுவில் கலந்து கொள்ளுமாறு அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தொடர்ந்தும் அழைப்பு விடுத்து வருகிறது.

எனினும் கூட்டமைப்பு தெரிவுக் குழுவில் பங்குபற்றுவதை நிராகரித்து வருகிறது. இது தேசியப் பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதை தாமதப்படுத்தும் என அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டார். (செ-11)

## இனங்களுக்கிடையேயான...

அடிப்படையிலும் கடமையாற்றும்படி அவர்கள் எனக்கு ஆணை வழங்கியுள்ளார்கள். தூரநோக்கு எமது தனித்துவத்தை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

அதனை அடைய நாம் எமது கடந்த காலப் போராட்டங்கள், அரசியல் அணுகுமுறைகள், அனுபவங்கள் யாவற்றிலிருந்தும் பாடங்களைக் கற்றே முன்னேற வேண்டி உள்ளது.

இது சம்பந்தமாக இனங்களுக்கிடையே எழுந்துள்ள சந்தேகங்களை அகற்றுவது காலத்தின் தேவையாக அமைந்துள்ளது.

அதன் ஒரு அலகாகவே நாட்டின் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்யத் தீர்மானித்தோம். எமது செயற்பாடு ஐக்கிய இலங்கைக்குள்ளேயே நாம் அரசியல் தீர்வொன்றை எதிர்பார்க்கின்றோம் என்ற எமது மனோநிலையை எடுத்துக் காட்டக் கூடியதாய் அமைந்துள்ளது.

போருக்குப் பின்னரான எமது மக்களின் தேவைகளை காலதாமதம் இன்றி பூர்த்தி செய்வதான கிட்டிய நோக்கை உதவுவதாகவும் எமது செயற்பாடு அமைந்துள்ளது. சிங்கள மக்கள், பாதிக்கப்பட்ட எமது தமிழ் பேசும் மக்களின் வாழ்க்கையில வடிவை ஏற்படுத்த தம்மாலான சகலதையும் தமது பிரதிநிதிகள் மூலம் செய் வார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

உள்ளக சுயநிர்ணயம் ஒரு நாட்டை பிரிவுபடுத்தாமல் ஒற்றுமைப் பாதையில் கொண்டு செல்லக் கூடும் என்ற உண்மையை எமது சிங்கள சகோதர, சகோதரிகள் தமது அரசியல் வாதிகளுக்கு இடித்துரைக்க முன்வர வேணடும்.

சிங்களமொழியும் பாரம்பரியங்களும் சிங்கள மக்களுக்கு எந்த அளவு முக்கியமோ அதே அளவு எமது மொழியும் எமது பாரம்பரியங்களும் எமக்கும் முக்கியம் என்பதை சிங்கள மக்கள் உணர்ந்து செயலாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

இங்கு வன்முறைக்கு இடமில்லை. வலோத்காரத்திற்கு இடமில்லை. புரிந்துணர்வு ஒன்றே எம்மை சமாதானத்தையும் சகோதரத்துவத்தையும் நோக்கிச் செல்ல வழிவகுக்கும்.

எனவே என்னுடைய இன்றைய செயற்பாடு இரு இன பொது மக்களையும் ஒன்றுபடுத்த உறுதுணையாக அமைவதாக, இறைவன் ஆசி சகலருக்கும் கிடைப்பதாக! என்று அவ் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (செ-11)

# மரண அறிவித்தல்



## சின்னப்பொடி தங்கத்துரை (ஜே.பி.)

(வ.பி.போ. சபையின் ஓய்வுபெற்ற சாலைப் பரிசோதகர், யாழ். கோண்டாவில் சாலை)

யாழ். வடமராட்சி அல்வாய் வடக்கு தெகனையைப் பிறப்பிடமாகவும் ஆவரங்கால் மற்றும் திருகோணமலை லிங்கநகரை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பொடி தங்கத்துரை (வ.பி.போ.சபையின் ஓய்வுபெற்ற சாலைப் பரிசோதகர், யாழ்.கோண்டாவில் சாலை) 07.10.2013 திங்கட்கிழமை அதிகாலை திருகோணமலையில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலம் சென்றவர்களான சின்னப்பொடி கண்ணகை தம்பதிகளின் அருமை மகனும் காலம் சென்ற க.முருகேசு (அதிபர்) மற்றும் கமலவேணி தம்பதியரின் பெறாமகனும், காலம் சென்ற செல்லர் தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் திருமதி இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் காலம் சென்றவர்களான கந்தசாமி, அருளானந்தம், புனிதவதி மற்றும் தர்மநாதன் (கிளிநொச்சி) ஆகியோரின் அருமைச் சகோதரரும், இந்திராவதி (லண்டன்) இந்திராதேவி, கந்தவரோதயன் (சுவிஸ்), இராஜவரோதயன் (அதிபர், யாழ். தோப்பு அருள்நந்தி வித்தியாலயம், அச்சுவேலி) இந்திரோதயன் (லண்டன்) ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும், கேசவன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், கட்டிடங்கள் திணைக்களம், திருகோணமலை), Dr.சபேசன் (பல்மருத்துவ நிபுணர், கனடா) வாகீசன் (ஆசிரியர், தி.சிறிசண்முகா இந்து மகளிர் கல்லூரி, திருகோணமலை), ஆனந்தி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வனிதை (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - நகர சபை, திருகோணமலை), வத்சலா (கனடா), Dr. நிகேதா (ஆயுர்வேத வைத்தியர், நகர சபை திருகோணமலை), முரளிதரன் (பொறியியலாளர்- லண்டன்) ஆகியோரின் பிரியமிகு மாமனாரும்.

துரைராசா, காலஞ்சென்ற செல்வேஸ்வரி மற்றும் யோகேஸ்வரி, செல்வராசா (ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனரும். அபிநயன், அக்சயன், காருண், ஓவியா, கவின், வியாசன், வைசாலி, கருணி, கரிஸ், சேரன், நரேன் ஆகியோரின் நேசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.10.2013 புதன்கிழமை காலை 8.30 மணிக்கு திருகோணமலை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வடமராட்சி அல்வாய் வடக்குக்கு எடுத்துச் செல்லப்பட்டு இளங்கோ சனசமூக நிலையத்தில் அஞ்சலிக்காக பிற்பகல் 3.30 மணிக்கு வைக்கப்பட்டு அல்வாய் தெற்கு இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் :
குடும்பத்தினர்

தொலைபேசி : 071 8275 392, 077 61 45072

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.